


University of Jaffna
238.341
ARU
162579(AR; Main)

Donated by PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*from*

# UDAYA JEWELLERS

*Dealers in Genuine Gold Ornaments*

53, 55, SEA STREET,

COLOMBO-11.

Phone: 25745

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

# நாவலர் நூற்றாண்டு

238.341
ARY
AR



UNIVERSITY OF JAFFNA
LIBRARY

Donated by:-
PROF. K. KAILASAPATHY

ARCHIVES

## நினைவு விழாச் சிறப்பிதழ்

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

## 1979

162579

162579

கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில்
28-10-1979ல் நடைபெற்ற நாவலர் நினைவு
நூற்றாண்டுச் சிறப்பு விழாவின்போது
வெளியிடப்பெற்றது.

University of Jaffna
162579
Library

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

↓

↓

VANCON HARDWARE STORES

17, ABDUL JABBAR MAWATTA,

COLOMBO-12.

Phone : 31625

Grams : VANCON

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவர்
முன்னைநாள் நீதியரசர் :

## திரு. வீ. சிவசுப்பிரமணியம்

அவர்களின்

# செய்தி

UNIVERSITY OF JAFFNA LIBRARY

சைவமும் தமிழும் புராதனமானவை; கீர்த்தியும் சிறப்புங் கொண்டவை. பல எதிர்ப்புக்களுக்கும் இன்னல்களுக்கும் இவை காலத்துக்குக்காலம் முகங் கொடுத்திருக்கின்றன. அந்நியர் படையெடுப்பு, ஆதிக்க அடக்குமுறை, சுதேசியச் சூழ்ச்சி முதலியன வரலாற்றில் பல தடவை இவற்றை அழிக்க முயன்றும், எல்லா ஆபத்துக்களையும் தாண்டித்தமிழும் சைவமும் வளர்ந்து கொண்டேயிருக்கின்றன. இறைவனின் பூரணமான திருவுள்ளமும், அவனருள் பெற்ற மெய்த் தொண்டர்களின் பணிகளும் சிவநெறியையும் செந்தமிழையும் செழித்தோங்கிச் சிறப்புறச் செய்துள்ளன எனலாம்.

எமது இலங்கைத் திருநாட்டில் சைவத்துக்கும் தமிழுக்கும் சென்ற நூற்றாண்டில் ஏற்பட விருந்த பேராபத்திலிருந்து இவற்றைக்காத்தளித்தவர் நாவலர்பெருமான். அவர் புரிந்த பணிகளினால் சைவம் புத்துயிர் பெற்றுப் புதுவேகத்துடன் வளர்ந்தது; தமிழ் மொழி செந்தமிழாகச் சிறப்புப் பெற்றுச் செழித்தது; கல்வி, கலாசாரத்துறைகள் எழுச்சி பெற்றன. தமிழ் மக்களிடம் மறுமலர்ச்சியை ஏற்படுத்திப் புதுயுகத்தைத் தோற்றுவித்தவர் நாவலர்பெருமான். அந்நிய ஆட்சிக் காலத்தில் அவர் புரிந்த பன்முகப்பட்ட பணிகள் இந்நாட்டின் அரசியல் விடுதலை இயக்கம் பின்னர் தோன்றுவதற்கு முன்னோடியாக அமைந்திருந்ததனால் அவர் வரலாற்று நாயகராக – தேசியப் பெரியாராகவும் இன்று உயர்ந்து நிற்கின்றார்.

நாவலர் பெருமானின் கீர்த்தியும் சிறப்பும் என்றும் நிலவிட – எங்கும் நிறைந்திட பொருத்தமான நினைவுப் பணிகளைப் புரிவதற்காகவும், அவரின் இலட்சியக் கனவுகளின் ஒரு பகுதியையாவது நிறைவு செய்வதற்காகவும் நிறுவப்பெற்றதே எமது சபை. இந்நோக்கங்களுக்காக எமது சபை சென்ற ஒரு தசாப்தமாக மேற் கொண்டு வரும் முயற்சிகளை எல்லோரும் அறிவர். சிரமங்கள், நெருக்கடிகளின் மத்தியிலும் நினைவு நூற்றாண்டை ஆறு மாச காலத்துக்குத் தொடர்ந்து கொண்டாட நிகழ்ச்சிகள் பலவற்றை ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றோம். சோதனைகளின் மத்தியில் சாதனைகள் புரிந்தவராயிற்றே நாவலர் பெருமான்! அதனால் எமது முயற்சிகளும் இறுதியில் இனிதே நிறைவேறும்.

நம் மக்களிடம் நல்லெண்ணத்தையும், வளமான வாழ்வுக்கான நம்பிக்கையையும் ஏற்படுத்தவல்ல ஒளிவிளக்காகிய நாவலர் பெருமானுக்கு இவ்வேளையில் அஞ்சலி செலுத்துவோமாக!

நாவலர் நாமம் வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமானை
நினைவுகொள்ளும் நாளெல்லாம்
இனிய நாள் என்பது
கவிமணி தேசிய விநாயகம்பிள்ளையின்
கருத்து :

"புண்ணிய நாள் நாளெல்லாம் போற்றுநாள் செந்தமிழ்த்தாய்
எண்ணியெதிர் பார்க்கும் இனிய நாள் — மண்ணுலகில்
மேவுயர் சைவம் விளங்கிடுநாள் ஆறுமுக
நாவலர்கோன் தோன்றிய நல்நாள்"


# E. K. K. & CO.

84, New Moor Street,
Colombo-12.
Telephone : 36653
Cable : "NAGAJOTHI"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MESSAGE
## from
# Hon'ble R. Premadasa
### Prime Minister
### Sri Lanka

Srila Sri Arumuga Navalar, like Anagarika Dharmapala, occupies a memorable place in the history of this country. At a time when foreign forces, with government support, were actively at work to wean away the people of this country from their national heritage - their language and their religion - he raised his strong voice of protest and galvanized the people to resist them. While he opposed certain aspects of Christian missionary work he was not anti-Christian. His translation of fhe Bible into Tamil is regarded by competent scholars as a work of exceptional merit.

The Anagarika and Navalar adopted similar methods in their spiritual service. But besides this there is a yet greater similarity between these two leaders in their respective life works. Though they both addresscd themselves to special and limited audiences, there is implicit in their utterances a wider message, a larger purpose. In a sense their messages are for the entire people of Sri Lanka; indeed to all mankind. It is to this aspect of their great endeavours that we should, I think, pay particular attention today. Whilst working for one's own people one must work for humanity as well; for, in truth, the two are interchangeable.

I trust the noble ideals for which Navalar dedicated his life will serve as an inspiration not only to the present generation in this country, but also to future generations.

I wish the Centenary Celebrations organised by the Navalar Sabhai, all success.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் நினைவிருக்கட்டும்

சுத்தமான சுவையான

★ தித்திக்கும் இனிப்பு வகைகள்

★ சிற்றுண்டிகள்

★ உணவு வகைகள்

முதலியவற்றிற்கு
தலைநகரின் தலைசிறந்த உணவு விடுதி

# கிறீன்லன்ட்ஸ் ஹோட்டல் லிமிட்டெட்

பம்பலப்பிட்டி

தொலைபேசி : 85592
81986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பிரதமர்

# கௌரவ ஆர். பிரேமதாசா

## அவர்களின் வாழ்த்துச் செய்தி

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானும் அநகாரிக தர்மபாலாவைப் போன்று இந்நாட்டு வரலாற்றிலே நீங்கா இடத்தை வகிக்கின்றார். அந்நிய நாட்டு சக்திகள் அரசாங்க ஆதரவுடன் இந்நாட்டு மக்களின் பாரம்பரிய உரிமைகளை—அவர்களது மொழிகளை—அவர்களது மதங்களை—அவர்களிடமிருந்து பறித்தெடுக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த ஒரு கால கட்டத்திலே அவர் தனது பலத்த கண்டனக்குரலை எழுப்பி மக்களை உற்சாகமூட்டி அவர்களைத் தட்டி எழுப்பினார். கிறிஸ்தவ மதப் பிரசாரகர்களது நடவடிக்கைகளின் சில அம்சங்களை அவர் எதிர்த்த போதிலும், கிறிஸ்தவ மதத்துக்கு விரோதமான ஒருவராக அவர் விளங்கவில்லை. அவரது விவிலிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பானது, துறைபோகக் கற்றறிந்த வல்லுனர்களால் புறநடையானதொரு தகைமையாகவே கருதப்படுகின்றது.

அநகாரிகாவும் நாவலரும் தமது ஆத்மீகத் துறைகளிலான சேவைகளில் ஒரே வகையான விதிமுறைகளையே கைக்கொண்டொழுகினர். ஆனால் இவற்றைவிட, மேலாக இவ்விரு பெரியார்களுக்குமிடையே தத்தமது வாழ்க்கைப் பணிகள் தொடர்பில் விசாலமானதோர் ஒப்புமை உள்ளது. இவ்விருவரும் சிறப்பு வாய்ந்த மட்டுப்படுத்தப்பட்ட அரங்கங்களிலேதான் தம்மை வெளிப்படுத்தியபோதிலும் அவர்களது பரந்துபட்ட செய்திகளைக் கொண்ட விசாலமான நோக்குள்ள பேருரைகள் அர்த்தாபத்தியமானவையாக விளங்குகின்றன.

ஒரு வழியில் அவர்களது செய்திகள் முழு இலங்கை மக்களுக்கும், உண்மையிலே முழு மானிட வர்க்கத்துக்குமானவையாகவுள்ளன. இவ் அம்சத்தின் பொருட்டுத்தான் நாம் இன்று விசேட கவனம் செலுத்தவேண்டுமென நான் கருதுகிறேன். தனது சொந்தமக்களுக்குப் பணியாற்றும் அதே வேளையில் மனித சமுதாயத்துக்காகவும் ஒருவர் உழைக்க வேண்டுமென்ற உண்மையின் பாற்பட்டு இவ்விருவரும் ஒருவரோடொருவர் ஒப்புவமையுள்ளவர்களாவர்.

நாவலர் பெருமான் தனது வாழ்க்கையை அர்ப்பணித்த உன்னத இலட்சியங்கள், இந்நாட்டின் தற்போதைய சந்ததியினருக்கு, மாத்திரமின்றி எதிர்காலச்சந்ததியினருக்கும் உயிர்நாடியாகத் திகழும் என நான் நம்புகிறேன்.

நாவலர் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நூற்றாண்டு விழா, சகல வெற்றிகளையும் பெற நான் வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாவலர் பிறந்தார் தமிழ் தப்பிப்பிழைத்தது**
**அவர் பிறந்திலரேல் நிலைமை என்னவாகியிருக்கும் ?**

*நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்*
*சொல்லு தமிழெங்கே? சுருதியெங்கே ?—எல்லவரும்*
*ஏத்து புராணுகமங்களெங்கே ? ப்ரசங்கமெங்கே ?*
*ஆத்தனறிவெங்கே ? அறை.*

**சி. வை. தாமோதரம் பிள்ளை**


# பி. ரி. கே. இரத்தினம் அன் கோ.

இறக்குமதியாளரும், பிரபல வர்த்தகரும்

**இல : 37, டாம் வீதி,**

**கொழும்பு.**

தொலைபேசி : *3 3 4 6 1*

## கிளை : ஜீவானி என்டர்பிரைஸ்

இல : *(367) 605, 607*, கே. கே. எஸ். வீதி,

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி : *8 2 2 7*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாராளுமன்ற
மாண்புமிகு சபாநாயகா

# அல்ஹாஜ் எம். ஏ. பாக்கிர் மாக்கார்

## அவர்களின் ஆசிச் செய்தி

நறுந்தமிழும் நற்பண்பும் நமக்கீந்து நாநிலமும் போற்றவைத்த நாவலர் பெருமானின் நினைவு நூற்றாண்டு விழாவிலே அவ்வள்ளல் காட்டிய அறவாழ்வு எம் எல்லோருக்கும் நல்வாழ்வை அளிக்க வேண்டுமென்று நான் முதற்கண் என் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்வு கொள்கிறேன்

நமது நாட்டிலே வழி வழியாக மொழி கற்பித்து, சமயம் கற்பித்துத் தந்த அறிஞர்கள், பெரியார்கள் பலர். இவர்கள் எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி மக்களை நல்வழிப் படுத்தினார்கள். இந்நாட்டுப் பௌத்த மக்களின் கல்வி அபிவிருத்திக்காக அனகாரிக தர்மபாலாக்களும், முஸ்லீம் மக்களின் கல்வியின் மேம்பாட்டுக்காக சித்திலெப்பைகளும் ஆற்றிய அரும்பணியைப் போன்று இந்த வரிசையிலே நல்லைநகர் நாவலர் பெருமான் ஆற்றிய சேவையையும் முதன்மைத்தாகிறது. நாவலர் வகுத்த தமிழ்ப் புலமைத்திட்டம் அலாதியானது. அவர் உருவாக்கிய சமய மறுமலர்ச்சி போற்றற்குரியது.

நாம் அறிந்துகொண்ட நாவலர் தமிழினதும் சைவ சமயத்தினதும் சுதந்திரத்துக்காக அந்நியருடன் போரிட்ட ஒரு பெரும் போர் வீரர். பெரும் பதவி என்ற தூண்டிலினால் நாவலரைப் பிடித்து மடக்கிவிடலாம் என்று முயற்சித்த அந்நியர்கள் இறுதியில் அவருக்கு அடிபணிந்தார்கள். நாவலரின் நாவன்மை கண்டு அவர்கள் கதிகலங்கினார்கள். சுருங்கக்கூறின் தமிழும் சைவமும் இவரால் மேன்மையுற்றது.

நல்ல கல்வியால் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கலாம் என்ற திடமான நம்பிக்கை நாவலர் உள்ளத்திலே மேலோங்கி நின்றது. தமிழ் மொழியின் தனித்துவத்தை வசன நடையாகவும் கவிதை வடிவாகவும் அமைத்து நூல்களை எழுதினார் நாவலர். இலங்கையில் மாத்திரமன்றி இந்தியாவிலும் கல்லூரிகளை நிறுவி சைவ சமயத்தின் பழம்பெரும் தொன்மையை மாணவரின் பிஞ்சு உள்ளத்தில் புகுத்தி அவர்களைத் தெய்வீக வாழ்வு வாழும் ஒழுக்கசீலர்களாக்கினார் இந்தப் பெரியார்.

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகின் வாக்கினில் ஒளி உண்டாகும்" என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க, தூய்மையான உள்ளத்தோடு உறுதியான மனத்தோடு நாவலர் பேசிய பேச்சுக்கள் மக்களிடையே தனி மதிப்பையும் பெரு நம்பிக்கையையும் ஊட்டின.

இவ்வாறு தமிழ் காத்து, சமயம் காத்து, எழுத்தறிவித்த அந்த நல்லவரின் சேவையை அவர் விட்ட இடத்திலிருந்து நடத்துவதற்குச் சங்கற்பம் பூண்டுள்ள நாவலர் சபையினரின் நற்பணி, நல்நோக்கத்தோடு நடைபெற நான் வாழ்த்துகிறேன்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் காட்டும் தமிழ்

''தமிழ் என்றால் அன்பு. உயர் கருத்துக்களை அன்பு நடைப்படுத்திச் சொன்னால் அதற்குத் ''தமிழ்'' என்று பெயர். பயன் தரும் சொற்களைத் தெரிந்து அன்பு நடைப்படுத்திச் சொல்லப் பயிலுங்கள் கல் மனிதரும் வெண்ணெயாய் விடுவார்கள்''

—ஆறுமுகநாவலர்.

## எம். பி. வீரவாகு அன் கோ.

குருணாகல் — யாழ்ப்பாணம்

## M. P. VEERAVAGU & CO.

KURUNEGALA — JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசஅபிவிருத்தி, தமிழ் மொழி அமுலாக்க,

இந்து சமய, இந்து கலாசார அமைச்சர்

மாண்புமிகு

# திரு. செல்லையா இராசதுரை

## அவர்களின் செய்தி

பல்லவ மன்னர் ஆட்சிக் காலத்தில் இந்துசமய, இந்துக் கலாசார மறுமலர்ச்சிக்கு வித்திட்ட விடிவெள்ளிபோன்ற காரைக்கால் அம்மையார், நாயன்மார், ஆழ்வார்கள் வரலாற்றில் வகிக்கின்ற இடத்தினை யாழ்ப்பாணத்து நல்லைநகர் ஆறுமுக நாவலரும் பெற்றுள்ளார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை, இன்று இந்து சமய, இந்துக்கலாசாரத் துறையில் தொண்டாற்றும் நாம் அனைவரும் நாவலர் பெருமான் கடைப்பிடித்த மரபினை ஐயம் திரிபறக் கற்றுக் கற்றபின் அதற்குத்தக நிற்றல் கடன். இம்மரபின் சிறப்பினையும் நாவலர் பெருமான் கட்டிக்காத்த கந்தபுராணக் கலாசாரத்தின் நுணுக்கங்களையும் அவ்வப் போது தம் கட்டுரைகள் வாயிலாகவும், பிற வழிகளாலும் விளக்கித் தருவதற்குப் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களை யாம் பெற்றது எம் பாக்கியமே.

நாவலர் பெருமானின் ஆக்கங்களுள் உயர்நிலைப் பள்ளிமாணவர்களுக்கும், பல்கலைக் கழக மாணவர்களுக்கும் உகந்தனவற்றைத் தேர்ந்தெடுத்து நூலாக வெளியிடுவது வேண் டத்தக்கது. அதே வேளை அன்னாரின் சைவ வினாவிடை, பாலபாடம் போன்ற அரிய ஆக்கங்களும் பல்லாயிரக் கணக்கில் வெளிவந்து அவற்றுள் அடங்கிய கருத்துக்கள் நம் நாட்டில் மட்டுமன்றி இந்துசமயம் பரவியுள்ள பிஜித்தீவு, மொறீசியசு நாடு, இந்தியா போன்ற இடங்களிலும் பரவும் வகை செய்தல் வேண்டும்.

வேள்வியில் உயிர்ப்பலியிடுதலை அறவே வெறுத்தவர் நாவலர் பெருமான். இதன் பொருட்டுச் சிதம்பரத்திலும்கூடத் தில்லைவாழ் அந்தணருடர் வாதிட்டு வேள்வியைத் தடுத்து நிறுத்தியவர். நாவலர் நினைவு நூற்றாண்டுவிழா நடாத்தும் இவ்வேளை சமயச் சார்பில் உயிர்ப்பலியிடுதல் எனும் பாவத்தை முற்றாக ஒழிக்க யாம் வழி செய்தல் வேண்டும். தீபாவளி போன்ற நாட்களும், நவராத்திரி விளக்கீடு, கௌரிவிரதம் போன்று புனிதத் தன்மை மிளிரும் புண்ணிய தினங்களாக அனுட்டிக்கப்படல் வேண்டும்.

நாவலர் கலாசார நிலையம் அமைப்பதற்கு அடுத்த ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு அரசாங்கம் பண ஒதுக்கீடு செய்ய முன்வந்தது மகிழ்ச்சிக் குரிய செய்தியாகும்.

நாவலர் பெருமான் நினைவு நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெற என் வாழ்த்துக் களைத் தெரிவித்து, நாவலர் சபையின் ஆக்கபூர்வமான முயற்சிகளுக்கு எமது அமைச்சு வேண்டிய உதவிகளைச் செய்யும் என்று உறுதிமொழி கூறி அமைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❊ தூய்மைக்கும்

❊ நேர்மைக்கும்

ஒரு பெயர்

"பிரவுண்சன்"

○ பிரவுண்சன் கோப்பி

○ பிரவுண்சன் அரறூட் மா

100 வீதம்

தூய்மைக்கு உத்தரவாதமானவை.

பிரவுண்சன் இண்டஸ்றீஸ்

80 1/4, பிறைஸ் பிளேஸ்.

கொழும்பு–12.

தொலைபேசி : 27197

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர்த் தொகுதி

பாராளுமன்ற உறுப்பினர்

மாண்புமிகு

# திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள்

## அளித்துள்ள செய்தி

வரலாற்றுத் தொன்மையும் புகழுங் கொண்ட நல்லூரில், சென்ற நூற்றுண்டில் அவதரித்து, பணிகள் பல புரிந்த நாவலர் பெருமான் ஈழத் தமிழினத்தின் காவல் தெய்வமாகப் போற்றப்படவேண்டியவர்.

நாவலர் பெருமான் பல துறைகளிலும் மேம்பட்டவராக விளங்கியவர். சைவ சமயக் கோட்பாடுகளைச் சீர்திருத்தி எமது சமயம் மறுமலர்ச்சியுற வைத்தவர். அந்நிய ஆட்சியின் உதவியுடன் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மத மாற்றத்தையும் கலாசார ஊடுருவலையும் அஞ்சா நெஞ்சுடன் எதிர்த்துப் போராடி அவற்றைத் தடுத்து நிறுத்தியவர் நாவலர். கல்வி வளர்ச்சிக்காகப் பல பாடசாலைகளைத் தாபித்தும், நூல்களை எழுதியும் தமிழ் மக்களின் எதிர்கால வளர்ச்சிக்காகத் தீர்க்கதரிசனத்துடன் செயல் புரிந்த செம்மல் நாவலர் அவர்களே. பெருமானின் பணிகளால் சிவநெறி தழைத்தது; தமிழ் மொழி சீர்மைபெற்றுச் செந்தமிழாக மிளிர்ந்தது.

தமிழ் மக்களின் ஆத்மிகம், அரசியல், சமுகம், கல்வி, மொழி முதலிய துறைகளில் அவர் புரிந்த தன்னலமற்ற பணிகள் எண்ணிறந்தவை. தமிழ் மக்களிடம் புதுயுகத்தைத் தோற்றுவித்த வித்தகன் அவரே !

நேர்மை, இலட்சியப்பற்று, நீதிக்காகப் போராடுவதில் அஞ்சாமை ஆகிய குணவியல்புகள் நிறைந்திருந்தமையினாலேயே நாவலர் பெருமான் தமது போராட்டங்களில் இறுதி வெற்றியைப் பெற முடிந்தது.

பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வாழ்ந்துகொண்டிருக்கும் இன்றைய தமிழ் மக்களாகிய நாம் நாவலர் நூற்றுண்டு விழாக் கொண்டாடப்படும் இவ்வேளையிலே அப்பெருமானையும் அவர் பணிகளையும் மனதாரப் போற்றி அவருக்கு அஞ்சலி செலுத்தி அவர் குணவியல்புகளை எமது இலட்சியத்தையடைய ஆதர்சமாகக் கொள்வோமாக !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE

COMPLIMENTS

OF

AKBAR BROTHERS LTD.

EXPORTERS OF

ALL SRI LANKA PRODUCE

Telegrams : "AKBARBRO"
Telephone : 88912, 85281
Telex No. : 1105 A/B AKBAR COLOMBO

P. O. Box 1726
614 - 618, Galle Road
Colombo-3.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PRINTERS OF
DISTINCTION
AND
CARTON MAKERS

**LAKE HOUSE PRINTERS & PUBLISHERS LTD.**

41, W. A. D. Ramanayake Mawatha

Colombo 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

P. Thevathasan

280, Main Street,

Colombo-11.

Telephone: 29185


UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

UNIVERSITY OF JAFFNA * LIBRARY *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம் குரு மகாசந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

## அருளுரை

பற் பல ஆன்மீகப் பெரியோர்களைக் கண்டது, சென்ற நூற்றுண்டு: வடக்கே வேத நெறிக்கு, ஒரு தயானந்தர்; தெற்கே சைவநெறிக்கு ஒரு நாவலர்; இருவரும் சம காலத்தவர்கள். தயானந்தர் வேத நெறியை விளக்கினுர். நாவலர் பெருமான் தூய சைவ நெறியைத் துலக்கினுர். இருவரும் நைட்டிகப் பிரமச்சாரிகள். நாவலர் பெருமான் ஒரு சைவ மணி விளக்கு. புறச் சமய இருள் நீக்க, ஈழந் தந்த சைவ மணி விளக்கு. சரித்திரப் புகழும், சமயப் புகழும், இலக்கியப் புகழும் அமைந்தது நல்லைப்பதி. சிறந்த புலவர்கட்கும், சைவ நன் மணிகளுக்கும் இருப்பிடமாயமைந்தது நல்லூர். சில பெரியோர்களால், ஊர்கள் பிரசித்தி பெறுவதுண்டு, தலங்களாலும், ஊர்கள் பிரசித்தி பெறுவதுண்டு இவ்விருவகைச் சிறப்பும் உடையது நல்லூர். பிரசித்தி பெற்ற கந்தன் ஆலயத்தாலும், நாவலரைத் தந்த பெருமையாலும், நல்லூர் மிகப் பிரசித்தி பெற்றுவிட்ட ஒரு தலமாயிற்று. இவற்றைத் தவிர செல்லப்பா ஸ்வாமிகள், சிவஞான யோக ஸ்வாமிகள் போன்ற சிவசித்தர்களது ஞானபீடமாக அமைந்த சிறப்பும் இந்நல்லூருக்குண்டு.

''சிவம் தழைக்க வந்த திருநல்லூர்'' என்று நாவலர் பெருமான் பிறந்த பெருமையால் அதற்கொரு பெயர் கிடைத்தது. தமிழ், சைவ ஒழுக்கம் ஆகிய இரண்டும் நாவலரவர்களுக்கு, உடலும் உயிரும் என்ருல் மிகையாகாது. கந்தன் கருணையே கந்தப்பிள்ளையின் ஆருவது மைந்தனுக, ஆறுமுகத்தைப் பிறக்கச் செய்தது, பர சமய இருள் நீக்கும் ஞானபானுவாக, ஆறுமுகம் உதித்தார், ஆறுமுகம் மறு சமயத்தோர்க்கு மாறுமுகமானர். நாவலர் பெருமான் அன்று பைபிளை மொழிபெயர்க்கத் தலைப்பட்ட சாதனையே, கிறீஸ்தவர்கட்கு பின்னுல் பெரும் சோதனையும், மனவேதனையுமாயிற்று. பைபிளை நன்கு ஆராயச் சந்தர்ப்பம் வாய்த்ததாலேயே, பரமத கண்டனங்கட்கெல்லாம், அவர்கள் நூலில் இருந்தே தக்க பதில் கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

நாவலரது மதிநுட்பம், ஒழுக்கம், தன்னலமற்ற தியாக சிந்தை, வடமொழி, தமிழ், ஆங்கிலமாகிய மும் மொழித் திறன் ஆகியவை எதிரிகளையும் கவர்ந்த சிறப்பியல்புகள்.

நம்மவர் தம் மதியின்மையால் பிற மதம் புகுந்து, பாழாகுகிருர் என்ற உணர்வே, நாவலரவர்களது உள்ளத்தில் ஒரு புத்துணர்வை ஊட்டியது. மத மாற்றத்தின் இரகசியம் அவர்கட்குப் புரிந்தது. மனமாற்றமின்றி, மதமாற்றம் நடைபெறுகிறது என்பதையும், சம்மதமின்றியே பலர் அம்மதம் சாருகின்றனர் என்பதையும் கிறீஸ்தவர்கள் கல்வி என்ற போர்வையில் வசீகரித்து மக்களை மத மாற்றுகின்றன ரென்பதையும் கண்டார். இதே வழியில் ஏன் நாம் சிவநெறியின் உள்ளீட்டைக் காட்டலாகாது. சமயம் பரவ வேண்டுமாஞல் பாடசாலைகள் அவசியம் என்பதை உணர்ந்தார்.

கிராமந்தோறும், ஊர்தோறும், பாடசாலைகள் ஸ்தாபிக்க வேண்டும், எண்ணெழுத்துடன் சமயம் புகட்டப்பட வேண்டும் என உணர்ந்தார். சமயப் பிரசாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தார் தமது இருபத்து மூன்ருவது வ ய தி ல்; இ ந் த வயதில் உள்ளமெனும் விளை நிலத்தில் விளைந்த சமய உணர்வு எனும் உணர்ச்சிக் கொடியில் பூத்துக் கனிந்த, சிவ தர்மங்களே இன்று பரந்து விரிந்து காணப்படுபவை.

பாதிரிமார், பாடசாலைகள் மூலம் பிழைப்புக்கு வேண்டிய ஆங்கிலம் கற்று பொன்னுக்காக, மண்ணுக்காக, பெண்ணுக்காக, பட்டம் பதவிகட்காக, மதம் மாறினுர் பலர். வயிறு வளர்க்க கிறீஸ்தவரானேர் சிலர், ஆனுல் மனச்சாட்சி உறுத்தும் தானே! இவர்கட்கு நாவலர் பெருமான் இட்ட பெயர் பஞ்சாட்சரக் கிறீஸ்தவர். (பஞ்சாட்சரம்—ச-ம்-ப-ள-ம்)

இதன் விளைவாக 1845ம் ஆண்டு முதல் மாணவர்களைச் சேர்த்து நாவலர் சைவமும் தமிழும் புகட்டத் தொடங்கினுர். காலை மாலை, கைமாறு கருதாது கற்பித்தார். இவர்கள் பின்னுல் நாவலருக்கு உதவினர். 1848 ஆண்டு நாவலர் அவர்களது அறப்பணியில் ஒன்ருகிய சைவப் பிரகாச வித்தியாசாலை உருவாயிற்று. நாகரிகத்தின் விசை, அச்சுப் பொறியில் இருக்கின்றது என்பதை உணர்ந்து வண்ணையில் அதன் விளைவாக வித்தியானுபாலன அச்சகம் உருவாயிற்று.

நாவலர் பெருமானின் நூல்கள் தனிச் சிறப்புடையவை, நாவலர் எழுத்துலகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசன நடையில் ஒரு புரட்சி ஏற்படுத்திய வீரர், நாவலர் வசன நடை என்ற தனி நடை உருவாயிற்று.

'கடவுளை வணங்கு,' 'குருவை வழி படு,' 'உண்மை பேசு,' 'கோபம் பொல்லாது', 'பொறுமை ஆகாது', உயிர்களைக் கொல்லாதே', என்ற நீதி வாக்கியங்களை, பிஞ்சு உள்ளத்தில், பதியவைத்து, கல்வியுடன், ஒழுக்கப், திருந்தவைத்தமையை முதலாம் பாலபாடத்தில் காணலாம். இரண்டாம் பாலபாடத்தில் சர்வமதங்களுக்கும் பொதுவான நீதி வாக்கியங்களைக் காணலாம். 'கோட் கேட்பவன் இல்லையாயின், கோள் சொல்பவனும் இல்லை. இவை போன்ற நீதி வசனக் குறள்களை அங்குக் காணலாம். நான்காம் பாலபாடம் மாணவர்கட்கு வேதம் போன்றது. கடவுள், வழிபாடு, ஆன்மா, கல்வி, கற்பு, நான்கு ஆசிரமங்கள் போன்றவை மாணவர் அறிவைத் வளர்க்கத் தூண்டும் ஏதுக்களாகும். நாவலரது கண்டனங்கள் தர்க்க ரீதியும் நியாயவரம்பும் கொண்டன. அவரது கண்டன நூல்களில் சிறந்தது சைவ தூஷண பரிகாரம். நாவலர் பெருமான் வாயாற் பேசி, நூல்களால் எழுதி, நெறி பிறழாமல் ஒழுகிக் காட்டி வந்தவர்கள். சிலர், சொல்வது போல்,எழுதுவது போல் நடக்க மாட்டார்கள். நாவலர் பணிகளில், பேச்சுக்களில் எழுத்துக்களில் சுயநலம் என்பதே இல்லை. தமிழுக்கும் சைவத்திற்கும் வரும் தீமைகளைப் போக்குவதே அவர் நோக்கம். அவர் ஏற்றிய சைவ ஒளி, மாணவரிடையே மறுமலர்ச்சி ஏற்படுத்தியது. நீராடி, நீறணிந்து கலலூரிக்குச் சென்றனர். இவை பாதிரிமார்க்குப் பிடிக்காதவை. ஆகவே அம்மாணவர்களுக்கு தமது கல்லூரியில்இடம் பெற முடியாதபடி செய்தனர். நாவலர் உள்ளம் கொதித்தது. உடனே ஆங்கில தமிழ்க் கல்லூரி நிறுவினர்.

## இறுதி மொழிகள்

''நான் உங்களிடத்தில் கைமாறு கருதாது நம் சமயத்தவர்களோடும் புறச் சமயத்தவர்களோடும், பெரும் பகையை உண்டாக்கி, முப்பத்திரண்டு வருட காலமாக, உங்களுக்குச் சைவசமயத்து உண்மையைப் போதித்து வந்தேன். எனக்குப் பின் சைவசமயம் குன்றிப்போமென்று பாதிரிமார்கள் கூறுகின்றார்கள். ஆகவே நான் உயிரோடிருக்கும் போதே, உங்களுக்காக ஒரு சைவப் பிரசாரகரைத் தேடிக் கொள்ளுங்கள் இன்னும் என்னைப் போலவே படித்தவர்கள், சன்மார்க்கர்கள் அநேகம் பேர் வருவார்கள் ஆனால் உங்களுடைய வசவுகளைக் கேட்டுக் கேட்டுச் சலிப்படையாது, கைமாறு கருதாது சமயத்தைப் போதிக்க என்னைப் போல ஒருவரும் இனி வரப்போவதில்லை.

இதுவே அவரது பிரசாங்கத்தின் இறுதியான பேச்சு.

பிரமாதீச வருடம் கார்த்திகை மாதம் 1879ம் ஆண்டு, 5-12-79, இரவு நாவலர் பெருமான் நடராஜப் பெருமான் குஞ்சித பத நிழலை அடைந்தார்.

இப்போது நூற்றுண்டு விழாக் கொண்டாடுகிறோம், நமது சமய நிலை இன்று இருக்கும் நிலையில் நாவலர் பெருமான் இருந்தால்.........?பெருமானுக்குச் சிலை எடுப்பதாலோ விழா எடுப்பதாலோ ஏதும் பயனுண்டாயின், அவரது எண்ணங்களில் சில வற்றையாவது செயற்படுத்தப் பிரதிக்ஞை எடுக்க வேண்டும் என்பதே அடியேமின் தாழ்மையான விண்ணப்பம். அதுவே அவருக்கு எமது அஞ்சலியாகவும் இருக்கும்.

இந்நூற்றுண்டு விழாவில் சைவ உலகிற்கு சிந்தனைக்கு நாம் விடும் வேண்டுகோள்:

1. நாவலருக்கு, சிதம்பரத்திலும், சென்னையிலும் சிலை நாட்டவேண்டும்.
2. அவர் படத்தைப் பெரிதாக வர்ணப் பொலிவுடன் அச்சிட்டு, ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் வைக்கவேண்டும், அதைக் காணும் போதெல்லாம், தமிழுக்கும், சைவத்திற்கும், அவ்வாறு தியாகத் துணிவுடன் உழைக்கும் எழுச்சி பெற வேண்டும்.
3. நாவலர் சைவவினவிடை, பாலபாடம் ஆதியாம் நூல்களை ஒவ்வொரு மாணவனும் படிக்க வழி செய்ய வேண்டும்.
4. தேவாரம், திருவாசம், பெரியபுராணம் போன்ற பதிநூல்களை சைவர்கள் தம்து மதக் கடனாக ஓதி உணர வேண்டும்.
5. நாவலர் வழியைப் பின் பற்றி நாடெங்கும் சமயக் கல்வி பரப்ப வேண்டும், நல்ல சமய நூல்களைத் தனவந்தர்கள் அச்சிட்டுப் பரப்ப வேண்டும்.
6. திருக்கோயில்களில் வேதத்துடன் திருமுறைகள் முழங்க வேண்டும்.
7. கிராமந்தோறும் இலவச சமயப்பணியாற்ற சைவ ஸ்தாபனங்கள் தனிப் பட்டோ ஒன்றிணைந்தோ செயற்பட வேண்டும்.
8. சமய தீட்சையை மாணவரும் மற்றோரும் பெற வழி செய்ய வேண்டும்.

இவையே நாவலர் பெருமான் நூற்றுண்டு விழாவில், சைவ உலகம் பெருமானுருக்குச் செய்யும் கைமாறாகும்.

''நாவலர் வழிவே
நம் வழி''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின்
ஸ்தாபகர்களில் ஒருவராகிய

# வண. தனிநாயகம் அடிகள்

## அவர்களின் வாழ்த்து

நாவலர் பெருமானின் வரலாற்றை நன்கு அறியாத இலங்கைத் தமிழருமில்லை, இந்தியத் தமிழருமில்லை. சென்ற நூற்றூண்டில் தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் பெரும் இயக்கங்களை உண்டாக்கி சைவத்தையும் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் காப்பாற்றி வந்த பெரியார் அவர். அவருடைய நூற்றூண்டு விழாவை கொண்டாடும் இக்காலத்தில் எல்லா மறையினரும் எல்லா சமூகத்தினரும் அவராற்றிய பெருந் தொண்டை போற்றுவதுடன் அப்பெருமானின் எடுத்துக்காட்டை பின்பற்ற வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**BEST COMPLIMENTS**

**FROM**

**MOHAMED JALAL**

**184, Bankshall Steeet,**
**COLOMBO-II.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

FROM

SUJATHA TEXTILES

82, 3rd Cross Street

COLOMBO-11.

T'Phone : 23215
26727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த தமிழபிமானியும்
கம்பகா சர்வதேச பிக்கு கலாசாலை விரிவுரையாளருமாகிய
உடுகம்பொலை கொரஸ்ஸ ஸ்ரீ சுதர்மானந்த விஹாராதிபதி

# வண. பண்டித எம். ரத்னவன்ஸ தேரோ

## அவர்களின் ஆசிச்செய்தி

தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் மட்டுமல்லாது தேசிய உணர்விற்கும் உழைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் பங்காற்றிய நாவலர் பெருமான் மறைந்து நூறு ஆண்டுகளாகிவிட்டன. அவர் மறைந்தாலும் அவரின் எண்ணக் கருவூலங்கள் இன்றும் என்றும் ஏற்றிப் போற்றும்படியாகவே அமைந்துள்ளன.

அப்பெரியாரின் நினைவாக நாவலர் சபை கொண்டாடும் நாவலர் நூற்றாண்டு விழாவில் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு செய்தி அனுப்புவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

வெறுமனே தாம் மொழிக்காகவும் தாம் சார்ந்து நின்ற சமயத்திற்காகவும் தொண்டாற்றாமல் ஏகாதிபத்திய எதிர்ப்பை முன்வைத்து இந்நாட்டுத் தமிழ் பெருங்குடி மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்தாம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். எனவேதான் அவர் தேசிய விழிப்பின் சின்னமாக எல்லோராலும் போற்றப்படுகிறார்.

பௌத்தர்களுக்கு அநகாரிக தர்மபாலாவும் முஸ்லிம்களுக்கு அறிஞர் சித்திலெப்பையும் ஆற்றிய பணிகளைப் போல் ஆறுமுக நாவலர் தமிழ் மக்களிடம் இவர்களுக்கு முன்னதாகவே தோன்றி அரிய பணிகளாற்றியவர். நாவலரின் பணிகளை, சிறப்புக்களை வையகமெங்கும் பரப்பி பெருவிழா எடுக்கும் நாவலர் சபைக்கு இச்சந்தர்ப்பத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாவலர் பணிகள் எதிர்கால சந்ததியினருக்கு உணர்த்தப்படவேண்டும் அதற்கு சிறந்த தளமாக இந்த நாவலர் நூற்றாண்டு விழா அமையட்டும் என வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE BEST COMPLIMENTS

OF

# KAVITHA MOTORS

354, SRI SANGARAJA MAWATHA,

**COLOMBO 10**

Telephone : 31182

# K. Selvarajah & Bros.

37, KASTHURIYAR ROAD,

**JAFFNA.**

Telephone : 7517.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்தவப் பண்பாட்டுப் பேரவைத் தலைவி
## பம்பலப்பிட்டி சிறிய புஷ்பக்கன்னியர் மடம்
# அருட்செல்வி சென் பியர் டேமியன் (தி. கு. ச.)
### அவர்களின் அஞ்சலி

தன்னையே நாடாக வைத்து, நாட்டையே தானுகக் கண்டு, தென்னைபோல் நிமிர்ந்து நின்று தேர்ந்த நல்லறிவைக் கொண்டு, சொன்னயத்தேனைப் பெய்து, தூய்மையால் உலகையீர்த்து, வாய்மையால் வலிமைகாட்டி, மொழியும் மதமும் தாம் பெற்ற விழிகளெனத் தெய்வீகத் தமிழும் சைவநெறியும் தழைக்க உழைத்த தியாகச் செம்மலே! நாவல! உம்மை நாம் மறக்கலாமா? நீவிர் பரமபதமடைந்து நூறுண்டுகளாயின. ஆயினும் நீவிர் எம்முள்ளத்திலிருந்து மறையவில்லை. மறைந்தும் மறையா மாபெரும் புகழையுடையவர் ஆயிரத்தில் ஒருவரே. அண்ணலே! அந்த வரிசையில் நீவிரும் அமர்ந்துள்ளீர்.

முதுபெருங் குரவராம் உம் தாய் தந்தையர் ஆறுமுகமெனும் அழகிய நாமத்தினை உமக்களிக்க நீவிர் மாபெரும் நா வன்மையால் "நாவலர்" என்னும் செவ்விய பெயரையும் இணைத்துக்கொண்டீர்! நாமும் உம்மை உள்ளக் கனிவுடனே 'நாவல' என்றழைக்கின்ருேம்.

திங்களொடும் பரிதியொடும் பிறந்து வந்த செந்தமிழை, இலக்கியத்தை, இலக்கணத்தைத் தன் கண்களெனக் கொண்ட தமிழ் மகனை, நாவலரை நான் வாழ்த்தக் கிடைத்த நல்லதொரு வேளை கண்டு மகிழ்கின்றேன். "நன்றி மறப்பது நன்றன்று" என்று வள்ளுவர் வகுத்த பண்பிற்கு இலக்கணமான நாவலர் சபைப் பெருமக்கள் – இல்லை அனைத்துலகத் தமிழ் மக்களும், நீவிர் தெய்வீக வாழ்வு பெற்ற நூற்ருண்டிலே விழாவெடுக்கின்றனர். என் நெஞ்சம் களிக்கின்றது. நானுமதில் இரண்டறக் கலந்து கொள்கிறேன்.

என்ருே, எங்கோ, எப்பொழுதோ ஒரு அற்புத மனிதன் அவதரிக்கின்ருன். வாழும் நாளில், வாழ்த்தும், வசையும் சூழக்கிடந்து துயில் கொள்கிருன். அறுவடையின் பின் அளக்கும் நெல்மணி போல மாண்டபின் தான் அவன் மகிமை தோன்றும். தாங்களோ வாழ்ந்த காலத்திலும் அதன் பின்னரும் மக்கள் மனதில் மங்கா இடத்தைப் பெற்றுள்ளீர்கள். இன்று நம்மால் அன்போடு நினைக்கப்படும் தாங்கள் அன்று பண்டிதரோடும் பாமரரோடும் வாழ்ந்தீர்கள்; வாழ்த்தப்பட்டீர்கள். தமிழுக்கும் சமயத்திற்கும் உறையுளாய் அமைந்த ஆதீனங்களும் உங்களைப் போற்றப் பின்னிற்கவில்லை.

"கற்றுணர் புலவருட் களிக்கும்
முற்றுணர் ஆறுமுகநாவலனே" என்று மீனுட்சிசுந்தரம்பிள்ளை அவர்களே வாழ்த்தியுள்ளதையும்

"என்னுளம் குடிகொண்டிருக்கும்
முன்னு சீராறுமுக நாவலனே" எனத் தியாகராஜச் செட்டியார் போற்றியுள்ளதையும் நினைந்து மகிழ்கின்றேன். நாவலர் எழுதிய நூல்கள் இத்தனையித்தனையென, எழுப்பிய தாபனங்கள் அத்தனையத்தனையென எழுத்தில் வடிப்பதை விடுத்தேன்.

நாவலா நீ,

ஆக்காத நூலில்லை, ஆய்ந்து தேர்ந்து
அளிக்காத கருத்தில்லை;
அழுத்தமாகத்
தாக்காத தர்க்கமில்லை; உந்தன்
நெஞ்சில்
தழைக்காத உவமையில்லை:
ஈழமண்ணில்
காணுத தலங்களில்லை, நினைத்துக்
சொல்லி
நிலைக்காத பொருளில்லை, நீதிகூடக்
காக்காத நாட்டினை நாவலா
நீ காத்தாய்
நீங்காதிருப்பாய் எம் நெஞ்சில்
நாளும்

நாவலா, அன்று போல

எங்கள் சமுதாயம்
எழுந்து நிற்க வேணுமையா
ஈழமதில் எல்லோரும்
இணைந்திட வேணுமையா
பொங்கி வரும் பால்போல
பூத்துவரும் மலர்போல
எழுந்துவருப் மதிபோல
நம்மக்கள் வளர்ந்து
வாழ்வு பெறவேண்டும் — இதனையே
விழைந்தேன் இறையருளை
இரந்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments of

TREBLE FAROOKS

135, Second Cross Street,

COLOMBO-11.

With Best Compliments

of

ASIAN TRADING COMPANY

General Hardware Merchants

35-A, Abdul Jabbar Mawatha,

COLOMBO-12.

Phone : 33819

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைநாள் நீதியரசரும்,

நாவலர் சபையின் உபதலைவரும், விழா நிதிக் குழுத் தலைவருமாகிய

# கலாநிதி H. W. தம்பையா Q. C.

## அவர்களின் செய்தி

நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் மறைந்து நூறு ஆண்டுகளாகின்றன. அவரின் நினைவு நூற்றாண்டு கொண்டாடப் படும் இவ்வேளையில் அவர் ஆற்றிய அரும்பெருஞ்சேவைகளைத் தமிழ் மக்கள் மறக்காமல் நினைவில் வைத்திருக்க வேண்டியது அவசியம்.

ஆங்கிலேய சாம்ராஜ்யம் மிகவும் ஆதிக்கத்துடன் நிலவிய சென்ற நூற்றாண்டில், எமது நாட்டின் தமிழர்கள் தமது மொழியையும் பரம்பரையாக கைக்கொண்டொழுகி வந்த கலாச்சாரங் களையும் மறந்து, தமது வயிற்றுப் பிழைப்புக்காக அந்நிய மோகத்தில் மயங்கி இனப்பெருமையை மறக்க முற்பட்ட போது, நாவலர் பெருமான் தமது போதனைகளாலும், சாதனைகளாலும் தமிழ் மக்களைக் காப்பாற்றியவர். சமய அறிவை வளர்ப்பதற்காக நூல்களை எழுதி வெளியிட்டும், ஏட்டுச்சுவடிகளாயிருந்த அரிய நூல்களை அச்சிட்டும் சமயத்தையும் தமிழ் மொழியையும் காப்பாற்றிய பெருமைக்குரியவர் நாவலர்பெருமான். எனவே அவரின் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகவும், விமரிசையாகவும் நடத்துவது நம் எல்லோரதும் கடமையாகும்.

தமிழ் மக்களின் உயர்வுக்காகத் தம்மையே அர்ப்பணித்தவர் ஆறுமுகநாவலர்; அவ்வாறே சிங்கள பௌத்த மக்களுக்காகப் பணியாற்றியவர் அநகாரிக தர்மபாலா.

நாவலர் கிறிஸ்தவ சமயத்தை நிந்திக்கவில்லை. கிறிஸ்துவர்களின் வேதநூலாகிய பைபிளை மொழிபெயர்த்து பேர்சிவல் பாதிரியாரோடு கிறிஸ்தவ சமயத்துக்கும் தொண்டு செய்தவர். ஆனால் அவர் பெரும் சைவனாகவே துலங்கினார். எனவே மத பேதமின்றி, தமிழ் பேசும் மக்கள் நாவலர் நூற்றாண்டு நினைவு விழாவுக்கு ஆதரவு நல்கிச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். நாவலரின் ஆத்மீக சிந்தனைகளை அனைவருங் கற்று அவற்றைப் பின்பற்ற வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

V

# P. B. UMBICHY LTD.

**SHIPPING AGENTS**

175, Bankshall Street,

**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

## ஆட்சிக்குழு - 1979

தலைவர் :

முன்னை நாள் நீதியரசர்

திரு. வீ. சிவசுப்பிரமணியம்

உப தலைவர்கள் :

கலாநிதி H. W. தம்பையா Q. C.
திரு. மு. சிவசிதம்பரம் M. P.
திரு. சி. ரெங்கநாதன் Q. C,
திரு. ஆ. செ. நடராசா Advocate
திரு. கி. லக்ஷ்மண ஐயர், வித்தியாதிபதி
திரு. க. சிற்றம்பலம்
திரு. த. சங்கரலிங்கம்
சிவத் தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி

பொதுச் செயலாளர் :

திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E.

பதிற் பொதுச் செயலாளர் :

திரு. நா. சோமகாந்தன்

துணைச் செயலாளர்கள் :

Dr. சி. சண்முகநாதன்
திரு. செ. சோ. சந்திரசேகரம்
திரு. க. சி. சண்முகம்

கூட்டுப் பொருளாளர்கள் :

திரு. த. நீதிராசா J. P.
திரு. கா. விசுவலிங்கம் J. P.
திரு. எஸ். குழந்தைவேல் J. P.

உப பொருளாளர் :

திரு. சி. சிவசுப்பிரமணியம்

உறுப்பினர்கள் :

திரு. க. இளையதம்பி
திரு. ம. கனகசபாபதி
திரு. நா. வீரசிங்கம்
திரு. து. சிவசுந்தரம்
திரு. இ. வைத்திலிங்கம்
திரு. ஜே. செந்தில்நாதன்
திரு. மு. கணபதிப்பிள்ளை
திரு. கா. மாணிக்கவாசகர்
திரு. சு. இ. பசுபதி
திரு. க. க. சுப்பிரமணியம்
திரு. ஐ. தி. சம்பந்தன்

238.34 ARY AR
UNIVERSITY OF JAFFNA LIBRARY
162579
ARCHIVES
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இனம் காத்த காவலனே - ஈழத்தின்
தலை சிறந்த பாவலனே,
சைவம் தழைக்க, தமிழ் விளங்க வித்திட்டாய்
தரணிதனில் உமது பெயர் நிலைத்து நிற்கும்.

நாவலர் பெருமானின் நூற்றுண்டுவிழா சிறப்புற
எமது வாழ்த்துக்கள்.

நேர்மையே நிறைந்த செல்வம்,
மக்கள் சேவையே எங்கள் குறிக்கோள்.

↓

# வே. த. ஆ. அருணாசலம் அன் கோ.

397, 399, பிரதான வீதி,

பசறை

தொலைபேசி இலக்கம் : 3 2 6

கிளை : வே. த. ஆ. அருணாசலம் அன் கோ.
79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம் : 7 3 4 7

அலுவலகம் :
5/4, பழைய சோனக தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி இல : 33329

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையின்

பொதுச் செயலாளர்

# திரு. ம. ஸ்ரீகாந்தா O. B. E. அவர்கள்

## சபை ஆட்சிக்குழு சார்பில் சமர்ப்பிக்கும் அறிக்கை

நாவலர் பெருமான் அவர்கள் தமிழ் மக்கள் செய்த தவப்பயனின் விளைவாக அவதரித்த மகான். சைவ சமயத்துக்கும் செந்தமிழுக்கும் அவர் புரிந்த தொண்டுகள் எண்ணிறந்தவை. இருள் சூழ்ந்த சென்றநூற்றூண்டில் அவர் தோன்றியிருக்காவிடில், இலங்கைத் தமிழர்களின் வரலாறே திசை மாறிப் போயிருக்கும். சிவநெறியின் மறுமலர்ச்சிக்கும், தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும், கல்வித் துறையில் தமிழினத்தின் விழிப்புணர்வுக்கும் அவர் ஆற்றிய அரும்பணிகளுக்காக அவர் ஏழேழு தலைமுறைக்கும் நன்றியுடன் ஏற்றிப் போற்றப்படவேண்டியவர். பெருமானின் நூற்றூண்டு நினைவுக் கொண்டாட்டங்களைச் சபை ஏற்பாடு செய்து நடத்தி வரும் இச்சந்தர்ப்பத்தில், எமது சபையின் வரலாற்றையும், பணிகளையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

### சபையின் தோற்றம்

நாவலர் பெருமானின் நாமத்தைப் போற்றிப் பரப்புவதையும் அவர் நினைவாகப் பல ஆக்கப்பணிகளைச் செய்வதையும் இலட்சியங்களாகக் கருதி, கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் 17-6-1968 அன்று இலங்கை நடைமுறைத் தமிழியக்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் 'ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை' என்ற பெயர் கொண்ட இச்சபை அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.

### பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனம்:

சபைக்கென உரிய யாப்புக்கள் வகுக்கப்பட்டு, அரசாங்க விதிகளுக்கமைய இச்சபை பதிவு செய்யப்பட்டுள்ளது. (Registered as a Society under Trust Ordinance-vide Govt, Gazete dated 8-5-1969).

### அங்கீகரிக்கப்பட்ட அறக்கொடை

சபையின் கல்விப்பணிக்கு நன்கொடைகளை உபகரிப்பவர்கள் அத்தொகைகளுக்கு வருமான வரி விதிப்பிலிருந்து சலுகை பெறுவதற்கு வசதியாக இச்சபைக்கான நன்கொடைகள் அறக்கொடையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. Declared as an Approved Charity under the Inland Revenue Act-see Govt. Gazette dated 14-3-1969)

### 10 ஆண்டு காலப்பணிகள்:

சபை ஆரம்பிக்கப்பட்டு 11 ஆண்டுகளாகின்றன. இக் குறுகிய காலத்துள், இறைவனின் திருவருட் துணையாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பினாலும் நாவலர் பெருமானின் ஞாபகார்த்தமாக குறிப்பிடக்கூடிய பணிகள் சிலவற்றை எமது சபை நிறைவேற்றியுள்ளது. அவற்றின் மூலம் நாவலரின் புகழ் நாட்டின் சகல மக்களிடமும் பரவியுள்ளதுடன், தமிழ் மக்கள் மத்தியில் அவர் நாமம் மந்திரம் போன்ற சக்திமிக்க சொல்லாக மிளிர்வதைக் கண்டு நாவலரன்பர்கள் மகிழ்ச்சியடைவார்களென நம்புகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் திருவுருவச் சிலை:

தமிழ் மக்கள் நீண்ட நெடுங்காலமாகக் கண்ட கனவை நனவாக்குவது போல, நாவலர் பெருமான் மறைந்து 90 ஆண்டுகளின் பின், அவர் பிறந்த புண்ணிய பதியாகிய நல்லூரில், வெண்கலத்தினல் வார்க்கப்பட்ட நாவலர் திருவுருவச் சிலையை எமது சபை 1969ம் ஆண்டு ஜூன் மாதத்தில் நிறுவியது.

## நாவலர் நிலையம்:

சிலை நிறுவுவதற்காக அரசிடமிருந்து காணியைக் கையேற்ற எமது சபை, அங்கு அழகிய மணி மண்டபத்தையும் அமைத்து, அதில் நாவலர் நூல்களையும் மற்றும் அரிய நூல்களையுங்கொண்ட ஆய்வு நூலகம் நடைபெறுவதற்கும் நடவடிக்கை எடுத்தது. இப்போது இந்நிலையத்தில் ஆண்டுதோறும் நாவலர் குரு பூசை நடைபெற்று வருகின்றது. வாரந்தோறும் தேவார, திருமுறை, பண்ணிசை வகுப்புகள் நடைபெறுவதுடன், கந்தபுராணப் படனம், சமய விரிவுரைகள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம் பெற்று வருகின்றன.

## நாவலர் தபால் முத்திரை:

தேசியத் தலைவர்களில் ஒருவராக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் நாவலர் பெருமானின் நினைவைக் கௌரவித்து அவர் உருவம் பொறித்த அஞ்சல் தலை வெளியிடும்படி ஆரம்ப காலத்திலிருந்தே சபை வலியுறுத்தி வந்ததன் பயனாக 29-10-71ல் அரசாங்கம் நாவலர் முத்திரையை வெளியிட்டது. நாவலர் நிலையத்தில் நடைபெற்ற உத்தியோகபூர்வ வெளியீட்டு வைபவத்தை சபை பெருவிழாவாக நடத்தியது.

## நாவலர் வாரம்:

நாவலரின் நாமத்தையும் கீர்த்தியையும் நாட்டு மக்களிடம் பரப்பும் நோக்கத்தில் 'நாடெங்கணும் நாவலர் விழாக்கள்; தமிழ் வீடுகள் தோறும் நாவலர் சிந்தனை' என்ற கோஷத்தை முன் வைத்து 1968, 1969, 1970, 1971 ஆகிய ஆண்டுகளில் குருபூசைத் தினத்துக்கு முன்னுள்ள ஏழு நாட்களையும் 'நாவலர் வார'மாக சபை பிரகடனப்படுத்தி விழாக்களை ஏற்பாடு செய்து எழுச்சியுறச் செய்தது. கட்டுரை, பேச்சுப்போட்டிகள், விசேஷ வானொலி நிகழ்ச்சிகள், பத்திரிகைகளில் அனுபந்தங்கள் முதலியவை நாவலர் வாரத்தை யொட்டிச் சபையால் குறிப்பிட்ட ஆண்டுகளில் ஏற்பாடு செய்யப் பெற்றன.

## 150 ஆவது ஜெயந்தி விழா:

1822ல் அவதரித்த நாவலர் பெருமானின் 150வது ஜெயந்தி தினத்தை 1972ல் எமது சபை கோலாகலமாகக் கொண்டாடியது. நாவலர் பற்றிய புதிய சிந்தனையை ஏற்படுத்துமுகமாகவும் எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆய்வாளர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் கட்டுரை, கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகப் போட்டிகளை ஜெயந்தி விழா தொடர்பாக நடத்தி உரொக்கப் பணமாகவும், பெறுமதிவாய்ந்த பரிசில்களாகவும் சபை வழங்கியது.

## பிரசுரங்களும் மலர்களும்:

நாவலர் நினைவாக நிகழ்ச்சிகளை நடத்திய காலங்களில் சிறப்பு மலர்களையும் சிறு பிரசுரங்களையும் சபை வெளியிட்டுள்ளது. முறையே 1969, 1972 ஆண்டுகளில் சபையால் வெளியிடப்பட்ட மாநாட்டு மலர், ஜெயந்தி விழா மலர் என்பன ஆய்வாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நாவலர் பற்றிப் புதிய சிந்தனையும், ஆராய்ச்சி முயற்சிகளும் தோன்றுவதற்கு வழிவகுத்திருப்பதாகப் பாராட்டுப் பெற்றவை. தொடர்ந்து பலகாலமாகச் சபையினல் வெளியிடப்பட்ட 'நல்லை நாவலர்' என்னும் மாத வெளியீடு நாவலரன்பர்களின் வரவேற்பைப் பெற்றிருந்த போதிலும், பொருளாதார காரணங்களால் சென்ற சில ஆண்டுகளாக வெளியிடப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் நூற்றாண்டு:

அன்று நாவலர் பெருமான் புரிந்த தன்னலமற்ற தொண்டுகளின் விளைவாக சொந்தக் கலாசாரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய தலைமுறையினர் நாவலருக்கு நன்றிக் கடனைச் செலுத்தி அஞ்சலி செலுத்தவும், இளம் சந்ததியினர் அவரின் கீர்த்தியைத் தெரிந்து கொள்ளவும், அவர் பற்றிய ஆய்வுகள் மேலும் ஆழமாகவும் பரவலாகவும் மேற்கொள்ளப்படவும் தக்கவகையில் எமது சபை நாவலர் நினைவு நூற்றாண்டு வைபவத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றது. இறைவன் திருவருளினாலும், எல்லோரினதும் அமோகமான ஒத்துழைப்பின் மூலமும் இம் முயற்சி இனிதே நிறைவேறும் என நம்புகிறோம்.

## நாவலர் கலாச்சார நிலையம்

நாவலர் பிறந்த இல்லம் அமைந்துள்ள நல்லூர்க் காணியில் நாவலர் நினைவாகக் கலாச்சார நிலையமொன்றை அமைப்பதற்கென அக்காணியை சில ஆண்டுகளுக்கு முன் அரசாங்கம் சுவீகரித்து, நிலையத்துக்கான அடிக்கல்லையும் நிறுவியது. எனினும் இதுவரை கட்டடத்துக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாமலிருப்பதைக் கண்டு நாவலரன்பர்களின் மனம் வேதனைப்படுவதை எமது சபை உணர்கிறது. நாவலர் நினைவு நூற்றாண்டாகிய இவ்வாண்டிலேயே அந் நிலையம் நிறைவு பெற்றிருந்தால், பெருமானின் நூற்றாண்டு நினைவாலயம் என்ற மேலதிகப் பெருமையையும் பெற்றிருக்கும். நூற்றாண்டுப் பூர்த்தி முன், நிலையக் கட்டடத்துக்கான அத்திவார வேலைகளையாவது அரசு ஆரம்பிக்குமென எதிர்பார்ப்போமாக!

## சபையின் இழப்புக்கள்:

சபையின் பணிகளை சிறப்புற நடைபெற முன்னின்றுழைத்த ஆட்சிக்குழு உறுப்பினர் இருவரின் மறைவு சபைக்கு ஏற்பட்ட இழப்பாகும். சில காலத்துக்கு முன் திடீரென மறைந்த 'ரகுநாதன் பதிப்பக' உரிமையாளர் திரு.க.பத்மநாதன் அவர்களையும், அண்மையில் காலமாகிய பெரியார் திரு. தி. முருகேசம்பிள்ளை அவர்களையும் இவ்வேளையில் நினைவுகூர்ந்து, சபை அவர்களுக்குத் தனது அஞ்சலியை செலுத்துகின்றது.

## எமது நன்றி!

காலத்துக்குக் காலம் எமது சபை மேற்கொண்ட நாவலர் நினைவுப் பணிகளைச் சிறப்புடன் நிறைவேற்றுவதற்குப் பக்கபலமாக நின்று பேருதவி புரிந்த பெரியார்களுக்கும், நாவலர் அன்பர்களுக்கும், எப்போதும் எமது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு அளித்து வரும் அநேக மன்றங்கள், பள்ளிக்கூடங்கள், பத்திரிகை நிறுவனங்கள், ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், வணிக நிலையங்கள் முதலியோருக்கு எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*

*of*

# ESWARAN BROTHERS

*Sole Importers*

*of*

"MATCHBOX"®

**TOYS & WADDINGTON GAMES**

**&**

**PUZZLES**

English Toys of Excellence
are both Fun & Education
for Children

**267, Sea Street,**

**COLOMBO-11**

Tel : 32590


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா மத்தியகுழுவின் தலைவர்

சட்டத்தரணி

# திரு. டி. எம். சுவாமிநாதன்

## அவர்களின் செய்தி

நாவலர் பெருமானின் நூற்றாண்டு நினைவு விழா இலங்கை முழுவதும் இவ்வாண்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அவர் சைவத்துக்கும் தமிழ் மொழிக்கும் புரிந்த தொண்டுகள் தனித்தன்மை வாய்ந்தவை; தன்னிகரற்றவை. சமய எழுச்சியூட்டவல்ல சமயப் பிரசங்கங்களைப் புரிந்தும், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் போன்ற பல அரிய நூல்களை அச்சிட்டு வெளியிட்டும் பாடசாலைகளைத்தாபித்தும், சமயக் கல்வி வளர்ச்சிக்கான நூல்களை வெளியிடுவதற்காக அச்சகம் நிறுவியும் அவர் ஆற்றிய பணிகள் பல. நாவலரின் அறிவாற்றல் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் மதிக்கப்பட்டது. அங்கு அவர் மிக உயர்வாகப் போற்றப்பட்டார். நாவலர் பெருமான் தமது வாழ்க்கையையே சைவத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணித்தவர். சைவ சமயக் கோட்பாட்டிற்கமைய வாழ்ந்து காட்டியவர் நாவலர். சைவ சித்தாந்த தத்துவத்தின் உயர்வை உணர்த்தி, ஆகமத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய நாவலர் பெருமான், புராதன சிவ ஸ்தலங்களாகிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பவற்றின் புனருத்தாரணத்தை ஊக்குவிப்பதிலும் நல்லூர் கந்தசாமி கோவில் ஆகம விதிப்படி நடைபெற வேண்டுமென்பதிலும் மிக அக்கறையும் ஆர்வமுங் கொண்டிருந்தார்.

நாவலர் பெருமானின் நூற்றாண்டு விழாவையொட்டி வெளியாகும் இச்சிறப்பிதழ் அறிஞர்கள் பலரின் கட்டுரைகளைக்கொண்டிருப்பதால், நாவலரன்பர்களுக்கு நல் விருந்தாக அமையும் என நம்புகிறோம்.

எமது தலைமுறையில் நிகழும் வரலாற்று முக்கியத்துவமான நிகழ்ச்சியாகிய நாவலர் நூற்றாண்டு எல்லா வகையாலும் சிறப்புறும் பெருவிழாவாக அமைய எல்லோரினதும் நல்லாதரவு கிடைக்குமென எதிர்பார்க்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

**NIRMAL PRINTERS**

*Letter Press & Offset Colour Printers*

P. O. Box 1404,
98, Jampettah Street,
Colombo-13.
Tel: 36423

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை

# நாவலர் நூற்றாண்டு விழா மத்திய குழு

*சபையின் தலைவர் ;*

*முன்னைநாள் நீதியரசர்*

**திரு. வீ. சிவசுப்பிரமணியம்**

*விழாக்குழுத் தலைவர் ;*

**திரு. டி. எம். சுவாமிநாதன்**

*பொது அமைப்புச் செயலாளர் :*

**திரு. என். சோமகாந்தன்**

*உறுப்பினர்கள் :*

**கலாநிதி H. W. தம்பையா Q. C.**
**திரு. ம ஸ்ரீகாந்தா O. B. E.**
**திரு. த. நீதிராசா J. P.**
**திரு. கா. விசுவலிங்கம் J. P.**
**திரு. கி. லக்ஷ்மண ஐயர், வித்தியாதிபதி**
**பேராசிரியர் ஆ. சதாசிவம்**
**பேராசிரியர் க. கைலாசபதி**
**திரு. ச. அம்பிகைபாகன்**
**கலாநிதி அ. சண்முகதாஸ்**
**டொக்டர் சி. சண்முகநாதன்**
**திரு. சி. சிவசுப்பிரமணியம்**
**கலாநிதி கே. எஸ். நடராசா**
**திரு. இ. இரத்தினம்**
**திரு த. சங்கரலிங்கம்**
**திரு. செ. சோ. சந்திரசேகரம்**
**திரு. க. சி. சண்முகம்**
**திரு. க. இராமநாதன்**
**திரு. க. இளையதம்பி**
**திரு. மு. சிவராசா**
**திரு, ஆ. சிவநேசச்செல்வன்**
**திரு. வே. சிவராசா**
**திரு. கா. மாணிக்கவாசகர்**
**திரு. க. சொக்கலிங்கம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

USE

**PILOT BALL POINT PENS**

FOR

**REAL WRITING PLEASURE**

*Manufactured by :*

**PENPALS LTD.,** (member of the K. G. Group)

*Distributors :*

**SHAW WALLACE & HEDGES LTD.,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நினைவு நூற்றாண்டு: நமது நோக்கமும் திட்டமும்

என். சோமகாந்தன்
பொது அமைப்புச் செயலாளர்
நாவலர் நூற்றாண்டு விழாக்குழு

ஓர் இனம் தனித்துவமுள்ளதாக விளங்குவதற்கு அதற்குச் சொந்தமான கலாசாரத்தைக் கொண்டிருப்பது இன்றியமையாத தேவைகளில் ஒன்றாகும். மொழியின் வளத்தையும் சிறப்பையும் எடுத்துக் காட்டுவன அதன் இலக்கியங்களாகும். தமிழர் கலாசாரமும் மொழியும் சமயத்தைப் பற்றிப் படர்ந்து வளர்ச்சி பெற்றன என்பது வரலாறு. சென்ற நூற்றாண்டில் இலங்கையில் சைவத்துக்கு வந்த பேராபத்தைத் தடுத்து நிறுத்தி அதைக்காப்பாற்றிப் புத்துயிர் பெற வைத்தவர் நாவலர். ''நாவலர் சைவத்தை வளர்த்தார்; தமிழ் தானகவே வளர்ந்தது'' என்பது அர்த்தமுள்ள கூற்று. இலங்கைத் தமிழினம் தன்து தனித்துவத்துடனும் செழுமையான மொழியுடனும் திகழுவதற்கு காரணராக நாவலர் விளங்கியதனுலேயே அவர் ஈழத்தமிழினத்தின் காவல் தெய்வமாக நன்றியுடன் போற்றப்படுகின்றார்.

* * *

இலங்கை வரலாற்றில் நாவலர் வகித்த பாத்திரம் பிரதானமானது. பரதேசப் பண்பாட்டு ஆக்கிரமிப்பை, ஊடுருவலை எதிர்த்து அன்று அவர் புரிந்த போராட்டம் வரலாற்றுத் தேவையாகவும் சரித்திர இயக்க நியதியாகவும் இருந்தது. வடஇலங்கையில் அன்று அவர் ஆரம்பித்த இயக்கமே பின்னர் தென்னிலங்கையில் அந்நியராட்சிக்கு மறுப்புத் தெரிவிக்கும் இயக்கங்கள் தோன்ற வித்திட்டது.

* * *

சைவத்துக்கு அவர் புரிந்த பணிகளால் ஆரம்பத்தில் ஐந்தாங் குரவராகச் சைவர்களால் மட்டுமே நினைவு கூரப்பட்ட அவர் வரலாற்றுத் தேவையை நிறைவேற்றிய சரித்திரநாயகராக தேசியப் பெரியாராக இன்று உயர்ந்து நிற்பது திடீரெனத் தோன்றிய நிலையல்ல. அவரைப் பற்றிய புதிய சிந்தனைகளையும், ஆராய்ச்சி முடிபுகளையும் சமுகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளர்களும் ஆய்வாளர்களும் காலத்துக்குக் காலம் முன் வைத்ததின் விளைவாகவே நாவலர் நாமம் தேசிய வியாபிதமடைந்ததுடன், தேசிய வரலாற்றில் தலைசிறந்த பெரியாராகவும் நாட்டுமக்கள் அனைவரும் அவரை ஏற்றுப் போற்றும் நிலை எய்தியது.

* * *

வைரத்தின் ஜொலிப்பும் பெறுமதியும் அது சிறந்த முறையில் பட்டை தீட்டப்பட்ட பின்னரே அதிகரிக்கும். நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்து - அக்காலத்தின் போது அவசியமாகத் தேவைப்பட்ட பணிகளைச் செய்த நாவலரின் நாமம் இன்றைய தலைமுறையினரின் ஞாபகத்துக்குள் மட்டும் அடங்கி விடாமல் எதிர்காலத் தலைமுறைக்கும் முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு அவரைப் பற்றிய ஆய்வுகள் மேலும் தொடரப்பட வேண்டும்; வரலாற்றில் நாவலர் வகித்த பங்கும் பணியும் சம்பந்தமான ஆய்வுகள் இன்னும் முற்றுப் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. இதேவேளையில் அவர் பணிகளைப் பற்றி ஆழமாக அறிய வேண்டுமென்ற அவா இன்றைய புதிய தலைமுறையினர் மத்தியில் தோன்றியிருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

* * *

'காலத்தால்செய்த உதவி ஞாலத்தின் மாணப்பெரிது'-காலத்தின் தேவையை நிறைவு செய்து, சரித்திர நாயகராக விளங்கும் நாவலருக்கு இன்றைய சந்ததியின் நன்றி வெளிப்பாடாகவும் நினைவு அஞ்சலியாகவும், அவரைப்பற்றிய புதிய ஆராய்ச்சி முயற்சிகள் தோன்றுவதற்குக் களமாகவும் நாவலர் நினைவு நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் அமைய வேண்டு மென்பதே எமது நோக்கம்

* * *

இன்றைய சிறார்களே நாளைய பிரசைகள்: நாளைய பிரசைகள் தமது நெஞ்சில் நேற்றைய தலைவரின் நினைவையும் அவர் ஆற்றிய பணிகளையும் ஊக்கத்துடன் உணர்ந்து கொள்ளக் கூடிய முறையில் நூற்றாண்டு விழாவின் பல்வேறு அம்சங்களும் திட்டமிடப்பட்டுள்ளன.

● **மாணவர் போட்டிகள் :**

அனைத்திலங்கை அடிப்படையில் பாடசாலை மாணவர்க்காக நடத்தப்படும் கட்டுரை - பேச்சுப் போட்டிகள் நாம் எதிர்பார்த்தது போன்ற பேரார்வத்தை இளைஞர்கள் மத்தியில் தோற்றுவித்திருப்பதை எமக்கு இதுவரை கிடைத்துள்ள ஆயிரக்கணக்கான கட்டுரைகளும், பேச்சுப் போட்டிக்கான விண்ணப்பங்களும் நிரூபிக்கின்றன. இப்போட்டிகளில் பரவலாக இலங்கையின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் உற்சாகமாகப் பங்குபற்றுவதை ஊக்குவிக்கும் முகமாக – அனைத்திலங்கைக்குமான தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைத் தவிர - கல்விப் பிராந்திய அடிப்படையிலும் முதற் பரிசுகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்றது.

● **பிரசுரங்கள் :**

நாவலரின் வாழ்க்கைப் பணிகளைச் சிறுவர்களும் படித்துத் தெரிந்து கொள்வதற்கு வசதியாக பிரபல எழுத்தாளர் திரு. ''வரதர்'' அவர்கள் எளிய நடையில் எழுதியுள்ள ''நாவலர்'' சரித்திரம், நாவலர் நூற்றாண்டின் நினைவாக மறுபதிப்புச் செய்யப்பட்டு வெளியாகவுள்ளது.

● **கருத்தரங்குகள் :**

விழாக்குழுவினால் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் 'நாவலர் பணிகள்' பற்றி நடத்தப்பட்ட கருத்தரங்குகளும், இனி ஏற்பாடு செய்யப் பெற உள்ள கருத்தரங்குகள் - ஆய்வரங்குகளையும் தவிர, சபையின் கோரிக்கையை ஏற்று நாட்டின் பல பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் நாவலர் நூற்றாண்டை யொட்டி நடைபெறும் கருத்தரங்குகள், பட்டி மன்றங்கள், விவாத மேடைகள் முதலியன உயர்வகுப்பு மாணவரிடம் நாவலர் பற்றிய சிந்தனையையும் ஆர்வத்தையும் ஏற்படுத்தவல்லனவாகும்.

● **அறிவுறுத்தற் சின்னங்கள் :**

வீர சாதனைகளையும் திருப்பணிகளையும் நிறைவேற்றியதன் ஞாபகமாக நினைவுக்கல் நாட்டுவதும் கல்வெட்டில் பொறிப்பதுவும் பழந்தமிழர் மரபு. இன்று பல நாடுகளில் சென்ற தலைமுறையைச் சேர்ந்த தேசப் பெரியார்கள், கலாவிற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னர்கள், எழுத்தாளர்கள் முதலியோரின் நினைவாக அவர்களின் பணிகளைக் குறித்த அறிவுறுத்தற் சின்னங்கள் - நகரங்கள் தோறும் காணப்படுகின்றன. நாவலர் பெருமானின் வாழ்க்கைப் பணிகளுடன் நேரடித் தொடர்புள்ள இடங்களில் இந்நூற்றுண்டு விழா தொடர்பாக திறந்துவைக்கப்படவுள்ள அறிவுறுத்தற் சின்னங்கள் அவர் பணிகளை எல்லோர் நெஞ்சிலும் மேலும் நினைவு கொள்ளத் தூண்டும் என நம்பலாம்.

### ● நூற் கண்காட்சி

நாவலர் எழுதிய நூல்கள், பரிசோதித்துப் பதிப்பித்த நூல்கள் பல. அவருக்குப்பின் அவர்பற்றி கடந்த நூறு ஆண்டுகளில் வெளிவந்த நூல்கள் பிரசுரங்களின் எண்ணிக்கை யாது? நாவலர் பற்றிய ஆர்வம் பல்கிப் பெருகிய அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் – கட்டுரைகளின் தொகை எவ்வளவு? வகை வகையாக இவற்றை வகுத்து, தொகுத்து நூற் கண்காட்சியில் வைப்பதற்குரிய நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. டிசம்பர் 7, 8, 9 ஆம் நாட்களில் யாழ் பொது நூலகத்தில் இதைக் கண்ணுரக்கண்டு மனதார மகிழலாம்.

### ● நூற்றுண்டு நிறைவு மலர்

ஆய்வாளர்களினதும் உயர் வகுப்பு மாணவர்களினதும் சிந்தனையைத் தூண்டும் கருத்துக் கருவூலமாக மலரும் இம்மலர், நாவலர் பற்றிய பல புதிய ஆராய்ச்சிகளின் களமாகவும் அமைகின்றது,

### ● நாவலர் விழாக்கள்

நூற்றுண்டு நிறைவை முன்னிட்டு 100 இடங்களிலாவது நினைவு விழாக்கள் நடைபெறச் செய்வதற்கு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தோம். இப்போது 10 ஆயிரம் பாடசாலைகளிலும் – தமிழ், சிங்கள, ஆங்கில மொழிப் பாடசாலைகள் அனைத்திலும் - நவம்பர் 30ம் திகதி இவ்விழாவைக் கொண்டாடுமாறு கல்வி அமைச்சு, சபையின் வேண்டுகோளின் பேரில், கட்டளை பிறப்பித்திருக்கின்றது. சென்ற தலைமுறைப் பெரியாராகிய நாவலரை இலங்கையின் இன்றைய இளம் சமுதாயத்தினர் அனைவரும் அறிந்துகொள்வதின் மூலம் இனங்கட்கிடையில் பரஸ்பர நல்லெண்ணமும் நல் விளப்பமும் ஏற்படும். இதைச் செய்ய முன்வந்துள்ள கல்வி அமைச்சுக்கு எமது மகிழ்ச்சி கலந்த நன்றியைத் தெரிவிக்கின்றேம்.

### ● இன்னும் பல . . . . .

நாவலர் எழுதிய நூல்களை மறு பதிப்புச் செய்து வெளியிடுவது அவரின் நூற்றுண்டு நினைவாகச் செய்யக்கூடிய – செய்ய வேண்டிய – பொருத்தமான பணிகளிலொன்றுகும். இதனையும், அவர் பிறந்த இல்லம் அமைந்துள்ள காணியில் நாவலர் கலாசார நிலையத்தை அமைப்பதையும், நூற்றுண்டு நினைவு முத்திரை வெளியிடுவதையும் நூற்றுண்டு நிறைவுக்குமுன் செய்து தருமாறு அரசாங்கத்திடம் சபை கோரியுள்ளது.

### ● இச்சிறப்பிதழ்

பெருஞ் செலவில் நூற்றுண்டு நிறைவு மலரின் தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில், அம்மலருக்கு முன்னேடியாக இவ் வாறுன சிறப்பிழழையும் வெளிக் கொணர்வதால் பல இன்னல்களும் இடர்ப்பாடுகளும் எம்மை எதிர்கொண்டன. எனினும் நாவலரன்பர்களின் நல்லாதரவு, செயலாற்றல்மிக்க விழாக் குழுவினரின் உற்சாகமான ஒத்துழைப்பு முதலியவற்ருல் எம்முயற்சி கைகூடி இம்மலர் இன்று உங்கள் கரங்களில் இனிது தவழ்கிறது. வாழ்த்துரைகள் வழங்கிய தலைவர்கள் மதப் பெரியார்கள், கட்டுரைகள் தந்துதவிய அறிஞர்கள் ஆகியோருக்கும், அட்டையை அலங்கரிக்கும் அர்த்தமுள்ள ஓவியத்தை வரைந்துதவிய "சபா" அவர்களுக்கும், குறுகிய காலத்தில், அழகிய முறையில் இதை அச்சிட்டுத்தந்த 'குமரன்' அச்சக ஊழியர்களுக்கும், இச்சிறப்பிதழின் பொறுப்பாசிரியர் என்ற முறையிலும் விழாச் செயலாளர் என்ற முறையிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேம். ×

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS OF

KAVITHA

TRAVEL AGENTS & TOUR OPERATORS

91, Chatham Street,

COLOMBO-1.

Cable : KAVITHA

Phone : 29799

*Branch :* 22, UPSTAIRS,
NEW MODEL MARKET,
JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருவிழாப் பொலிவுற - - - - - -

— டாக்டர், சி. சண்முகநாதன் —
அமைப்பாளர், விழா நிதிக்குழு

இலங்கையில் சைவ சமயத்தின் இன்றைய மறுமலர்ச்சிக்கும், தமிழர்களின் கல்வி கலாசார வளர்ச்சிக்கும், தமிழ் மொழியின் ஏற்றமிகு எழுச்சிக்கும் காரணராக விளங்கு பவர் எங்கள் நாவலர் பெருமனே!

அவர் மறைந்து ஒரு நூறு ஆண்டுகளின் பின்பு கூட - அவ்ரை மறந்து விட முடியாத படி எல்லோரது இதயத்திலும் அவர் நாமம் நிறைந்திருப்பது அவர் புரிந்த தன்னலமற்ற, தீர்க்க தரிசனமான தொண்டுகளினுலேயாம்.

என்றும் நெஞ்சில் நிறைந்துள்ள நாவலர் பெருமானை, அவரின் நினைவு நூற்றுண்டாகிய இவ்வாண்டில். மேலும் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்வதற்கும், அவர் நாமத்தை இளஞ் சிருரிடம் பரப்புவதற்குமாக நிகழ்ச்சிகள் பலவற்றை எமது சபை ஏற்பாடு செய்துள்ளது. ஆண்டு முழுவதுமே தொடர்ந்து பல நிகழ்ச்சிகளை நடத்துவதே பொருத்தம்; எனினும் சபையின் பொருளாதார காரணங்களினுல் ஆறு மாத காலத்துக்கு மட்டுமே நூற்றுண்டு விழாக் கொண்டாட்டங்களை ஏற்பாடு செய்ய முடிந்தது.

ஒருநாள் விழாவை நடத்தவே ஏராளமான பணச்செலவுகள் ஏற்படுகின்ற இக்காலத்தில், பொருத்தமான பல்வேறு அம்சங்களுடன் தொடர்ந்து ஆறு மாத காலத்துக்கு கொண்டாட் டங்களை ஏற்பாடு செய்வதென்பது, மிகமிகப் பெரிய பொறுப்பாகும்.

விழாச் செலவுகளுக்கு மட்டுமல்ல, பேச்சு – கட்டுரைப் போட்டிகளுக்கான தங்க, வெள்ளிப்பதக்கங்கள், வெள்ளிக்கிண்ணங்கள், நூல் வெளியீடுகள், நூற்றுண்டுமலர், நூற் கண்காட்சி, அறிவுறுத்தற்சின்னங்கள், கலாசார நிகழ்ச்சிகள், குருபூசை - அன்னதானம் முதலியவற்றுக்கெல்லாம் ஏராளமான நிதி தேவை. நிதியின்றி இவற்றைச் சிறப்பாகச் செய்ய இயலாது.

நிதியைத் திரட்டி வைத்துக் கொண்டுதான் நூற்றுண்டு விழாவுக்கான திட்டங்கள் வகுக்கப்பட்டவையல்ல. பெரியார்களினதும் பொது மக்களினதும் ஒத்துழைப்பை எதிர் பார்த்தே இத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நாவலர் நினைவாகச் சபை சென்ற காலங்களில் மேற் கொண்ட பணிகள் யாவும் இறுதியில் இனிதே நிறைவேறியுள்ளன. நூற்றுண்டு விழா நிகழ்ச்சிகளையும் அவ்வாறு அமைவதற்கு அனைவரும் உதவுவார்களென நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிருேம்.

× — ×

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# V. KANAGALINGAMPILLAI & SON

**17, St. John's Road,**

**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்றகாலத்தின் பழுதிலாத்திறனை நிகழ்காலத்திற்கு உணர்த்தும் விழா

வே. சிவராசா, ஆ. சிவநேசச் செல்வன்
இணை அமைப்பாளர்கள், யாழ். விழா ஏற்பாட்டுக் குழு

காலந்தோறும், தோன்றிய பெரியார்களின் வாழ்க்கையையும், பணிகளையும் மதிப்பீடு செயதலும் அவ்வவர் செயலாண்மைத் திறன்களை நிகழ்காலவுலகிற்கு அறிமுகம் செய்வதும் அவசியமான தொரு செயலாகும். ஏறத்தாழ அரை நூற்றூண்டு காலம் வாழ்ந்து தமிழ் கூறும் நல்லுலகின் பன்முகப்பட்ட போக்குகளைத் தமது ஆளுமைக்கேற்ப நெறிப்படுத்திய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் பணிகள் கடந்த இரு தசாப்தங்கள் செவ்வனே மதிப்பீடு செய்யப்பட்டமை யாவரும் அறிந்ததொன்று. "சைவங்காத்த சான்றோன் நாவலர் பெருமான்" என்ற நிலையின் வளர்ச்சியாகத் தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை யெனவும், ஈழத்து விடுதலை இயக்கத்தின் முன்னோடியெனவும் நாவலர் பணிகள் நன்கு மதிப்பீடு செய்யப்பட்டன. சென்ற காலத்தின் பழுதிலாத்திறனை நிகழ்காலத்திற்கு உணர்த்தும் முயற்சிகளின் கொடுமுடியாகவே "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்" சபையும் தோற்றம் பெற்றது.

இவ்வாண்டு நடைபெறும் நாவலர் நினைவு நூற்றூண்டு விழா கடந்த காலமுயற்சிகளின் எதிரொலியாகவும், நாவலர் பணிகளின் இலட்சிய வீரத்தையும், வேகத்தையும் மேலும் தூண்மையாக நோக்கும் வாய்ப்பினை ஏற்படுத்துவதாகவும் இருக்கும் என எதிர்பார்கின்றோம். பார்வையில் பூவிழாது, நாவலரின் நற்பணிகளை ஆழமாகவும் அகலமாகவும் நோக்கும் வகையிலே ஆய்வரங்குகளும், நூல்வெளியீட்டு முயற்சிகளும், நினைவு நூற்றூண்டு விழா மலரும், விழாவின் பிரதான நிகழ்ச்சிகளாக நூற்கண் காட்சியும் பிறவும் நடைபெறுவதற்குரிய முயற்சிகள் யாழ்ப்பாணத்திலே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சமூக நிகழ்ச்சிகளினதும், விழாக்களினதும் வெற்றி மக்களின் பங்குபற்றலையும் தாக்கத்தையும் மையமாகக்கொண்டே மதிப்பீடு செய்யப்பட வேண்டும். நாவலர் சிந்தனைகளைச் சமூகத்தின் பல்வேறு மட்டத்தினரிடையேயும் பரவச் செய்யும் நோக்குடனே எமது விழாக் குழு செயற்றிட்டங்களை வகுத்துள்ளது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி இ. கணபதிப் பிள்ளை அவர்களின் ஆலோசனைகளுடன் வரதரின் நாவலர் பெருமான் பற்றிய நூல் வெளியீடு சிறுவர்களை மனத்திற்கொண்டு வெளியிடப்படுகின்றது. நாவலர் ஆய்வு முயற்சிகளின் வெளிப்பாடாக மலர் அமைகின்றது. இது அறிஞர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெருவிருந்தாகும். யாழ்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஆய்வரங்கும் நாவலர் பற்றிய மறுமதிப்பீடாக அமையும் என எதிர்பார்க்கின்றோம். யாழ் மத்திய கல்லூரி நடாத்தும் விழா கல்லூரி மாணவர் மத்தியில் நாவலர் பணிகளை முன்னெடுத்துச் செல்வதாகவும் நாவலர் பேர்சிவல் தொடர்புகளை இனங் காட்டுவதாகவும் அமைகிறது. நூற்கண்காட்சி, நாவலர் ஆக்கங்களையும் நாவலர் பற்றிய ஆக்கங்களை ஒருமுகப்படுத்தும் வகையிலும் அமைகின்றது. பல்வேறு தரவுகளைக்கொண்ட நூல் விபரப்பட்டியல் ஒன்றும் வெளியிடப்படும். நாவலர் பணிகளை நினைவூட்டும் அறிவுறுத்தற்றூண்கள் வண்ணார் பண்ணை சிவன்கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், புலோலி சித்திவிநாயகர் ஆலயம் கோப்பாய் சைவப்பிரகாச வித்தியாசாலை, திருக்கேதீச்சரம் ஆகிய இடங்களில் நிறுவுவதற்கு மேற் கொள்ளப்பட்டிருக்கும் முயற்சி குறிப்பிடக்கூடிய தொன்றாகும்.

நாவலர் பணிகளை நமது சமூகத்திற்கு அறிவுறுத்தும் இவ்விழாவின் வெற்றிக்கு அநுசரணையாகவும், ஆதரவாகவும் பேருதவி புரியும் அன்பர்களின் சமூகப் பணியார்வம் மேலும் தொடர்க என வாழ்த்துகிறோம்.

×

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST

COMPLIMENTS

OF

SANKAR BROTHERS

216, 4th CROSS STREET,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
from

KAMALA JEWELLERS
84, Sea Street.
COLOMBO-11.

Telephone: 27648

Library
SRI LANKA

Donated by:-
PROF. K. KAILASAPATHY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவல ரென்கையிலே
நாவெல்லாந் தேனூறும்
ஜீவ மலரினிலே — கிளியே!
சிவம் வந்து தித்திக்குமே.

× × ×

அஞ்சாத நெஞ்சுடையார்!
அறநெறி வாழ்வுடையார்
துஞ்சாத தொண்டுடையார் — கிளியே!
சுதந்திர நாவலரே.

× × ×

ஆழக்கடலைப் போலே
அறிவுக்கடலுடையார்
ஈழத்துச் சிங்கமடி — கிளியே!
இலக்கியச் சுரங்கமடி.

× × ×

பைந்தமிழ் வியாசரவர்
பசுபதி நேசரவர்
ஐந்தாங் குரவரடி! — கிளியே!
ஆருந்தரம் வாராரோ?


# PUSHPA TRADES

"ESSENCE HOUSE"

No. 133, Dam Street,
Colombo-12.

Dial : 36293


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் நினைவு நூற்றாண்டு
# மாணவர் பேச்சுப் போட்டி

கி. லக்ஷ்மண ஐயர், வித்தியாதிபதி
தலைவர், பேச்சுப் போட்டி ஏற்பாட்டுக் குழு

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த நாவலர் பெருமான் சைவ சமயத்துக்கும், தமிழ் மொழிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் புரிந்த தொண்டுகள் எண்ணிறந்தவை; பலதிறத்தவை. அவர் மறைந்து நூறு ஆண்டுகளாகின்ற இவ்வேளையிலும், அவருடைய நாமமும் பணிகளும் மேலும் வளர்ந்தோங்கிய வண்ணமே உள்ளன.

நாவலர் பெருமானைப்பற்றிய சிந்தனையையும் ஆர்வத்தையும் இன்றைய இளந்தலைமுறையினராகிய மாணவர்களிடம் தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்ட பேச்சுப் போட்டிக்கு எதிர்பார்த்ததற்கும் அதிகமான வரவேற்பும் ஆதரவும் கிடைத்துள்ளன.

LIBRARY

நாட்டின் பல பகுதிகளையுஞ் சேர்ந்த சுமார் ஆயிரம் மாணவ மாணவிகள் இப்போட்டியிற் கலந்துகொள்ள ஆர்வத்துடன் விண்ணப்பித்துள்ளனர். கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் இப்போட்டிக்கான பூர்வாங்கத் தேர்வுகள் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்குமுன்னர் கொழும்பு தெற்கு, சிலாபம், இரத்தினபுரி, கண்டி, நுவரேலியா, மட்டக்களப்பு, கல்முனை, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய கல்விப் பிரதேசங்களில் நடைபெறவுள்ளன. குறிப்பிட்ட பிரதேசங்களின் கல்விப் பணிப்பாளர்கள் பிரதம கல்வி அதிகாரிகள் இப்பூர்வாங்கத் தேர்வுகளைத் தத்தம் பகுதிகளில், எமது சபை சார்பில், நடத்தித் தருமாறு வேண்டப்பட்டுள்ளனர்.

போட்டிக்கான இறுதித் தேர்வு 1-12-79 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருப்பதோடு, வெற்றி பெறுவோருக்கான பரிசில்களும் அத்தினத்தன்று நடைபெறும் நாவலர் தேசியப் பெருவிழாவில் வழங்கப்படும்.

ஒவ்வொரு பிரிவிலும், அகில இலங்கை அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தங்க, வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், கல்விப் பிரதேச அடிப்படையில் முதலிடம் பெறுபவர்களுக்கு வெள்ளிக் கிண்ணங்களும் பரிசில்களாக வழங்குவதற்குச் சபை ஏற்பாடுகள் செய்துள்ளது. ×

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

# UNITED HARDWARE STORES

No. 346, OLD MOOR STREET,

COLOMBO 12.

Phone : 32445

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாவலர் நினைவு நூற்றாண்டு:
# மாணவர் கட்டுரைப் போட்டி

**பேராசிரியர் ஆ. சதாசிவம்**
தலைவர், கட்டுரைப் போட்டிக்குழு

ஈழத்துத் தமிழிலக்கிய வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டு 'நாவலர் யுகம்' என அழைக்கப்படும். இருபதாம் நூற்றாண்டில் தமிழுக்குஞ் சைவ சமயத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றி வரும் நூற்றுக்கணக்கான ஈழத்துப் புலவர்கள் நாவலரின் பரம்பரையினர் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இன்று நாவலர் ஒரு தேசிய வீரராக இந்நாட்டுப் பெரும்பான்மையினரான சிங்கள மக்களாலே போற்றப்பட்டு வருகிறார். பல்கலைக் கழகங்கள் நாவலரின் நூலைப் பாடநூலாக ஆக்கியும் நாவலர்பற்றி முதுமாணி, கலாநிதிப் பட்டதாரிகள் ஆய்வு செய்யத் தூண்டியும் வரும் இக்காலத்தில் கல்லூரி மாணவர்கள் அனைவரும் நாவலரைப்பற்றி அறிந்திருக்க வேண்டியது மிகவும் விரும்பத்தக்கதாகும். இக்காரணத்தினாலேயே நாவலர் நூற்றாண்டைக் கொண்டாடும் இக்காலத்தில் நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் கட்டுரைப் போட்டிகளில் ஈடுபடுமாறு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபை தூண்டியுள்ளது. நாவன்மை படைத்த மாணவர்கள் பேச்சுப் போட்டிகளில் ஈடுபட்டு தமது திறமையை வெளிப்படுத்த ஏற்ற நடவடிக்கை நாவலர் சபையினரால் எடுக்கப்பட்டுள்ளது.

ஈழம் வாழ் மக்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாயினும், மேல்நாட்டுப் பண்பாடு எமது பண்பாட்டை விழுங்கிவிடும் நிலையிலிருந்து எமது பரம்பரையினரைப் பாதுகாத்த தேசிய வீரர் ஆறுமுக நாவலரைப் போற்றி விழா எடுக்க முன்வந்திருப்பது பெருமைக்குரியது. இளஞ் சந்ததியினராகிய மாணவரின் பிஞ்சு மனத்தில் ஆழமாகப் பதிந்த நாவலர் பெருமான் என்றென்றும் எமது பண்பாட்டின் மூலவித்தாக வாழ்வார் என இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Compliments

# SAMUEL, SONS & COMPANY LIMITED.

Engineers, Constructors, Manufacturers, Merchants

**P. O. Box 46**

**371, Old Moor Street,**

**COLOMBO 12.**

Telephone : 32341 - 4

Telegrams : "ECHIRON" Colombo.

*Branches :*

**Hospital Road, Jaffna**

**&**

**Kandy Road, Kilinochchi.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் புத்தகக் கண்காட்சி

ச. அம்பிகைபாகன்
தலைவர், புத்தகக் கண்காட்சிக் குழு

1969ம் ஆண்டு நடைபெற்ற நாவலர் விழாவின் போது ஒரு புத்தகக் காட்சியை யாழ்ப்பாணத்தில் நடத்தினேம். அது சிறப்பாக நடைபெற்றமையால் பலரின் வேண்டு கோளுக்கிணங்க கொழும்பிலும் இக்காட்சியை நடத்தினேம். பின்னர் 1971ம் ஆண்டில் ஆறுமுக நாவலலரையும் வேறுசில பிரமுகர்களையும் கௌரவித்து அரசாங்கம் ஞாபகார்த்த முத்திரை வெளியிட்ட போது கொழும்பு கலாப வனத்தில் நடைபெற்ற புத்தகக் காட்சியில், நாவலர் புத்தகக் காட்சியும் இடம் பெற்றது. இக்காட்சிகளில் நாவலரின் பழைய பதிப்பு நூல்களும், அவர் உபயோகித்த சில பொருள்களும் விசேஷ இடத்தைப் பெற்றன. இப்பொழுது நடைபெறவிருக்கும் நாவலர் நூற்றுண்டு விழாவிலும் இவை இடம் பெறும் என எதிர்பார்க்கிறேம்.

மேற்கூறிய விசேஷ அம்சத்துடன் நாவலரைப் பற்றி வெளி வந்துள்ள நூல்களும் நாவலர் சமகாலத்தவர் நூல்களும், நாவலர் மாணவ பரம்பரையினரின் நூல்களும் இடம் பெற்றன. இம்முறை நாவலர் பாரம்பரியத்தைப் பாதுகாத்து வளர்த்த ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை, சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனுர், ஏ. விசுவநாதன் ஆகியோரின் நூல்களும் இடம் பெறவுள்ளன.

முன்பு நடைபெற்ற விழா, புத்தகக் காட்சிகள் முதலியவற்றின் பெறுபேருக நாவலரைப் பற்றி பல தரப்பட்ட ஆராய்ச்சிகள் நடை பெற்றுள்ளன. இவ்வாராய்ச்சி நூல்களும், கட்டுரைகளும் எதிர்வரும் புத்தகக் காட்சியில் விசேஷ இடம் பெறும்.

இவற்றுக்கு மேலாக நாவலர் பல பத்திரிகைகளுக்கும் எழுதிய கடிதங்கள், கட்டுரைகள் முதலியவற்றின் படப் பிரதிகள் (Photo-copy) காட்சியில் வைக்கப்படும்.

இப்புத்தகக் காட்சி சிறப்பாக நடைபெற நாவலர் நூல்கள், நாவலர் சம்பந்தமான நூல்கள், கட்டுரைகள் முதலியவற்றை வைத்திருப்போர் அவற்றைக் காட்சிக்குக் கொடுத்துதவுமாறு கேட்டுக் கொள்கிறேம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Compliments*

*from*

↓

# ARASAN PRINTERS

**30, Hyde Park Corner,**

**COLOMBO 2.**

T'phone : 2 6 4 8 2

T'grams ; ARASPRINT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு நிறைவு நினைவு மலர் - ஒரு முன்னோட்டம்

பேராசிரியர் க. கைலாசபதி
தலைவர், நூற்றாண்டு மலர்க்குழு

பொதுவாக நூற்றாண்டு நினைவு மலர்கள் சம்பந்தப்பட்ட பெரியாரின் அருமை பெருமைகளை எடுத்துரைக்கும் வகையில் அமைவதோடு, அப்பெரியார் வாழ்ந்த காலம் காலத்தின் சூழ்நிலை, அச்சூழ்நிலையில் அப்பெரியார் இயங்கியமுறை, ஒரு நூற்றாண்டுக் காலப்பகுதியில் வரலாற்றாய்வின் வளர்ச்சி, உலகரீதியான முன்னேற்றத்தில் சம்பந்தப்பட்ட பெரியாரது இடம் முதலியவற்றையும் ஆராய்வது வழக்கமாகும். நூற்றாண்டு நிறைவு நினைவுக் கொண்டாட்டங்களும், கருத்தரங்குகளும், வெளியீடுகளும் மேற்கூறிய வகையான ஆய்வுகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் மறு மதிப்பீடுகளுக்கும் வாய்ப்பளிப்பன.

இவ்வருட இறுதியில் கொண்டாடப்படவிருக்கும் நாவலர் பெருமான் நூற்றாண்டு நிறைவு நினைவுக் கொண்டாட்டத்தையொட்டி வெளிவரவிருக்கும் மலரும் அத்தகையதொரு ஆய்வு மலராகவே அமைகிறது. நாவலர் அவர்கள் மறைந்த காலத்திலிருந்து அவரைப்பற்றிய ஆய்வுகள் அங்குமிங்குமாய் அவ்வப்போது நடைபெற்று வந்துள்ளன. தற்சமயம் - குறிப்பாக இலங்கைத் தமிழ் இலக்கியம் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் பாடநெறியின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில் - நாவலர் பற்றிய கண்ணோட்டமும் கருத்தும் ஆழமாகவும் அகலமாகவும் ஆராயப்படுவது எதிர்பார்க்கக் கூடியதே. உதாரணமாகக் கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் பல்கலைக் கழகங்களில் எம். ஏ. (முதுகலை) பட்டத்திற்காக, நாவலர் பரம்பரையினர் சிலரைப்பற்றிய நுண்ணாய்வுகள் கடந்த சில வருடங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன' சி. வை: தாமோதரம் பிள்ளை முதல் பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை வரை தனிப்பட்ட முதன் முயற்சியாளர்பற்றிக் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சிகள் கடந்த பத்தாண்டுகளுக்குள் நடைபெற்றுள்ளன. இவை யாவும் அச்சேறியுள்ளன என்பதற்கில்லை. ஆயினும் பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் அறிஞர்பற்றியும், தமிழ்க் கல்விபற்றியும் அநேக புதிய விஷயங்கள் இப்பொழுது நமக்குத் தெரியவருகின்றன. இவை அனைத்தும் நாவலர்பற்றிய விளக்கத்தைக் கூர்மைப்படுத்தி நமது அறிவை விசாலிக்க உதவுகின்றன. சுருங்கக்கூறின் இலங்கைத் தமிழிலக்கிய வரலாறு முழுமையும் தன்னிறைவும் பெறத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் வெளிவரும் நாவலர் நினைவு மலர் இவ்வறிவுப் பெருக்கத்தையும் விரிவையும் அவசியம் உட்கொண்டு பிரதிபலித்தே ஆகவேண்டும். ஆகவே, 1979ல் வெளிவரும் நாவலர் நினைவு மலர் பெருமளவில் ஆராய்ச்சிபூர்வமான மலராக அமைகிறது என்று கூறுவது மிகையாகாது. மொத்தத்தில் மலர் நான்கு பகுதிகளாக அமையும். முதலாம் பிரிவில் சமயப் பெரியார்கள், சமூகத் தலைவர்கள், பிரமுகர்கள் முதலியோரின் அஞ்சலிகளும் வாழ்த்துரைகளும் இடம்பெறும். ஒவ்வொரு தலைமுறைப் பெருமக்களும் நாவலர் போன்ற வரலாற்றுப் பெரியோருக்கு வணக்கம் செலுத்துவதை இப்பிரிவு பிரதிபலிக்கும்.

இரண்டாம் பிரிவில், நாவலரைப் பல கோணங்களிலிருந்து நோக்கி அவரது பன்முகப்பட்ட ஆளுமையையும் அருஞ் செயல்களையும் மதிப்பிடும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இறையியல், கல்வியியல், சமூகவியல், இலக்கியம், மொழியியல், அரசியல், வரலாற்றியல் முதலிய துறைகளைச் சார்ந்த ஆய்வாளர்கள் அத்துறைகளில் நாவலர் கொண்டிருந்த எண்ணங்களையும் ஈடுபாட்டையும் ஆராய்கிறார்கள். புதிய பரிமாணங்களைக் கண்டறிய இவ்வாய்வுக் கட்டுரைகள் வழி வகுக்கும் என நம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்ளும் பிரிவில், நாவலர் பரம்பரையினருள் முக்கியமானவர்கள் சிலரைப்பற்றிய சிறப்பு ஆய்வுகள் இடம்பெறும். சி. வை. தாமோதரம் பிள்ளையிலிருந்து பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரையில் வந்துள்ள ஞான பரம்பரையினர் இப்பிரிவில் அடங்கும் கட்டுரைகளில் ஆராயப்படுவர். நாவலருக்குப்பின் தேசியம், சமயம், கல்வி, சமூகம், இலக்கியம் முதலாய பலதுறைகளில் அவருக்குப் பின்வந்தோர் எத்தகைய முயற்சிகளை மேற்கொண்டனர் என்பதையும், நாவலர் மரபினை எவ்வாறு தொடர்ந்து வளர்த்தனர் என்பதையும், இக்கட்டுரைகள் எடுத்து விளக்குகின்றன. சென்ற நூற்ளுண்டின் நடுப்பகுதியிலிருந்து இன்றுவரை பரிணமித்து வந்திருக்கிற இலங்கைத் தமிழ் இலக்கிய இலக்கண கலாசார பாரம்பரியத்தைத் தெளிந்துகொள்வதற்கு இவ்வாய்வுகள் பெரிதும் உதவும்.

நான்காம் பிரிவில், நாவலர் பற்றிய பலதரப்பட்ட செய்திகளைக் கொண்ட தகவற் களஞ்சியம் இடம்பெறும். மாணுக்கருக்கும் ஆய்வாளருக்கும் உசாத்துணையாக விளங்கக் கூடிய இப்பிரிவு, மலருக்கு முத்தாய்ப்பு வைத்ததுபோல அமைகின்றது.

பல்கலைக்கழக ஆய்வாளரும், மரபுவழித் தமிழறிஞரும், இளைய தலைமுறையைச் சேர்ந்த எழுத்தாளரும், இலக்கிய கர்த்தாக்களும் கவிஞரும் பங்குபற்றி உருவாக்கும் இம்மலர் நாவலர் பெருமானின் பெரு நினைவுக்கு ஏற்ற சின்னமாகவும் காணிக்கையாகவும் அமையும் என நம்புகிருேம்.

*Please Patronise*

*Our Advertisers*

*Who Patronised Us*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறவோம்!

கா. விசுவலிங்கம் ஜே. பி.
கூட்டுப் பொருளாளர், பொருளாளர்கள் சார்பில

''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு''

மக்களின் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த வள்ளுவப் பெருமானின் வாக்கு அன்றும் இன்றும், இனிமேல் என்றும் பொருத்தமானது; எங்கும் எல்லோருக்கும் பொருத்தமானது.

நாவலர் பெருமான் அன்று புரிந்த ஒப்பற்ற பணிகளுக்கு இன்றைய தலைமுறையினர் செலுத்தும் நன்றிக் கடனின் ஒரு சிறு வெளிப்பாடாக நாவலர் நூற்றாண்டு நினைவு விழாக் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. சென்ற நூற்றாண்டில் அவராற்றிய அருந் தொண்டுகளுக்காக நாளெல்லாம் நாம் அனைவரும் நாவலரை நினைந்து போற்ற வேண்டிய கடமைப் பாடுள்ளவர்கள். சிந்தையால் நினைப்பதுடன் மட்டுமல்லாது அப்பெருமானின் நாமத்துக்குப் பொருத்தமான நிலைவுப் பணிகளையும் நிறைவேறச் செய்ய வேண்டியது எதிர்காலத்திலும் அவர் நாமம் நிலைத்து நிற்கச் செய்யும் முயற்சியாகும். இந்த முயற்சியில் எமது சபை கடந்த பத்து ஆண்டுகளாக ஈடுபட்டு வருவது எல்லோரும் அறிந்த விஷயம்.

எமது சபை ஸ்திரமான பொருளாதாரத்தைத் தன்னகத்தே கொண்டதல்ல. நாவலர் நினைவுப் பணிகளைச் செய்ய வேண்டுமென்ற அடங்காத ஆவலும், செய்து முடிப்போம் என்ற தளராத தன்னம்பிக்கையும் மட்டுமே எங்களிடமுள்ளவை. எங்கள் சபை மீது பொது மக்களுக்கிருக்கும் மதிப்பையும் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் அச்சாணியாகக் கொண்டே இப்பணிகளை நாம் நிறைவேற்றி வருகின்றோம். நாவலர் பணிகள் நடைபெறுவதற்கு சபை ஓர் கருவி மட்டுமே; அக்கருவி மூலம் பல பணிகளை நிறைவேற்றும் இயக்குநர்கள் நாவலரன்பர்களாகிய பொதுமக்களே.

நாவலர் நினைவு நூற்றாண்டு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்தி முடிக்க எமது உத்தேசச் செலவு 60 ஆயிரம் ரூபா. இந்நிகழ்ச்சிகளுடன் மட்டும் நின்று விடாமல், நாவலர் நூல்களை மறுபதிப்புச் செய்தல், நல்லூர் நாவலர் நிலையம் தொடர்ந்தும் சிறந்த முறையில் இயங்க வழி செய்தல் இப்படியான பல தேவைகளுமுண்டு. பொதுமக்களினதும், பெரியோர்களினதும் தாராளமான நிதி உபகரிப்புகளைச் சபை எதிர்பார்க்கிறது. சபைக்கான நன்கொடைகள் அறக்கொடையாக அரசினால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், உபகரிப்பாளர்கள் வருமான வரிச் சலுகைக்கும் உரித்தாவர்.

நூற்றாண்டுவிழா நிதிக்கு இது வரை நன்கொடை புரிந்த பெரியார்களுக்கும், நிதி தருவதாக ஒப்புக்கொண்டிருக்கும் பேருள்ளம் படைத்தவர்களுக்கும், இச் சிறப்பிதழுக்கான விளம்பரங்களை நல்கியுதவிய வர்த்தப் பெருமக்கள், நிறுவனங்களின் நிர்வாகிகள் முதலியோருக்கும் எமது நெஞ்சார்ந்த நன்றியுரியது.

சிறப்பிதழுக்கான விளம்பரங்களைச் சிட்டாகப் பறந்து குறுகிய காலத்துள் சேகரித்துதவிய திருவாளர்கள்: க. இராமநாதன், சி. சண்முகநாதன், செ. சோ. சந்திரசேகரம், க. இளையதம்பி, நா. வீரசிங்கம், க. சுப்பிரமணியம், என். சொர்ணலிங்கம், எஸ். கனகராஜா, பி. கந்தசாமி, இளங்கோ முதலியோருக்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best

Compliments of

# K. S. SIVASANKARAN PILLAI

Import, Export, Wholesale & General Merchants

Commission Agent for Ceylon Produce

193, Keyzer Street

Colombo-11.

T'grams : " SIVABAKTHI "

T'phone : 26196

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH

BEST COMPLIMENTS

↓

# RATHGAMA STORES

Importers, Exporters & Commission Agents

**64, 4th CROSS STREET,**

**COLOMBO-11.**

Telegrams : YADCAR

Telephone : 20693



With the Best Compliments

of

↓

# ROTAX LTD.

DEALERS IN ALL TYPES OF ELECTRICAL GOODS

**113, Olcott Mawatha,**

**COLOMBO-11.**

T'Phone : 29973

T'Grams : "ROTAX"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments*
*from*

# SUNDARAM TRADING CO.,

*Importers, Wholesalers & Merchants of all types of Electrical Materials & Motors.*

Phone : Office : 22044
Residence : 20023

Cable : JEYRAJ

**P. O. Box 1623**
**"Naga Building"**
**81, 2/5-10, Prince Street**
**Colombo-11.**

With the Best Compliments

of

# CHEMAX

PRINTERS, PUBLISHERS & PAPER CONVERTORS

**7, Charles Place**

**DEHIWELA.**

Phone : 071—2455

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# ST. MARYS STORES

General Merchants & Milk Board Agent

**54, LAURIES ROAD,**

**BAMBALAPITIYA.**

Phone : 88569

With the Best Compliments

of

↓

# ANOMA TINKER WORKS

**196, KODIKAWATTE,**

**ANGODA.**

*Manufacturers of all kinds of tins.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YAMAHA

★ PIANOS

★ ELECTONE ORGANS

★ PIANICAS

*See the full range at the*

↓

**Yamaha Music Centre**

**Galle Face Court**
**Colombo 3.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை

# நாவலர் நினைவு நூற்றாண்டு

# 1979

ஜூலை மாதம் முதல் டிசம்பர் 10 வரையுள்ள
ஆறு மாத காலத்துக்கு
சபையால் ஏற்பாடு செய்யப் பெற்றுள்ள

## நிகழ்ச்சிகள்

**1979 ஜூலை**

**28.7.1979 — நூற்றாண்டுத் தொடக்க விழா**

இடம் : பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபம்

நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| தொடக்கப்பேருரை | : | உயர்திரு. வீ. சிவசுப்பிரமணியம், தலைவர், நாவலர் சபை |
| அஞ்சலியுரை | : | திரு. மு. சிவசிதம்பரம் பாராளுமன்ற உறுப்பினர் நல்லூர் |
| நூல் வெளியீடு | : | ஏழாலையூர்ப்புலவர் திரு. மு. கந்தையா எழுதிய ''நாவலர் பிள்ளைத் தமிழ்'' |
| வெளியீட்டுரை | : | திரு. கி. லக்ஷ்மண ஐயர் வித்தியாதிபதி |
| பாராட்டுரை | : | கலாநிதி H. W. தம்பையா Q. C. |
| சிறப்புரைகள் | : | கலாநிதி பொ. பூலோகசிங்கம் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி |

**1979 ஒகஸ்ட்**

**18.8.1979 — நாவலர் கருத்தரங்கு**

இடம் : யாழ்ப்பாணம் ட்றிம்மர் மண்டபம்

நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| தொடக்கவுரை | : | திரு. என். சோமகாந்தன் பொது அமைப்புச் செயலாளர் |
| தலைமையுரை | : | கலாநிதி H. W. தம்பையா Q. C. உபதலைவர், நாவலர் சபை |
| கருத்துரைகள் | : | திரு. நா. சுப்பிரமணியம் M. A. விரிவுரையாளர், யாழ், பல்கலைக்கழகம் |
| | | திருமதி மனோன்மணி சண்முகதாஸ் B. A. ஆசிரியை, முத்துத்தம்பி மகாவித்தியாலயம் |
| | | திரு. பிரேம்ஜி ஞானசுந்தரன் பொதுச் செயலாளர், முற்போக்கு எழுத்தாளர் சங்கம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1979 செப்டம்பர்**

20.9.1979 — மாணவர் பேச்சுப் போட்டிக்கான விண்ணப்ப இறுதி நாள்

**1979 அக்டோபர்**

1.10.1979 — மாணவர் கட்டுரைப்போட்டிக்கு கட்டுரைகள் அனுப்புவதற்கான இறுதி நாள்

28.10.1979 — சிறப்பிதழ் வெளியீட்டு விழா

இடம் : பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபம்

நிகழ்ச்சிகள்

வரவேற்புரை : திரு. வீ. சிவசுப்பிரமணியம்
தலைவர். நாவலர் சபை

அஞ்சலியுரைகள்: I. கௌரவ. எஸ். தொண்டமான்
கிராமிய தொழிலபிவிருத்தி அமைச்சர்

II. சேர். செனரத் குணவர்தன
தலைவர், இலங்கை பௌத்த காங்கிரஸ்

III. டொக்டர் எம். சி. எம். கலீல்
தலைவர், இலங்கை முஸ்லிம் லீக்

சிறப்பிதழ் வெளியீட்டுரை: திரு. டி. எம். சுவாமிநாதன்
தலைவர், விழா மத்திய குழு

சிறப்புரை : திருமதி பாலம் லக்ஷ்மணன்

நாட்டிய நாடகம் : "சாகுந்தலம்"
தயாரிப்பு: திருமதி கௌரீஸ்வரி ராஜப்பன்

**1979 நவம்பர்**

நாடெங்கும் நாவலர் விழாக்கள்
(விபரம் வேறு பக்கங்களில் காண்க)

30.11.1979 — சகல பாடசாலைகளிலும் நாவலர் தினம் அனுஷ்டிப்பு
(சபையின் வேண்டுதலின் படி இதற்கான ஏற்பாட்டைக் கல்வி அமைச்சு செய்துள்ளது)

**1979 டிசம்பர்**

1—12—1979 காலை : பேச்சுப் போட்டி இறுதித் தேர்வு
இடம் : பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி
மாலை : நாவலர் தேசியப் பெருவிழா
இடம் : வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபம்

நிகழ்ச்சிகள்

தேசத் தலைவர்களின் அஞ்சலியுரைகள்
நூற்றுண்டு மலர் வெளியீடு
பரிசளிப்பு வைபவம்
கலை நிகழ்ச்சிகள்

2-12-79 : கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் அறிவுறுத்தற் றூண் திறந்து வைத்தல்

3-12-79 முதல் 5-12-79 வரை } மற்றைய இடங்களில் அறிவுறுத்தற் றூண்கள் திறந்து வைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**6–12–1979** காலை : **நூற்றாண்டு மங்களப் பெருவிழா**

இடம் : **யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபம்**

நிகழ்ச்சிகள்

திருவுருவப்படம் திறந்து வைத்தல்

தொடக்கப்பேருரை : பேராசிரியர் சு. வித்தியானந்தன்
துணைவேந்தர், யாழ். ப. க.

தலைமைப்பேருரை : திரு. வீ. சுப்பிரமணியம்
தலைவர், நாவலர் சபை

**6-12-79** மாலை : வண்ணார் பண்ணை சிவன் கோவிலில் அறிவுறுத்தற்றூண் திறந்து வைத்தல்
திருவுருப்பட ஊர்வலம்

**நாவலர் வித்தியாலயத்தில் விழா**

நிகழ்ச்சிகள்

பண்ணிசை
சிறப்புரை
சுதாப்பிசசங்கம் :
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

**7–12–1979 பி ப. 4 : நாவலர் நூற்கண்காட்சி திறப்பு விழா**

இடம் : **யாழ்ப்பாணம் பொது நூலகம்**

திறந்து வைப்பவர் : திரு. இராஜா விஸ்வநாதன்
மாநகர முதல்வர்

பி. ப 6 : **யாழ். மத்திய கல்லூரியில் பொதுக்கூட்டம்**

**8– 12-1979 காலை 9 : நாவலர் ஆய்வரங்கு**

இடம்: **யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபம்**

**மாலை 5 : விழாப் பொதுக்கூட்டம்**

இடம் : **வீரசிங்கம் மண்டபம்**

நிகழ்ச்சிகள்

நூல் வெளியீடு : திரு. வரதர் எழுதிய
"நாவலர் சரித்திரம்"

சிறப்புரைகள் : பேராசிரியர் க, கைலாசபதி
சிவத்தமிழ்ச் செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
நாவலர் நாடகம்

**10-12-1979 நூறுவது குருபூசை விழா**

இடம் : **நல்லூரில் நாவலர் திருவுருவச்சிலை அமைந்துள்ள நாவலர் மணி மண்டபம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Import Your Re-conditioned*

**HONDA**

*Motorcycles Through Us*



**KAYCEY AGENCY**

1st Floor,
No. 40, New Moor Street,
COLOMBO-12.

T'Phone : 23652 Cable : KAYAGENCY


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடெங்கும்

# நாவலர் விழாக்கள்!

**23-10-79 வரை எமக்குக் கிடைத்த விபரங்கள் மட்டுமே இங்கு இடம் பெற்றுள்ளன. நாவலர் சபையின் வேண்டுதலின்படி விழாக்களை ஏற்பாடு செய்துள்ள ஸ்தாபனங்களுக்கு சபை தனது நன்றியைத் தெரிவிக்கின்றது.**

| திகதி | இடம் | விழாவை நடத்தும் ஸ்தாபனம் |
|---|---|---|
| 19-10-79 | கண்டி | இந்து சிரேஷ்ட பாடசாலை (விழா — கவியரங்கு, சிறப்புரைகள்) |
| 19-10-79 | மட்டக்களப்பு | வின்சன்ட் மகளிர் கல்லூரி (நாவலர் படத்திரை நீக்கம் சிறப்புரைகள்) |
| 25-10-79 | மூதூர் | கட்டைபறிச்சான் இந்து இளைஞர் மன்றம் (பொதுக் கூட்டம்) |
| 26-10-79 | கல்லாறு | கோட்டைக் கல்லாறு தெய்வநெறிக் கழகம் (கருத்தரங்கு) |
| 26-10-79 | களுவாஞ்சிக்குடி | சைவ மகாசபை (பேச்சுப் போட்டி, சிறப்புரைகள், குருபூசை) |
| 26-10-79 | குருக்கள்மடம் | கிரான்குளம் இந்து இளைஞர் மன்றம் (பொதுக் கூட்டம்) |
| 31-10-79 | தம்பிலுவில் | மகாவித்தியாலயம் (கருத்தரங்கு) |
| 3-11-79 | மட்டுவில் | தென் மட்டுவில் இந்து மன்றம் (விழா - பேச்சு - கட்டுரைப் போட்டி) |
| 4-11-79 | பண்ணாகம் | இந்து சமய விருத்திச் சங்கம் (விழா - பொதுக் கூட்டம்) |
| 5-11-79 | பதுளை | பாரதி வித்தியாலயம் (கருத்தரங்கு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 5-11-79 | மட்டக்களப்பு | கிரான் மகாவித்தியாலயம் (பேச்சு-கட்டுரைப் போட்டிகள், சொற்பொழிவுகள்) |
| 6-11-79 | கல்லாறு | பெரிய கல்லாறு மகா வித்தியாலயம் (கருத்தரங்கு) |
| 7-11-79 | வவுனியா | சுந்தரானந்த இந்து இளைஞர் சங்கம் (விழா - கருத்தரங்கு) |
| 7-11-79 | பம்பலப்பிட்டி | இந்துக் கல்லூரி (விழா – மாணவர் நிகழ்ச்சிகள்) |
| 7-11-79 | வவுனியா | சைவப் பிரகாச வித்தியாசாலை (பொதுக் கூட்டம்) |
| 8-11-79 | கெங்கல்ல | இரஜவெல தமிழ் மகா வித்தியாலய இந்து மாணவர் மன்றம் (விழா, பேச்சுப் போட்டி, சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள்) |
| 9-11-79 | இரத்துமலானை | இந்துக் கல்லூரி (விழா, கலை நிகழ்ச்சிகள்) |
| 9-11-79 | நிலாவெளி | மகா வித்தியாலயம் (விழா) |
| 9-11-79 | சாவகச்சேரி | இந்துக் கல்லூரி (கருத்தரங்கு) |
| 9-11-79 | கல்முனை | கார்மேல் பாத்திமாக் கல்லூரித் தமிழ் மன்றம் (பொதுக் கூட்டம், கலை நிகழ்ச்சிகள்) |
| 9-11-79 | அக்கரைப்பற்று | இ. கி. மி, மகா வித்தியாலயம் (பொதுக் கூட்டம்) |
| 10-11-79 | காவத்தை | அரசினர் தமிழ் வித்தியாலயம் (பொதுக் கூட்டம்) |
| 10-11-79 | காவத்தை | நீலகம தமிழ் வித்தியாலயம் (கருத்தரங்கு) |
| 10-11-79 | பலாங்கொடை | தமிழ் மகா வித்தியாலய மாணவர் இலக்கிய மன்றம் (விழா, கருத்தரங்குகள்) |
| 12-11-79 | வவுனியா | மகளிர் மகா வித்தியாலயம் (பொதுக் கூட்டம்) |
| 14-11-79 | முல்லைத்தீவு | மகா வித்தியாலயம் (பட்டிமன்றம், சிறப்புரைகள், கலை நிகழ்ச்சிகள்) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 14-11-79 | குருநாகல் | சைவ மகாசபை<br>(விழா–சிறப்புரைகள், கவியரங்கு, வில்லுப்பாட்டு) |
| 14-11-79 | வவுனியா | மகா வித்தியாலய இந்து மன்றம்<br>(விழா சிறப்புரைகள்) |
| 15-11-79 | புதுக்குடியிருப்பு | மகா வித்தியாலயம்<br>(விழா – சிறப்புரைகள்) |
| 15-11-79 | திருநெல்வேலி | கலாமன்ற சனசமூக நிலையம்<br>(விழா கட்டுரைப் போட்டி) |
| 15-11-79 | கொட்டாஞ்சேனை | விவேகாநந்த மகா வித்தியாலயம்<br>(உரையரங்கு, வில்லுப்பாட்டு) |
| 15–11–79 | தெல்தெனியா | சிதம்பரம் தமிழ் வித்தியாலயம்<br>(கருத்தரங்கு) |
| 16-11-79 | கொழும்பு | உவெஸ்லிக் கல்லூரி இந்துமாணவர் மன்றம்<br>(விழா – சிறப்புரைகள்) |
| 17-11-79 | மட்டக்களப்பு | அரசடி மகா வித்தியாலயம்<br>(பொதுக் கூட்டம்) |
| 17-11-79 | அராலி | அராலி தெற்கு சைவ இளைஞர் மன்றம்<br>(பொதுக் கூட்டம், கருத்தரங்கு) |
| 18.11-79 | மட்டக்களப்பு | இந்து சமய விருத்திச் சங்கம்<br>(பொதுக் கூட்டம்) |
| 18-11-79 | திருகோணமலை | இந்து வாலிபர் சங்கம்<br>இந்துக் கல்லூரியில் பெருவிழா |
| 19-11-79 | புத்தளம் | இந்துமகாசபை<br>(மாணவர் போட்டிகள், பரிசளிப்பு, கருத்தரங்கு) |
| 20-11-79 | நுகேகொடை | தமிழ் மகா வித்தியாலயம்<br>(பொதுக் கூட்டம்) |
| 24-11-79 | காரைநகர் | சைவ மகாசபை<br>(இரு நாட்களுக்குப் பெருவிழா) |
| 25-11-79 | வேலணை | இந்து வளர்ச்சிக் கழகம்<br>கலைமகள் சனசமூக நிலையம்<br>(விழா, கட்டுரை - பேச்சுப் போட்டிகள்) |
| 25-11-78 | நயினாதீவு | சனசமூக நிலையம்<br>(பொதுக் கூட்டம்) |
| 25-11-79 | நாவலப்பிட்டி | இந்து வாலிபர் சங்கம்<br>(கருத்தரங்கு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 25-11-79 | கண்டி | மத்திய மாகாணச் சைவ மகாசபை<br>திரு. பொ. பரமபாதன்<br>அவர்களின் தலைமையில் நடைபெறும்<br>பெருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சிகள் :<br>நாதஸ்வரக் கச்சேரி, பண்ணிசைக் கச்சேரி<br>சிறப்புரைகள் :<br>கலாநிதி வே. இராமகிருஷ்ணன்<br>திருமதி சிவபாக்கியம் குமாரவேல்<br>சைவப்புலவர் ந. சண்முகரத்தினம்<br>திரு. எம். எஸ். தயாபரன்<br>இன்னிசைக் கச்சேரி :<br>இசைமணி திரு. செல்லத்துரை |
| 28-11-79 | அனுராதபுரம் | விவேகானந்த சபை<br>(பேச்சுப் போட்டி, பரிசளிப்பு, பொதுக் கூட்டம்) |
| 28-11-79 | பதுளை | தமிழ்மகளிர் மகாவித்தியாலயத் தமிழ் மன்றம்<br>(விழா, சிறப்புரைகள்) |
| 29-11-79 | தெகியோவிற்ற | தமிழ் வித்தியாலயம்<br>(பொதுக் கூட்டம்) |
| 30-11-79 | குருக்கள்மடம் | இந்து சமய விருத்திச் சபை<br>(கருத்தரங்கு) |
| 1-12.79 | கைதடி | சைவச் சிறுவர் இல்லம்<br>(1-12-79ல் கருத்தரங்கும் 5-12-79ல் விழாவும்) |
| 2-12-79 | நீர்கொழும்பு | இந்து இளைஞர் மன்றம்<br>(விழா - சிறப்புரைகள்) |
| 2-12-79 | மல்லாகம் | இந்து சமய அபிவிருத்திச் சங்கம்,<br>முன்னேற்றச் சங்கம், மாதர் சங்கம்<br>இணைந்து நடத்தும் 3 நாள் விழாவின் ஆரம்பம்<br>(கந்தபுராண படனம், கட்டுரை,<br>பேச்சுப் போட்டிகள், பரிசில் வழங்கல், விழா) |
| 4-12-79 | உடப்பு | தமிழ் மகா வித்தியாலயம்<br>(பொதுக் கூட்டம்) |
| 5-12-79 | வாகரை | மகாவித்தியாலய மாணவர் மன்றம்<br>(கருத்தரங்கு) |
| 9-12-79 | நாவலப்பிட்டி | இந்து வாலிபர் சங்கம்<br>(நூற்றாண்டுப் பெருவிழா :<br>கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்பு) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடன்பாட்டுக் கல்வியை வளர்த்தவர் — நாவலர்
திருக்குறளை அச்சேற்றியவர் — நாவலர்
திருக்கோவையாரை அச்சேற்றியவர் — நாவலர்
வசன நடை தந்தவர் — நாவலர்.

**இந்த மகானை**

**நாம் என்றும் மறக்கலாகாது.**

இதுவும் ஒரு தொண்டு
என்பதே எமது எண்ணம்.

↓

# சரஸ்வதி ஸ்ரோர்ஸ்

48, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12.
தொலைபேசி : **35331**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நமக்கு இந்தச் சரீரம் கிடைக்கப்பெற்றது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்."

இம் மந்திரத்தை நமக்கு உபகரித்த

மகான் நாவலரை

மனதில் இருத்திப் போற்றுவோம்.


# NEW SRI MURUGAN STORES

49, OLD MOOR STREET,

COLOMBO-12.

Phone ; 33770


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பெருமான்

நினைவு நூற்ருண்டுப் பெருவிழா

சிறப்புற வாழ்த்துகிருேம்.

## சி. அருணுசலம் செட்டியார் & சன்ஸ்

165. 5ம் குறுக்குத் தெரு,

கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Wishes from

# NITHYAKALYANI JEWELLERS

*Jewellers & Gem Merchants*

**40, SEA STREET,**

**COLOMBO-11.**

Telephone : 21617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஆறுமுக நாவலனர்

— விபுலானந்த அடிகள் —

தொல்லியல் வழுவாச் சைவநூற் புலவர்
தூநெறித் தமிழுரையாளர்
நல்லியற் புலவர் இசைதரும் புலவர்
நாடக நவிற்றிய புலவர்
சொல்லியற் றொகைநூல் வானநூல் தருக்கம்
தோமறு கணிதநூல் முதலாம்
பல்கலைப் புலவர்க்(கு) உறைவிட மாகிப்
பரந்திசை யெய்தும்யாழ்ப் பாணம்.

ஆரியர் ஆழி வேந்தரென் றவனி
புகழ்ந்துரை அளிக்கநல் லூரிற்
சீரிய செங்கோல் செலுத்திய வேந்தர்
சென்றபின் சைவநிந்தனைசெய்
பூரியர் ஆட்சி புக்கது கண்டு
பொருதுபுன் னயத்திசை நடந்த
நேரியல் ஞான விளக்கெனு முனிவன்
நிறைபுகழ் மரபுமேம் படவே.

தில்லைவாழ் கூத்தன் திருவரு ளுருவாம்
சீரிச்சிவ காமசுந் தரியார்
எல்லையில் கருணைக் கொள்கல மாய
எழிற்சிவ காமியார் வயிற்றில்
நல்லிலைவாழ் கந்தன் அருளினால் நல்லைக்
கந்தர்தம் தவப்பய னாக
வில்லைநேர் நுதலார் கண்வலைப்ப படாத
மெய்த்தவன் மகவென உதித்தான்.

குலந்தரு செல்வன் அறுமுகப் பெயரும்
கோதில்சீர் ஒழுக்கமும் மருவி
நலந்தரு கல்வி கேள்வியால் நிறைந்து
நற்றமிழ் வடமொழி குடபால்
நிலந்தரு மன்னர் மொழியிவை யுணர்ந்து
நீடுசீர் முருகனே யென்ன
அலந்தவர்க் குதவி நினைத்தது முடிக்கும்
ஆற்றலும் பெற்றுயர் வடைந்தான்.

தன்னியல் புணரத் தலைவன தியல்பு
சாற்றிய சைவநூல் பலவும்
மின்னியல் சடையார் அருளினால் அச்சில்
மேவுதல் நலமெனத் துணிந்து
பன்னல் மிகுந்த சென்னைமா நகர்க்குப்
படர்தர வெண்ணினான் மறைகள்
துன்னிநின் றேத்துந் தொல்பதி தொழுது
தொலைவில்சீர் ஆவடு துறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவலர் போற்றும் ஞானதே சிகரைப்
பணிந்தவ ராணையின் வண்ணம்
பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப்
புலமிகு மறிவர் கூட் டுண்ணக்
காவலர் வியப்ப உரைத்திடல் கேட்டுக்
கருணைகூர் தேசிகர் இவர்க்கு
நாவல ரெனும் பேர் தகுமென அளித்தார்
ஞாலத்தார் தகுந்தகும் என்ன

சொல்லுதல் வல்லான் சோர்விலன் அஞ்சான்
துணிவு கொள் சிந்தையாள் அவனை
வெல்லுதல் யார்க்கும் அரிதென உரைத்த
மெய்ம்மறைப் பொருட்கிலக்காகி
நல்லையி லுதித்த நாவலர் பெருமான்
நலந்திகழ் சென்னைமா நகரின்
எல்லையை நண்ணி இயற்கலை பரப்பும்
இயந்திரம் வாங்கிய பின்னர்

கருணையே யுருவாங் கண்ணுதற் பெருமான்
கழலிணை பதிந்தவுள் ளத்தர்
அருணைமால் வரையின் சாரலிற் சின்னாள்
அமர்ந்தனர் திருமடத் ததிபர்
பொருணிறை தமிழன் புலத்துறை முற்றும்
புண்ணியர் தகவினை யெண்ணித்
தெருணிறை யரசோய் ஈண்டுநீ வைகச்
சிந்தைசெய் திடல் நலம் என்றார்.

தம்மையீன் றெடுத்த யாழியல் நாட்டிற்
சைவமாஞ் சமயமும்புலவர்
செம்மைசே ருளத்திற் பொலிந்தமுத் தமிழும்
சீருறப் பணிபல புரிதல்
இம்மையிப் பிறவிக் கியைந்தமா தவமென்
றெண்ணியே விடைபெற்று மீண்டார்
எம்மையும் பயந்த ஈழமா நாட்டின்
இணையிலாப் பெருநிதி யனையார்.

கடிகமழ் கொன்றைத் தாரினர் அழகிற்
காதலுற் றுருகுமெய் யன்பர்
வடியிலே வேற்க ணரம்பையர் வரினும்
மதித்திடா ராதலின் விதித்த
படியினிற் றூய நெறிபுக நினைந்து
படிகலிங் கத்தினிற் றலைவன்
துடிமழுக கரஞ்சேர் சுந்தர வடிவைத்
தொழுதிட எண்ணி தூயோர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணினர் வினைகள் நலிவுற அருளும்
நாவலந் தீவினை யடைந்து
புண்ணியந் திரண்ட உருவியல் ஞான
போதகா சிரியனைத் தொழுது
மண்ணினிற் பிறந்தோர் மணமய லகல
வளரொளிப் பிழம்பென நின்ற
விண்ணவர் முதலைப் பூசனை புரியும்
விதியினை மதியினிற் றெளிந்தார்.

மன்னுமீ ழத்தை யடைந்துதொண் டாற்றி
மாமறைக் காட்டினை மேவித்
தொன்னலத் துறைசை தருமையம் பதியிற்
றொகைவிரி யுரைபல நவிற்றி
முன்னமே ழிசையாற் செழுந்தமிழ் வளர்த்த
முதல்வரைப் பயந்தசீ காழி
என்னுமா நகரில் இறைவர்தாள் தொழுதால்
விரும்பிவந்தமரரும் பணிவார்.

உரையுணர் விறந்த தனிமுதல் கருணை
உருவுகொண் டுவகெலாம் பயந்த
வரைமனள் உவகை விழியினாற் பருக
மாதவர் வாழ்த்தொலி யெடுப்பப்
பரையுரு வாய மாமணி மன்றுட்
பதஞ்சலி யாது நின்றாடும்
விரைகமழ் கொன்றைத் தாரினா ராடல்
விரும்பிவந்தமரரும் பணிவார்.

அத்திற மாய தில்லையம் பதியில்
ஆகம அளவையாற் சமைந்த
வித்தகக்கோயிற் கோபுரங் கண்டார்
விழிகணீர் பெருகமெய்ம் மறந்தார்
பத்தர்சீர் பரவும் நல்லைநா வலனார்
பாழினிற் பன்முறை விழுந்தார்
அத்தரே யென்றார் அம்மையே யென்றார்
ஆடினார் பாடினார் அன்பால்

மாமணி மன்றுட் டிருநடங் கண்டார்
மனநெகிழ்ந் துடையவர் பாதம்
பாமணி மாலைப் பனுவலாற் பரவிப்
பல்பகல் பிரிந்தகா தலனார்
தாமணி மையிலே வருதல் கண் டுவகை
தழைத்தமெல் லியலெனத் தளர்ந்தார்
பூமணிச் சிலம்பி னொலிசெவிப் படலம்
புதுமைசேர் மருகையுற் றெழுந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Compliments

from

# COLOMBO TRADERS

*General Merchants, Groceries Oilmen & Frozen Food*

198, GALLE ROAD,

WELLAWATTE,

COLOMBO 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

# VASAN TRADING CO.

GENERAL MERCHANTS

121, 5th CROSS STREET,

COLOMBO-11.

TPhone : 25567

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*of*

UNIVERSITY OF JAFFNA LIBRARY

# RATNA STORES

*Publishers & Book Sellers*
*Dealers in Textiles*

**130, MALAY STREET,**
**COLOMBO-2.**

T'Phone : 34877 T'Grams : "RATNABOOKS"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பெருமான்

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை —

நாவலர் சரித்திரம் வைதிக சைவ சரித்திரம். வைதிகமாவது தூய அறிவு நெறி. அந்நெறி சிவசம்பந்தம் உறும்போது சைவம் எனப்படும். நமது சமயம் வைதிக சைவம். அதனை ஞாபகப்படுத்தலினாலே நாவலர் சரித்திரத்தை அவ்வாறு கூறுகின்றோம்.

கல்வி, செல்வம், உத்தியோகம் இம்மூன்றும் நீண்ட காலமாக இருந்துவந்ததொரு குடும்பத்தில் 1882ம் ஆண்டின் இறுதியில் நாவலர் பிறந்தார். அப்பொழுது ஆங்கில அரசு வந்துவிட்டது.

நாவலருக்குத் தமையன்மார் நால்வர் தந்தையாரும் தமையன்மார் நால்வரும் இராசாங்க உத்தியோகத்தர்கள். சிறுவராகிய நாவலர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் நீதி நூல்களும், நிகண்டு முதலிய கருவி நூல்களும் படித்துவந்தார்.

நாவலருக்கு ஒன்பதாம் வயசு நடக்கும்போது ஒருதினம் நாவலரின் தந்தையார், ஒரு நாடகம் எழுதிக்கொண்டிருந்தவர், ஏடும் எழுத்தாணியும் கையிற் பிடித்தபடி திடீரென்று இறந்துபோனார். நாடகம் குறையாயிருந்தது.

குறையாயிருந்த நாடகத்தை அந்த இளம் வயசில் எழுதி முடித்து நிறைவு செய்தார் நாவலர். இது தமையன்மாருக்குப் பேராச்சரியம் விளைத்தது. அதனாலே உயர்ந்த இலக்கண இலக்கியங்களைச் சிறந்த வித்துவான்களிடம் படிக்கும்படி செய்தார்கள். நாவலரின் திறமை பிரகாசித்தது. வயசு பன்னிரண்டாயிற்று.

## கிறிஸ்தவ சூழலில் பதினான்கு வருடம்

“உத்தியோகம் புருடலக்கணம்” என்பதனாலே போலும், நாவலருக்குப் பன்னிரண்டாம் வயசு நடக்கும்போது, அவரை ஆங்கிலங் கற்கும்படி கல்லூரி ஒன்றுக்கு அனுப்பினார்கள். அக் கல்லூரியின் அதிபதி பார்சிவல் பாதிரியார். நாவலர் தமிழ்க் கல்வியைக் கைவிடாது கற்றுக்கொண்டே ஆங்கிலத்தையுங் கற்றார். அவரது திறமையைக் கண்ட பாதிரியார் கீழ் வகுப்புக்கு ஆங்கிலமும் மேல் வகுப்புக்குத் தமிழும் கற்பிக்கவும் வைத்தார். கற்றல் கற்பித்தல் இரண்டும் ஒருங்கு நடந்தன. பின், பாதிரியார் நாவலரைத் தமக்குத் தமிழ்ப் பண்டிதராக்கிப் பைபிளை மொழிபெயர்க்கும் உத்தியோகமுங் கொடுத்தார். நாவலருக்கு மாசவேதனம் முப்பது ரூபா. நாவலர் பண்டிதர் என்கின்ற உத்தியோகத்தராயினார். கிறிஸ்தவ சூழலிற் பதினான்கு வருடங் கழிந்தது.

பதினான்கு வருடத்தின் முதலாம் வருடத்தின் முதலாம் மாசத்தின் முதலாம் வாரத்திலேயே, நாவலர் மனசில் பெரியதொரு மாற்றம் உண்டாய் வளர்ந்துகொண்டிருந்தது/ பாதிரிமார் மதமாற்றஞ் செய்யுஞ் சூழ்ச்சிகளும் அவர்கள் தங்கள் மதத்தைப்பரப்பும்முறைகளுமே நாவலரது மனமாற்றத்துக்கு முக்கிய காரணங்கள். மதமாற்றத்தைத் தடுத்தற்கும் தமது மதத்தை அவர்களைப் போல விருத்தி செய்தற்கும், ஆக்கவேண்டிய திட்டங்கள் நாவலர் மனசிற் குடிகொண்டன.

நமது சமயம் எவ்வியல்பினது? அதற்குரிய நூல்கள் எவை? என்ற கேள்விகள் எழுந்தன. சைவ நூல்களைத் தாமாகவே தேடிக் கற்றுக் கொண்டார். முதனூல்கள் சமஸ்கிருதத்திலிருப்பதனால், சமஸ்கிருதத்தையும் தாமே கற்றுக் கொண்டார். இருபத்து மூன்றாம் வயசில் ‘கற்பனவும் இனி அமையும்’ என்று தமது கல்வியை ஒருவாறு நிறுத்திவிட்டுத் தமதிருப்பிடத்தில் வளர்ந்தவர்களைச் சேர்த்து இரவிலுங் காலையிலுங் கற்பிக்கத் தொடங்கினார். பண்டிதருத்தியோகம் வழக்கம்போல் நடந்து கொண்டிருந்தது. கற்றுவல்ல உபாத்தியாயர்களையும் சைவப் பிரசாரகர்களையும் சிருட்டி செய்து, வித்தியாசாலைகள் மூலமும் ஆலயங்கள் மூலமும் சைவசமயத்தை விருத்தி செய்யவேண்டுமென்பதே நாவலர் நோக்கமாயிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வருடத்துக்குட் பலர் நாவலரிடம் தமிழுஞ் சமயமுங் கற்றுத் தேறினர்கள். 1848ம் ஆண்டு பிறப்பதற்கு முதனளிரவு. வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் நாவலர் சைவப் பிரசங்கஞ் செய்யத் தொடங்கினர். அவ்வாண்டில் வண்ணார் பண்ணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியா சாலையுந் தாபிக்கப்பட்டது. இந்நிலையிற் பண்டிதருத்தியோகத்தை நாவலர் துறந்தார். தமையன்மார் அதனைப் பொருது சினந்தார்கள். நாவலர் தாம் பிதிரார்ச்சிதமும் பெறுவதில்லையென்று கூறித் தமையன்மாரைத் துறந்தார். சுற்றத் தொடர்பு கழன்றது.

## மூச்சுவிட நேரமின்றி 10 வருடம் உழைப்பு

1848ம் ஆண்டு தொடக்கம் பத்து வருட காலம்மூச்சுவிட நேரமின்றி உழைத்தார். வளர்ந்தவர்களுக்குப்பாடஞ் சொல்லுதல்; வித்தியாசாலையைத் தமது மாணவர்கள் மூலம் நடத்துதல்; சிறுவர்களுக்கு ஏற்றமுறையிற் பலதரப்பட்ட புத்தகங்கள் எழுதுதல்; பழைய நூல்களைப் பரிசோதனஞ் செய்தல்; பிரசங்கஞ் செய்தல்; கிறிஸ்தவ எதிர்ப்புகளுக்கு அணிவகுத்து முன்னிற்றல் என்றின்னோரன்னவை நாவலர் எடுத்த உழைப்புக்கள்.

புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதற்கு அச்சியந்திரம் ஒன்று அத்தியாவசியகம் வேண்டப்பட்டது. அதனுலே 1849ம் ஆண்டு ஆடி மாதம் 27ம் வயசு நடக்கும்போது அச்சியந்திரம் வாங்கும் பொருட்டுச் சென்னபட்டணத்துக்கு நாவலர் புறப்பட்டுச் சென்றூர். சென்றவர் தமிழுக்கும் சைவத்துக்கும் ஒரேயோர் உறைவிடம் என்று சொல்லப்படுந் திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சென்றூர். ஆதீன சந்நிதானங்கள் அவரது திறமையைக் கண்டு வியந்து, நாவலர் என்ற பட்டத்தை வழங்கினுர்கள். அச்சியந்திரத்துக்குச் சென்றவர் ஆறுமுகநாவலராய் யந்திரத்துடன் யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் வந்தார். நாவலர் பெருமை எங்கும் பரவியது.

வித்தியாநுபாலன யந்திரசாலை என்ற பெயரில் அச்சியந்திரம் வித்தியாசாலைக்கு அண்மையில் தாபிக்கப்பட்டது. புத்தகங்கள் அறிவு வளர்ச்சிக் கிரமத்தில் ஒன்றன்பின் ஒன்ருக விரைந்து வெளிவந்தன. அத்தியாவசியப் புத்தகமனைத்தும் முப்பதாம் வயசுக்குள் எழுதிவெளியிடப்பட்டன. அருமந்த பெரிய புராண வசனம் முப்பதாம் வயசில் வெளியாயது. சுப்பிரபோதம் வச்சிரதண்டம் என்கின்ற கிறிஸ்தவ தூஷண பரிகப்புக்களும் முத்துக்குமார கவிராயரியற்றிய ஞானக்கும்மி முதலியனவும் அச்சில் வெளியாயின. முப்பத்திரண்டாம் வயசில் எழுதி வெளிவந்த சைவ தூஷண பரிகாரத்துக்கு ஐரோப்பா உள்ளிட்ட கிறிஸ்தவ உலகம் தலைவணங்கியது. அவ்வயசில் நாவலர் சிவபூசையும் எழுந்தருளப் பண்ணிக்கொண்டார். சைவாநுட்டானங்களில் நாவலர் எட்டுணையும் எக்காலத்திலாயினும் தவறியதில்லை.

## சென்னையிலும் ஓர் அச்சியந்திரசாலை

பெரிய புத்தகங்கள் அச்சிடுதற்குச் சிறிய யந்திரம் போதாமலிருந்தது. அதனாலே, 1858-ம் ஆண்டு நடக்கும்பொழுது சென்னப்பட்டணத்துக்குப் போய் அங்கே சிலகாலந் தங்கிப் பல்வேறு புத்தகங்கள் அச்சிட்டுக்கொண்டும் நூலுரைகள் செய்துகொண்டிருந்தார், வித்தியாநுபாலனம் என்னும் பெயரில் சென்னையிலும் ஓர் அச்சியந்திரசாலை தாபிக்கப்பட்டது. இராமநாதபுரம் சமஸ்தானம் பொன்னுச்சாமித் தேவரின் வேண்டுகோளின்படி 1860 ஐப்பசியில் திருக்குறள் பரிமேலழகருரையும் அடுத்த ஆண்டில் திருக்கோவையாருரை தருக்க சங்கிரகம் அன்னம் பட்டீயம் என்பனவும் அச்சிடப்பட்டன. அப்பதிப்புக்களைச் சிறப்பித்து மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் தியாகராசச் செட்டியார் உள்ளிட்ட பிள்ளையின் மாணவர்களும் பாடிய பாடல்கள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அக்காலத்தில் தமிழ்நாட்டுப் பிரபுக்கள் தங்கள் ஊர்களிலுஞ் சைவ பாடசாலைகள் தாபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். முதலிற் சிதம்பரதில் ஒரு பாடசாலை தாபிக்க எண்ணி ஏற்ற ஒழுங்குகள் செய்துகொண்டு, 1862 பங்குனி மாசம் யாழ்ப்பாணத்துக்கு வந்து, சிதம்பர வித்தியாசாலைக்கு வேண்டிய மூலதனங்கள் சேர்த்துக்கொண்டு, 1864 தை மாசம் மீண்டும் வடக்கே போகப் புறப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாண்டு அர்த்தோதய புண்ணிய காலத்திற் சேது ஸ்நானஞ் செய்துகொண்டு இராமநாத புரத்துக்குச் சென்றார். அங்கே பொன்னுச்சாமித் தேவர் இதுகாறும் எவருக்குஞ் செய்யாத உபசாரங்கள் செய்து வழியனுப்பினார். வழியில் மதுரை திரு வண்ணாமலை முதலிய ஆதீனங்கள் பல்லக்கிற் பட்டணப்பிரவேசஞ் செய்வித்து மிக்க வரிசைகளுடன் உபசாரங்கள் செய்தன. தலந்தோறும் சைவப் பிரசங்கங்கள் செய்யப் பட்டன. திருவாவடுதுறை ஆதீனம் மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையையும் ஓதுவார்களையும் கும்பகோணத்துக்கு அனுப்பி, நாவலரை எதிர்கொண்டழைப் பித்து, ஆதீனத்திற் பெரிய உபசாரங்கள் நடத்தியது. பின் நாவலர் சிதம்பரத்துக்குப் போய் 1864 ஐப்பசியில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலை தாபித்தார். ஆதீனங்கள் ஆசி வழங்கின. தில்லைவாழந்தணர்கள் வாழ்த்தினார்கள். சைவ உலகு துதி செய்தது.

நாவலர் சென்னைக்குச் சென்று, நூலுரைகள் செய்தும் பரிசோதித்தும் அச்சிடுவதில் ஈடுபட்டார். சுக்கிரவாரந்தோறும் தமதிருப்பிடத்தில் சைவப் பிரசங்கங்கள் செய்தும் வந்தார். அயலிடங்களிற் சென்று பிரசங்கஞ் செய்வதுமுண்டு, திருத்தொண்டை நாட்டுப் பதிபுண்ணிய பரிபாலன சபையில் தலைமை வகித்துப் பேசிய இரு பிரசங்கங்கள் எழுத்தில் வந்தவை. ஆறுமுக நாவலர் சரித்திர அநுபந்தத்தில் அவற்றைக் காணலாம். அவை இரண்டும் அருமந்த பொக்கிஷங்கள்.

## குறிப்பிடத்தக்க இரு சம்பவங்கள்

நாவலர் சென்னையில் வசித்த காலத்தில் நிகழ்ந்த இரு சம்பவங்கள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று சிதம்பரத்துத் தீஷிதர்களின் வைதிக சைவப் பிறழ்வு பற்றியது. மற்றையது இராமலிங்கசுவாமிபற்றியது. தீஷிதர்கள் சிவதீக்ஷையின்றிச் சிவாகம நிந்தர்களாயிருப்பதை நாவலர் உலகுக்கு எடுத்துக்காட்டினார். தீக்ஷிதர்களுக்குக் கோபம் மூண்டது. தீக்ஷிதர்கள் ஆடு வெட்டிச் செய்ய எண்ணிய ஒரு வேள்வியையும் நாவலர் தடுத்துவிட்டார். அதனாலே மேலும் கோபம் அதிகரித்தது. அக்காலத்தில் இராமலிங்கசுவாமியின் சீடரின் சீடர் ஒருவர் நாவலரைச் சரணடைந்தார். அவரது வேண்டுகோளுக்கிரங்கிப் 'போலியருட்பா மறுப்பு' என்ற பிரபந்தம் எழுதி வெளிவந்தது. சுவாமியின் கூட்டத்தார் தீஷிதர்களோடு ஒன்றுபட்டுச் சிதம்பரத்திலே 1869 ஆனித் திருமஞ்சன தரிசனத்திலே பெருங்கலகம் விளைத்தார்கள். நாவலர் இராமலிங்க சுவாமிமீது மஞ்சக் குப்பக் கோட்டில் மான நட்ட வழக்குத் தொடுத்தார். வழக்கினால் மதிப்புக்குரிய ஆத்மீக வெற்றி ஒன்று கிடைத்தது, அவ்வெற்றி என்னையென்றால், இராமலிங்க சுவாமி, வழக்கின் பின், தம்மைச் சூழ்ந்திருந்த சிற்றினங்களை மெல்ல மெல்லக் கைகழுவி அவர்களை விலகி ஒதுங்கித் தனிமையை மேற்கொண்டதேயாம்.

1864ம் ஆண்டு வடக்கே சென்ற நாவலர் ஆறு வருடத்துக்கு மேலே அங்கே தங்கி 1870ம் ஆண்டு மாசி மாதம் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். நீண்டகாலம் பிரிந்திருந்த யாழ்ப்பாணம் வருணனைக்கெட்டாத உபசாரத்தை நாவலருக்குச் செய்து வரவேற்றது. 162579

இங்கே, மருகரும் மாணவருமான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை செந்தமிழ் மழைபொழிந்துகொண்டிருந்தார். காசிவாசி செந்திநாதையர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் தலைமையாசிரியராயிருந்தார். இணுவில் நடராசையர் சித்தியார்ப் பாடந்தக்கவர்களுக்குச் சொல்லிக்கொண்டிருந்தார். கிறிஸ்தவமுனை சனி பிடித்திருந்தது. வட்டுக்கோட்டைக்கல்லூரியினின்றும் வெளிவந்தவர்கள் பெரிய உத்தியோகங்களிலிருந்துகொண்டே தமிழ்ப்பணி, சைவப்பணி செய்தார்கள், புலோலி முதலிய இடங்களிற் சைவப் பாடசாலைகள் தொடங்கின. இந்நிகழ்ச்சிகள் மகிழ்ச்சிக்குரியனவேயாயினும் சமயப் புரட்டர்களும் குறைவின்றி வாழ்ந்து வந்தார்கள். பிராமண சைவ குருமாரின் நிலை நாவலரது மனசுக்கு வேதனை கொடுத்தது. இந்நிலையில் யாழ்ப்பாணச் சமய நிலை என்ற புத்தகம் 1872ல் வெளிவந்தது. இது யாழ்ப்பாணத்தாருக்கு நாவலர் செய்து வைத்ததொரு ஸ்மிருதி எனலாம்.

1873 சித்திரையில் அன்புக்குரிய மாணவர் சுப்பிரமணியபிள்ளை இறந்தது நாவலருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பெரியதொரு தாக்கமாயிருந்தது. அவருக்கு அருமையானதொரு சரித்திர மெழுதி அவர்மீது இரங்கற் கவிகளுஞ் செய்தார். எவர் ஒருவருக்கும் நாவலர் செய்யாதது இது.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் யாழ்ப் பாணத்திலே சிறந்து விளங்குவது. அதனைச் சிவாகம விதிப்படி அமைத்து நடத்த 1874ம் ஆண்டில் நாவலர் பெரிதும் முயன் றார். கோயிலதிகாரியைச் சிற்றினங்கள் கெடுத்துவிட்டன. அதனால் நாவலர் பெரி தும் வருந்தி 1875ம் ஆண்டில் மூன்று துண்டுப் புத்தகங்கள் வெளியிட்டார். நாவலர் பிரபந்தத்தின் இரண்டாம் பாகம் அம்மூன்று புத்தகங்களையுங் கொண்டது. ஆலயங்களை நடத்துவோர் பூசகர் வழிபடு வோர் அத்தியாவசியம் படிக்க வேண்டிய வை அவை.

## அநீதியை எதிர்த்துப் போரிட்டதீரர்

1876ம் ஆண்டில் மழையின்மையால் பெரிய பஞ்சம் உண்டானது. நாவலர் கஞ்சித் தொட்டித் தருமம் ஒன்று நடத்தினார். ஏழைகளுக்கிரங்கி அரசாங்கம் உதவ முன் வந்தது. உதவியை வடமாகாண அதிபருங் கீழ் உத்தியோகத்தரும் உறிஞ்சிவிட்டார் கள். நாவலர் கர்ச்சித்தெழுந்தார், ''சமயம்! சமயம். இது நல்ல சமயம், வெகுசனத் துரோகம்'' என்று பிரபந்தத்தில் வருபவை நாவலரின் கர்ச்சனைகள் 1877ல் இலங்கை நேசனில் வந்தவை. தேசியவாதிகள் எழுத் தெழுத்தாகப் படிக்க வேண்டியவை அவை நாவலர் தேசாதிபதிக்கு அப்பாலே குடி யேற்ற நாட்டு மந்திரிக்கும் உத்தியோகத் தர்களின் கொடுமையை எடுத்துக்காட்டி னார். வடமாகாண அதிபதி வேலையிழந்து சிறைத்தண்டனை அடையவுங் கூடுமென்ற எண்ணமும் நிலவியதுண்டு.

1878ல் இலங்கைப் பிரதிநிதித்துவப் பேச்செழுந்தது. அத்துவக்காத்து பிறிற்றோ தலைநகராகிய கொழும்பிற் பிரசித்திபெற்ற சட்ட நிபுணர்; முதிந்தவர். சட்ட உலகு அவரையே சிரமேற்கொண்டது. பிறிற்றோ நாவலர்பால் மிக்க மதிப்புடையவர்; ஒரு முறை கோட்டில் நீதிபதியின் முன்னிலை என்பதையும் மறந்து எழுந்து நாவலருக்கு மரியாதை செய்துவிட்டார். ஆனால், நாவ லர் நீதி என்கின்ற கூரிய வாளின் நுனியில் வாழ்பவர் என்பதை அவர் நன்கு அறிந் திலர்போலும். ஒருசமயம் நாவலரின் எதிரி களுக்கு அநீதி செய்தால் நாவலர் தம்மை விரும்புவார் என்று நம்பினார் பிறிற்றோ. இதனை நாவலராற் பொறுக்க முடியவில்லை. இவர்தாமா நமக்குப் பிரதிநிதியாய் இருக் கத்தக்கவர் என்ற எண்ணம் நாவலருக் குண்டானது. பிறிற்றோவை எதிர்த்து 22-5-1879ல் கூட்டங் கூட்டிப் பெருமுழக் கிட்டார் நாவலர். சட்ட நிபுணர்களாகிய சர்ப்பங்கள் தலைகருங்கின. நாவலர் அன்று செய்த முழக்கம் அரசியற் சரித்திரத்திலே தடித்த எழுத்திற் பதிக்கற்பாற்று, நாவ லரது ஆதரவு பெற்றுப் பாலொழுகும் இளைஞரான பொன். இராமநாதன் இலங் கைப் பிரதிநிதியாய், அரை நூற்றுண்டுக்கு மேலே சட்டசபையில் அறிவிலும் வயசிலும் முதுபெருஞ் கிழவராய் வீற்றிருந்தார்.

1879ம் ஆண்டு ஆடி மாசம் சுந்தரர் குரு பூசைத் தினத்தில் நாவலர் தமது இறுதிப் பிரசங்கத்தைச் செய்தார். 'முப் பத்திரண்டு வருடகாலம் உங்கள் ஏச்சையும் பொறுத்துக்கொண்டு பிரசங்கஞ் செய்து வந்தேன், இனி ஒருவரைத் தேடிக் கொள்ளுங்கள்' என்று தம்மையும் மறந்து சொன்னார். அதனைக் கேட்டுச் சுவர்கள் தூண்கள் என்றிவையும் கண்ணீர் சொரிந்தன.

1879ம் ஆண்டு (பிரமாதி ஸ்ரீ கார்த்தி கை மீ 21 உ இரவு) நாவலர் சிவபதமெய் தினார்.

56 வருடம் 11 மாசம் 16ம் நாள் இந் நிலவுலகத்தில் நாவலர் நம்பொருட்டு வாழ்ந்தார்.

நாவலர் கோட்டில் நின்று ஒன்று சொன்னாலுஞ் சரி, ஒருவனைச் சினந்து வைதாலுஞ்சரி, நாவலருடைய சொற்கள் எழுத்துக்கள் செயல்கள் அனைத்தும் வைதிக சைவ மணங் கமழ்வனவேயாம்.

இது நாவலரது பச்சைப் பசிய குழந் தைப் பருவத்துக்கும் ஒக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

V

# Rajeine Traders

General Merchants & Commission Agents

**145, 5th Cross Street,**

**COLOMBO-11.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST WISHES

FROM

**V. JOSEPH & BROTHERS**

136, DAM STREET,
COLOMBO-12,

T'phone : 26200

T'grams : "PAKKU"

SPACE DONATED

BY

**SAMSON MANUFACTURING & MARKETING**

**11, Mahinda Place,**
**Kirillapone,**
**COLOMBO-6.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் சைவக்காவலர்

— கவியோகி சுத்தானந்த பாரதியார் —

தவத்திரு நாவலர் தமிழ்மணிப் புரவலர்
சிவத்திரு நாவலர் சைவக் காவலர்
உள்ளந் தோறும் உருக்கொண் டுள்ளார்
தமிழும் சைவமும் தழைத்திடு மட்டும்
ஆறுமுக நாவலர் அமரராய் வாழ்வார்.
கச்சி யப்பரின் கந்த புராணமும்
சேக்கி ழாரின் செவ்விய வாக்கும்
விளங்கு மட்டும் விளங்கும் எங்கள்
நாவலர் பெருமை நவிலப் போமோ?
ஒள்ளிய தெள்ளியவுரைநடை வகுத்தே
பால பாடம் நாலுடன் சைவ
வினுவிடை இலக்கண விளக்கம் முதலா
முத்து முத்தாய் முத்தமிழ் வகுத்த
சித்தர் நாவலர் சிலையைத் தமிழர்
மனைதோறு நாட்டி வழிபடத் தகுமே
இன்றுநம் சைவம் இருக்கிற தென்றல்
அன்றவர் செய்த அருந் தொண்டாலே
இன்று நந்தமிழ் இலகுவ தெல்லாம்
அன்றவர் கோத்த அமர நூல்களால்
திரு வாசகமும் திருமுறை நூல்களும்
புராணங்களும் புண்ணியச் செல்வமும்
வேதா கமக்கலை விரியறி வெல்லாம்
அளந்து கொடுத்தார் ஆறு முகனர்
அளப்பறு பெருமையின் அளக்கர் அவரே!
தமிழர் உய்யத்தமிழகம் உய்யப்
பேசினர், எழுதினர் பெருந் தொண்டாற்றினர்
ஆசியால் நாமும் ஆளா னதுவே
நாவலர் பெருமான் நாவலர் நாடகம்
எனும் இருநூலால் என்னுள் ளன்பை
நாவலர்க் களித்தேன் பாவலர் புலவர்
ஆப்ந்தந் நூல்களை ஏய்ந்தன தொண்டே
ஆயிரக் கணக்கில் அச்சிட் டெங்கும்
ஆங்கிலந் தனிலும் ஓங்கிட விளக்கிப்
பெரியார் பெருமையைப் பேசுக நன்றே
எத்தனை எத்தனை இயற்பணி செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத் திற்குச் சிகரம் போன்ருர்
தமிழுக் கரியணை தந்தார் தமிழர்
மரபு வாழ மாண்பணி புரிந்தார்
காலக்கேட்டைக் கலங்கிடத் தாக்கி
ஆலயத் திருத்தம் அஞ்சா தியற்றினர்
ஆகம விதிப்படி அரன் வழிபாடு
நடக்க வூக்கிய நாவலர் பெருமான்
திருக்குறள் வழியே தீந்தமிழ் மக்கள்
ஒழுகி உயர்நிலை ஓங்கிடச் செய்தார்.
உலகெலாம் அவரிசை ஓங்குக நீடே
நாவலர் பெருமை நமக்கே பெருமை
நாவலர் வழியே நடத்துய் வோமே

மாந்தளிர் மேனி யானை
மலர்விழி யழகினனைத்
தீந்தமிழ் வாயி னனைச்
செபமணிக்கையி னனைக்
காந்தமின் சாரம் போலக்
கவர்ந்திடுந் தோற்றத் தானை
ஏத்திசை பரவி னனை
என்னுளே வணங்கி னேனே

வரம்பெறு வாக்கி னனை
வஞ்சமில் நெஞ்சி னனை
உரம்பெறு மேனி யானை
உயர்சிவ சமயம் வாழ
நிரம்பிய பணிசெய் தானை
நீள்தவ வேள்வி யானைப்
பரம்பொருட் பற்றி னனைப்
பற்றினர் பற்றற் ருரே

நாவலர் அவரே யாவார்
நமதுசை வாகம த்தின்
காவலர் அவரே இன்பக்
கனிதமிழ் அமுதம் ஊறும்
பாவலர் அவரே எங்கள்
பைந்தமிழ் உலகை யாளும்
கோவலர் அவரே! வெற்றி
கொட்டுக முரச மிங்கே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

# K. V. N. HARDWARE STORES

*General Hardware Merchants*
*Government, Corporation & Estate Suppliers.*

**378, Old Moor Street**

and

**18, Abdul Jabbar Mawatha,**
**COLOMBO 12.**

Telephone : **34084**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments of

# DORAISONS

48, BANKSHALL STREET,
COLOMBO-11.

*Agents for :*

**PHILIPS**

*Radios & Televisions*

*and*

*Electrical Accessories*

*&*

*Engineering Goods*

T'Phones : 21078
24877


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PIONEERING HERO

— A. M. A. AZEEZ —

By cherishing the memory of Arumuga Navalar, we, of Ceylon, respect and reserve one of the Founding Fathers of our Contry's FreedomMovement. He was born in Ceylon, that had suffered three centuries of Western conquest, multi-faceted in its manifestations and consequences, political, economic, cultural and psychological, of them, the former two were more prominent and striking, and the latter, while more insidious, were yet more damaging and deleterious. The people had become so mentally subdued that they began to adore what they had endured previously, to identify what was best with what was West.

Navalar, by defending the values and virtues of his faith and forebears, opened the eyes of the people to the glories of their heritage and the snares of their serfdom. He exhorted them to feel proud and become worthy of the precious heritage of their faith and language and the culture embodied in them. He thus restored their self respect, by constructing in their minds. and in the minds of those who followed, the defences of freedom. His name will therefore live in the annals of Ceylon as one who broke the spell of the West; The West had exercised this spell with the weird incantation of 'the White Man's Burden' and the strong incense of intellectual arrogance, creating in the minds of the people the many illusions by which their manhood became softened and their servility sugar-coated. Their eyes had been deceived. By this spell, the people had mistaken the iron collar of domination, intended to throttle, for the gold chain of civilisation, meant to adorn.

Navalar achieved this transformation in the hearts of his people by the prasangams he delivered, by the schools he established, by the press he founded, by the pamphlets he published, by the readers and catechisms he produced, by the Tamil classics he critically edited, by the new prose-style he created, by the dialectical skill he showed and by the courageous stand he readily made against the Establishment, whenever occasion so demanded.

Arumga Navalar, while a student in the swabasha school, made such extraordinary progress and showed such good promise, that his brothers decided to send him to an English school, in order that his talent could receive due recognition and adequate reward; for in those days a position of security and status could not be obtained except via English. Therefore he was admitted, when twelve years of age, to the Methodist School in Jaffna. The Principal, who then guided the affairs of this institution was Rev. Peter Percival, a Wesleyan Padre, keen on his work - the spread of the Gospel in his area and the improvement of the flock in his charge. He soon discarded in the new Saivite pupil the spirit of a devotee and the making of a scholar. His fondness for the Tamil Classics and proficiency in the English Language could not fail to attract the attention of the Padre-Principal who was anxious to cultivate his capacity and increase his knowledge that would enable him to establish as easy contact with the people. He therefore engaged Navalar as his Tamil Pundit; he had already been given work as a teacher of Tamil classes in the Upper School and of English in the Lower. It became known throughout the school that this new Pundit possessed a bilingual knowledge and skill, of an extraordinary character, unequalled among his contemporaries.

He was therefore specially employed, in his nineteenth year, as a translator of the Holy Bible. He made it a condition, before he accepted this position, that he would not be restricted or restrained in the practice of his own faith. This condition was readily conceded because the Padre knew that there was no person more competent than the Pundit to assist

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

him and his Committee in the important task of producing a revised Tamil version of the Bible, so essential for missionary work. There was no doubt that Navalar would carry out the duties, once accepted, efficiently and conscientiously. This engagement naturally brought the Padre and the Pundit close. They grew to like and appreciate each other, despite the murmurings of those zealots who could not tolerate the Saivite ways of the Padre's Pundit. His courage and conviction had already evoked their jealousy and hatred. They felt that the Padre was too indulgent; but he knew that the Pundit was too valuable to lose. Meanwhile the translation work was proceeding according to plan, the Padre confident that he would justify his appointment and the Pundit happy that he was acquiring knowledge. The more he studied the Holy Bible, the deeper he appreciated the Saiva Agamas. Navalar relished the work; as was his wont, he made a thorough job of it, making a deep study of not only the Bible in its various editions, but also the different commentaries then available with their supplementary volumes. We have here a glimpse of the quality of research and scholarship, of the skill and intellect which Navalar characteristically revealed in latter years, when he edited or paraphrased the Tamil Saivite Classics for the benefit of an ever growing circle of readers. These qualities were further disclosed in the Tamil Readers and the Saivite Catechisms he produced for the teaching of religion in the elementary classes - rivalling successfully the contemporaneous efforts of the Missionaries.

When the Tamil translation of the Bible was completed, Rev. Percival went to Madras, accompanied by his Pundit to obtain the necessary concurrence of the Madras Bible Society. There the Jaffna version was subjected to a close scrutiny. Navalar's superior scholarship and skill naturally stood the test. The Padre, with his choice vindicated, returned to Jaffna, proud of his protege. He could thereafter unapologetically call his Pundit 'Guru' - an appellation he had used for sometime.

No one could possibly have predicted then, that the Padre's 'Guru' would in later years become an ardent crusader against Christian Missionaries, a skilled orator and a polemical author, controverting his antagonists with the dialectical skill of a legal luminary, that he would play the role of 'the Champion Reformer of the Hindus' ushering in "the counter-reformation" at Jaffna. The Padre could never have anticipated that in the hands of his Pundit, the weapons, forged in the armoury of the Missionaries would be used so effectively against them. Truly has it been said that men build more than they know and events have consequences beyond their intentions.

During the years he worked under Rev. Peter Percival, Navalar came to understand the Missionary Way of Life. He began to perceive the parlous state of Jaffna's ancestral faith, that was being aggravated by the ignorance and indifference of the majority of its priests and practitioners. The doubts that assailed his mind and the thoughts that oppressed him with regard to the nature of the spiritual disease that afflicted them and the kind of cure that should be effected may be gleaned from his later writings, especially from Yalpanasamayanilai (the State of Religion in the Region of Jaffna) and Saivathoosana pariharam (Rejoinder to the Caluminiators of the Saivite Religion.)

In these works there is implied a two-fold division of the Christian population, the first one of good and genuine Christians and the second of 'Rice' or 'Panchadchara' Christians. The saivites were, apart from a few, ignorant like many of the Kurukkals and the majority of the people, or exploiters like some of the Temple Managers. There was a third group. Every one belonging to this group was a good Hindu among the Hindus and a believing Christian among the Christians. When it suited him, he did not fail to produce incidents of conversion for the delectation of his Missionary employer and for the gain of profit and benefit for himself. There was yet another group; they were the Saivites, pious but not courageous. They were strict in the observances of their religion in the privacy of their homes; but were afraid to displease any of the members of the Establishment which was Christian; they were not

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

prepared to incur their ill-will or animosity. Nor were they willing to forgo the material advantages that would accrue to them.

A plan was slowly taking shape in Navalar's mind for the revival of Saivaism and the restoration of its status in Jaffna, the Saivite capital of Ceylon. The insidious ways in which its spiritual conquest had been accomplished, he felt, should be laid bare; he should take counter measures without any further loss of time. He hoped to achieve his end by the establishment of a printing press for the production of tracts and pamphlets, in a language intelligible to the common man and by the inauguration of schools in every village, where education could be imparted, in a purely Saivite environment, with the aid of specially prepared books. He was perturbed by the growing popularity in some of the temples, of songs and dances which countenanced sensuality; he wanted them replaced by hymns and practices that promoted piety.

With this growing consciousness overpowering him, Navalar found his position under the Padre opprssive; his relationship became irksome. He had, no doubt, already organized some private classes for the promotion of Tamil and Saivism, confined to his colleagues and friends. But those classes were not satisfying. He had a bigger and better plan to carryout, without let or hindrance, the self-imposed task of reviving the Tamil language and regenerating the Saivite society of his time. And yet the Padre had been a kind employer, heedless of the vituperations of his enemies and alwaysappreciative of his character and capacity.Therefore,he could not summon enough courage to tender his resingation. To his dilemma there was soon, however, an unexpected solution-a God-given opportunity for him to gain the freedom he was long yearning for. Navalar's influence, though unobtrusive, was infectious. His piety was widely known though he did not parade his faith. His personal discourses therefore produced a magic effect on those who came ih contact with him. Two of them, encouraged by the Padre, were on the verge of baptism; but Navalar had dissuaded them in time, and they failed to turn up on the day appointed by the Church authorities. To this interference of the Pundit, Rev. Peter Percival, could not be blind, however accommodating he desired to be; he could no longer disregard the temper of his colleagues. Navalar was therefore summoned and gently questioned about the part he played in this little drama; yet he was not asked to leave, nor was he reprimanded. This incident however could not be forgotten. The Pundit reviewed his partnership with the Padre. It was now clear to Navalar that he had a mission in life - to defend his faith against its calumniators and vindicate it among its followers. He decided that he would not embarass in any way himself or his employer any longer; he therefore tendered his resignation.

He confronted his worldly - wise brothers with this fait accompli: he gave them a shock for they had been eagerly hoping that their brother would find some glamorous employment with high remuneration. They were gravely disappointed that their youthful brother had most foolishly scorned the delights of those alluring prospects. But Navalar had other plans to pursue and other ambitions to nurture. He was too fond of the Saiva Agamas, ever conscious of the inevitability of death and the futility, in the final analysis, of any quest for security. There fore he was fearless of the future uncertainties and heedless of the fraternal admonitions. With missionary zeal and with no loss of time, he commenced his lifework, unconcerned with the anxieties of his brothers and unmindful of the ilwill of the Establishment; he had no visible support from any, but he had faith in his destiny, This was in 1848. Navalar was then in his twenty sixth year, wedded to the life of a bramachari and avid for action, on behalf of the faith of his forefathers.

To him education was the instrument, par excellence, of suceess for any religious revival. Hence his first achievement was the speedy inauguration, in 1848, of the Vannarponnai Saiva Pragasa Vidyasalai. The method of collection he adopted on this occasion was ingenious simple and appealing-just a handful of rice each time a meal was cooked in the house. This school was soon followed by the establishment of a printing press at Vannarponnai. In 1853 Saiva Pragasa Sabai was organised. Thus within five years after he left the Padre, Navalar had laid, securely and well, the

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

foundation of the work that would engage him throughout the remaining years of his life, and would enable him "leave behind footprints on the sand of time."

In previous months, Navalar had delivered prasangams, Saivite Sermons in new style somewhat Christian form, in content purely Hindu. Once, with very little notice, he had to substitute for his unavoidably absent colleague. He began with the word-Unprepared: he took the audience by surprise and gave them the impression of astage fright. Soon those present were astounded to find him giving an eloquent discourse on the grand theme of "Unprepared-for Death."

Navalar could no longer be ignored, either by friend or foe. His Saivathoo sanapariharam ("Rejoinder to the Calu-minators of the Saivite Religion") was noticed in the Wesleyan Methodist Report for 1855. The writer commented specially on the new techniques, tactics and strategy adopted by Navalar, the Saivite Apologist. "He undertakes to prove that every one of the distinctive articles of Saivite belief and and observance has its parallel and warrant in the credenda and ceremonial setforth in the Christian Scriptures. The amount of Scripture brought to the defence is most surprising and the adroitness with which every possible objection is anticipated and repelled belongs only to a first rate mind. The book is doing much mischief." This bears ample testimony to the success of his efforts.

His Polemical writings were produsing some effect; for in the year 1871 the school authorities of one of the Christian managed institutions refused permission to the Saivite students to attend classes, with the symbol of their religion visible on their foreheads; and they left in protest. They would not have been so bold in previous years. For them, Navalar establishsd the Saivangila Vidya Salai, where English could be taught with the necessary religious background. But the school did not endure beyond four years, on account of the scanty support received from the parents concerned and the positive discouragement of the Government ofiici-als. Navalar was however undaunted; for the solution of these difficulties he was preparing a New plan, which he did not live to complete or carry out. He envisaged the opening, under indigenous management and with Government aid, of English schools, where religious education, instead of being negatived or neglected would be promoted where communal cultures, instead of being depreciated or enfeebled would be encouraged and developed.

During his last two years, he took a leading part in some of Jaflna's political activities. He agitated against the agent of administration for their abuse of power in connection with the cholera epidemic and the famine of 1877. when the nominated seat for the Tamils in the Legislative Council became vacant, he was strongly in favour of the nomination of (Sir) P. Ramanathan and addressed several meetings canvassing support. A few months later Navalar died, on 5th December 1879.

The printing press he founded and publications he introduced were continued successfully after him, by men personally trained by him in his ways and methods. His Readers and Catechisms continne to inspire, even today, those desirous of promoting the growth of indigenous culture in our land; the new Tamil prose style, which was his, has not lost its freshness or validity. Navalar had adopted some of the changes introduced by the Christian Missionaries in their Tamil publications, without detriment to the individuality that is Tamil. His critical editions of the ancient Tamil Classics and his popular works meant to educate the common man in his religion provide an imperishable monument to his zeal, skill and scholarship; the school he founded in 1871 was phoenixlike, reborn twenty years later and is now known as the Jaffna Hindu College, Vannarponnai-the Premier Hindu Institution of Ceylon.

Thus is Arumuga Navalar the Father of the Tamil Renaissance and the Leader of the Saivite Reformation. Owing to his achievements in the realms of language and religion- Tamil and Saivaism-History will undoubtedly accept him as the pioneeering hero in the transition from the Age of Submergence to the Age of Survival, and acclaim him as one of the Founding Fathers of the Freedom Movement in Ceylon. +

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST WISHES
FROM

# MARIKAR (LANKA) LTD.

WHOLESALE DISTRIBUTORS OF

## BATA SHOES

30, Prince Street, Colombo-11.

Telephone : 23698

Telegrams : "SAYMARIKAR"

*Branch :* 132, Trincomalee Street,
KANDY.
Phone : 08 – 3456

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPLIMENTS

FROM

**Dev and Sree Enterprise**

Dealers in Hardware & Machine Tools

**19, Abdul Jabbar Mawatha,**

**COLOMBO-12.**

T'Phones : 33807 & 27044

WITH COMPLIMENTS

V

**American Engineering Corporation**

311, Old Moor Street,

Colombo-12.

Phone : 34430

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best

Compliments

of

# S. S. FERNANDO & CO.

*Dealers in :* **Groceries & Provisions Etc.**

123, 5th Cross Street.

COLOMBO-11.

T'Grams : "RELROSES"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM

↓

# RATNA BROS.

2, GRANDPASS ROAD,

CQLOMBO-14.

BEST COMPLIMENTS OF

↓

# OCEAN TRADING CO.

*General Hardware Merchants*

376, OLD MOOR STREET

COLOMBO-I2.

Phone ; 36876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH

COMPLIMENTS

FROM

R. J. F. & SONS

*General Merchants, Commission Agents*
*Dealers in : Oilman Goods Foodstuffs Etc.*

141, 5th Cross Street
COLOMBO-11.

Phone : 24945

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

COMPLIMENTS

FROM

ASOKAN'S

83, 2nd Cross Street,
Colombo-11.

WITH BEST WISHES

FROM

RAJAH LITHO PRINTERS LTD

Colour Printing & Packaging Specialists.

64 1/3, DAM STREET,
COLOMBO-12,

Phone : 31370

Cables: "RAJALITHO"

*Factory* :
44, GREEN LANE,
COLOMBO-13.
Phone : 23836

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# ASIA ENTERPRIS

*Importers, Exporters & General Merchants*

*Dealers in Patent Medicines, Sundries, Stationery, Oilman Goods Etc.*

**No. 129, 5th Cross Street,**
**COLOMBO-11.**

Branch : **25, Manipay Road,**
**JAFFNA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM

SOLOMON'S HARDWARE STORES

General Hardware & Brassware Merchants

Dealers in :

Carpenters' & Engineering Tools, Paints, Bolts & Nuts,

P. V. C. Pipes & Fittings etc.

8, GRANDPASS ROAD, COLOMBO-14.

Telephone : 20018

*Best Compliments of*

NEW LALITHA STORES

*Milliners, Drappers, Footwear & Gent's Tailors*

204, WARD PLACE,

BORELLA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலரும் தமிழ் மொழியும்

— செஞ்சொற்கொண்டல் பேராசிரியர் சொ. சிங்காரவேலன் —

*" நல்லைநக ராறுமுக நாவலர் பிறந்திலரேற்*
*சொல்லுதமி ழெங்கே ? சுருதியெங்கே? "*

## உரைநடைத் தொன்மை

மொழியின் இரு கூறுகளாக உள்ளவை உரைநடை, கவிதை என்ற இரண்டும் ஆம். இவற்றுட் கவிதை உரைநடையிலும் சிறப்புடையது என்று கூறுவர். கவிதை படிப்போனைத் தன்வயப்படுத்தும் பெற்றி உடையது. உரைநடையும் அத்திறன் உடையது என்றாலும், கவிதைக் கலை கற்பனை, உணர்ச்சி, ஒலிநயம் முதலிய அனைத்தும் உடையதாக, இயற்றுவோன் உள்ளத்து எழும் உணர்வினைப் படிப்போன் மனத்துப் பதிப்பதாக உள்ளது. உரைநடையில் விளங்கும் அநுபவம் கவிதையில் மேம்பட்டுத் தோன்றுவதாகும். உரைக்கும் போக்கில் கவிதையே சங்ககாலத்தே சிறப்புற்றிருந்தது என்று கூறலாம். ஆசிரியப்பாவும் அதன் இயல்பையே உடைய நாற்பா ஆகிய சூத்திரமும் பெருவழக்கில் உரைநடை போல இருந்த காலம் சங்க காலம் என்று கூறலாம். உரைநடை இலக்கியங்கள் பின்னே தோன்றுவதற்கு இவையே மூலமாக இருந்தன என்று கூறுவதிலும் தவறில்லை.

''மனத்தின் எண்ணி மாசறத்
தெரிந்து கொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல்
வேண்டும்'' 2

''குறுமையும் நெடுமையும் அளவிற்
கோடலின்
தொடர்மொழி யெல்லாம்
நெட்டெழுத்தியல'' 3

''வினையி னீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்'' 4

என்றெல்லாம் வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றைக் கூர்ந்து நோக்கினால், உரைநடையின் சாயல் அங்கெல்லாம் ஒளிவிடக் காணலாம்.

## உரையாசிரியர் ஒட்பம்

பழந்தமிழ் உரையாசிரியர்கள் கவிதை கட்டுப் பொருள் விரித்து எழுதினார்கள். தொல்காப்பியரே உரைநடைத் தோற்றத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார். நான்கு வகையில் உரைநடையைப் பாகுபடுத்தியுள்ளார். கற்றோர்க்கே பயன்பெறுமாறு எழுதப்பட்ட உரையாசிரியர்களது உரைப் பகுதிகள் தமிழகத்து உரைநடையின் தொன்மையும் நன்மையையும் அழகு ஆற்றலையுங் விளங்கிக் கொள்ளுதற்கு விழுத்துணை புரிகின்றன. இறையனார் களவியல் உரை, இளம்பூரணர், கல்லாடர் உரைகள். சேனாவரையர். பேராசிரியர் உரைகள், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் உரைகள் அடியார்க்கு நல்லார், குணவீர பண்டிதர் உரைகள், பரிமேலழகர் முதலிய பதின்மர் உரைகள் ஆகிய அனைத்தும் செப்பமுற அமைந்த சீரிய உரை நூல்கட்குத் தக்க எடுத்துக் காட்டுக்கள் திருமாலைப் பரவும் நாலாயிரத் திவ்விய பிரபந்தத்திற்கு எழுதப்பெற்றுள்ள நப்பின்னை, நஞ்சீயர், பெரியவாச்சான் பிள்ளை ஆகியோரது வடமொழியும் தமிழும் கலந்த உரைப் பகுதிகள் தனிவகையாகக் கொண்டு மதிக்கத்தக்கன. இவற்றின் ஊடே அரிய தமிழ்ச் சொற்களும், இனிய நயமும் விளங்குவதால் இவற்றைக் கற்போர் பெரும்பயன் பெறுதல் கண்கூடு, இந்த உரைநடை நூற்றாண்டு தோறும் வளர்ந்து தமிழை வளப்படுத்தி வரும் பாங்கில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈழத்துப் பெரும்புலவர் ஆறுமுக நாவலர் அவர்கள் சிறப்பிடம் பெற்று விளங்குகின்றார். உரையாசிரியர் காலத்தே திறம்பெறத் தோன்றிய தமிழ் உரைநடை நாவலர் காலத்தே, அவரது சீரிய தொண்டு நலத்தால் ஆக்கமும் ஊக்கமும் பெற்றது.

## நாவலர் நற்பணி

கி. பி. 17ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் டேனிசுக்காரராகிய சீகன் பால்கு ஐயர் தமிழகம் போந்து தமிழ் எழுத்துக்களை அச்சுக் கருவிகளின் பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் கி. பி. 1761ம் ஆண்டில் தமிழ் இலத்தின் இலக்கண ஒப்பியல் நூல் எழுதினார் இத்தாலியப் பெரியார் தத்துவபோதகசுவாமிகள், புதுவை ஆனந்தரங்கம்பிள்ளை, வீரமாமுனிவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18ம் நூற்றுண்டு) சிவஞானமுனிவர். பேரூர் சாந்தலிங்க முனிவர் ஆகிய பலர் தமிழ் உரைநடையிற் பெரும் பங்கு பற்றிப் பணியாற்றும் நேரத்தே தமிழ்த்தாய் செய்த நல்லூழால் தோன்றினுர், யாழ்ப் பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர். அவ ரால் தமிழ்மொழி பெற்ற மிகப் பெரிய வளர்ச்சி உரைநடை வளர்ச்சி என்று கூறுவது பெரிதும் உண்மையாகும்.

## 'தமிழ் உரை நடைத் தந்தை' நாவலர்

'வசன நடை கைவந்தவல்லாளராக' நாவலர் விளங்கினுர், தமிழ் மொழி கவி தைக் கலேஉயர்வுடன் உரைநடைச் சிறப்பும் ஓங்கித் திகழ்தல் வேண்டும் என்பது இச் சான்ருேரின் கருத்து ஆகும். தமிழ் உரை நடையின் தந்தை என்று வல்லோர் இவரைப் போற்றலாயினர். டிரைடன் போன்று இவர் தமிழ் உரைநடைக்கு அமைந்தார் என்று பாராட்டுவர். இவர் எழுதிய நடை செந்தமிழ்நடையாகும். எளிமையும் இனிமையும் தவழ இவர் எழுதினுர். உரைநடையிலும்செம்மை தோன்ற, உணர்ச்சிகளே வெளிப்படுத்த இயலும் என்று காட்டினுர். ஆங்கில மொழி யிற் சிறப்புற்று விளங்கும் குறியீட்டு இலக் கணத்தை, நாவலர் தமிழுக்குக் கொண்டு வந்து பொருத்தினுர். இதனுல், உரைநடை எழுதுவோன் உணர்ச்சியைப்பயில்வோனும் இனிது பெறமுடிந்தது. கிறித்தவர் வேத மான விவிலியநூலேத் தமிழில் மொழி பெயர்த்த இப் பெருந்தகையாளர், தமிழ் எண்களேயே அதிற்கையாண்டு இடத்து தம் முடைய தமிழ்ப்பற்றை உரிய இடத்து ஓங்கச் செய்துள்ளார்.

## செந்தமிழ்க் காதல்

இலக்கண வழு இல்லாமல் எழுத வேண் டும் என்ற உணர்ச்சியை முதற்கண் பின் பற்றிக் காட்டியவர் நாவலரேயாவர். எளிய இனிய சொற்களேத் தேர்ந்து தாம் கூற விழையும் கருத்துக்களே இனிது பாகுபாடு செய்து கொண்டு, உணர்ச்சி ததும்ப எடுத் தெழுதும் திறம் இவர்க்கு இயல்பாயிற்று. தாம் எழுதுவது புராண வசனமாயினும், புதிய படைப்பாயினும் எங்கும் ஒரே சிவ நெறியின் மாட்டு இவ்வருட் புலவர் வைத் திருந்த அன்பிற் சிறிதும் குறைந்ததன்று இவர் செந்தமிழின்மாட்டும் கொண்டிருந்த காதல்.

## புதிய போக்கு

வினு விடை வடிவில் தமிழ் இலக்கணத் தையும், சைவசமய உண்மைகளேயும் இவர் படைத்தார். மாணுக்கர் எளிதில் மொழி யின் நுட்பங்களேயும், சமயத்தின் சால்பு களேயும் விளங்கிக் கொள்வதற்கு இம்முறை பெரிதும் துணேபுரியலாயிற்று. இவற்றை மனப்பாடம் செய்து பழகுதற்கு இம்முறை பெரிய வாய்ப்பாயிற்று. சைவசமய வினு விடையும், இலக்கண வினு விடையும் இவ் வாறு பேரிடம் பெற்றுப் பிறங்குவன வாயின. தேவை எனத் தாம் கருது மிடங் களில், இவர் வடசொற்களேயும் விரவி யெழுதினுர். ஆயினும் இவ்வாட்சி அளவிற் குறைவே என்பது உற்று நோக்கி உணரத் தக்கதாகும்.

## பதிப்புப் பெரும் பணி

ஏட்டுச் சுவடிகளாக இருந்த நூல் களேக் கி. பி. 19ம் நூற்றுண்டில் முதன் முதலாக அச்சிற் பதிப்பித்த பதிப்பாசிரி யர்கள் பலராவர். ஆனுல் எந்தெந்த நூல் கள் யார் யாரால் முதன் முதல் அச்சிடப் பெற்றன என்றறிவதற்கு முறையான சான்றுகள் கிடைக்கப் பெறவில்லே. ஆறு முகநாவலர், தாண்டவராய முதலியார், இராமச்சந்திர கவிராயர், முகவை இராமா நுச கவிராயர் கோட்டையூர்ச் சிவக் கொழுந்து தேசிகர். திருத்தணிகை விசா கப் பெருமாளேயர், களத்தூர் வேதகிரி முதலியார், மயிலே சண்முகம் பிள்ளே தில்லே யம்பூர் சந்திரசேகரக் கவிராச பண்டிதர். டாக்டர். உ. வே. சாமிநாதையர் என்பவர்கள் அப் பதிப்பாசிரியர்கள் என்று கூறலாம். வித்தியானுபாலன யந்திரசாலே என்ற அச்சகம் சென்னேயில், நாவலர் நற் றமிழ்ப் பனுவல்களே நாளும் வெளியிடு வதற்கு நற்றுணே புரிந்தது.

## கட்டுரையாக்கம்

தமிழ் மக்களது உரைநடை வளமில் லாமல் இருந்த தென்றும் அவர்கள் அல்லற் பட்டவாறு இங்ஙனம் என்றும் உவின் சிலோ தம் தமிழ் ஆங்கில அகர வரிசையில் (1862) எழுதுகின்ற பகுதி நாவலர்க்கு முந்திய உரைநடை நிலேயை தான் நன்கு விளக்குவதாகும் தமிழனுடையஉரைநடை இன்னும் உருவடையாத நிலேயிலே தான் உள்ளது அதனேச் செவ்வையாக ஆக்குவ தற்குப் புலவோர் செய்யும் முயற்சி நற் பலன் நல்கும் பாக்களே விரைந்து பாடும் ஆற்றலுள்ள பல தமிழ் நாட்டவர்கள் பிழையின்றி உரைநடை யெழுதும் திற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்றி உள்ளனர்'' 5 இந்த நிலை நாவலரால் மாற்றப் பெற்றது என்பது உண்மை. பெரிய புராண வசனம் திருவிளையாடற் புராண வசனம், கந்தபுராண வசனம், பாலபாடம். சைவவினாவிடை, இலங்கைப் பூமிசாத்திரம் சிதம்பர மான்மியவசனம் முதலிய பல நூல்களை நாவலர் திறம் பெற எழுதி மேலையோர் கண்ட குறையைக் களைந்தார். தமிழன் கவிதை பாடுவான். உரைநடையும் வரைவான் என்று உலகுணர்ந்து பாராட்டிடச் செய்தார். 'உதயதாரகை' 'இலங்கை நேசன்' என்ற யாழ்ப்பாணத்து இதழ்களில் இவ்வருட் புலவர் எழுதிய கட்டுரைகள் நாவலரது 6 நடைச் சிறப்பினை அனைவரும் கண்டு உணரும்படி செய்தன.

## கல்விச் சிந்தனைகள்

பழமையும் பெருமையும் உடைய திருவாவடுதுறை யாதீனம் நாவலரது பேச்சுத் திறனையும் அதனால் அருந்தமிழ் மொழி பெற்றுவரும் பெரும்பலனையும் கண்டு வியந்து 'நாவலர்' என்றபட்டத்தை அவர்க்கு நல்கி அரும்புகழ் கொண்டது. ஆதலின் புதிய தமிழின் இரு கூறுகளாகிய புத்தகத்துறை, மேடைத்துறை ஆகிய இரு பெருந்துறைகளிலும்ஈடும்எடுப்புமற்றபணி பல செய்து உயர்ந்தார்நாவலர். மேலை நாட்டு மொழியினிடத்துப் பெருவிருப்பம் கொண்டு மக்கள் ஓடிய காலத்தே தமிழ்ப் பாடசாலைகளைச் சிதம்பரத்திலும் யாழ்ப்பாணத்திலும் நாவலர் நிறுவியது குறிப்பிடத்தக்க மற்றொரு மொழிப் பணியாகும். இளஞ்சிறார் உள்ளங்களிலேயே தமிழ் மொழியின் எளிமைப்பண்பும் இனிமைப் பண்பும் பதியுமானால் எதிர்கால மன்பதையில், மொழிகாக்கப் பெறும் என்பது நாவலர் கொண்டிருந்த நன்னினைவு என்று கூறலாம். கல்வி பற்றியும் தாய்மொழி பற்றியும் இவ்வரும் புலவர் கொண்டிருந்த கருத்துக்கள் மிக விழுமியன. அவை ஆய்வு முடிவுகளாகவே தோற்றுகின்றன. அவற்றை இக்காலக்கல்வியாளர் கருத்திற் கொண்டு திட்டம் வகுத்திடுவரேல் பெரும்பயன் விளையும் என்பது உறுதி.

## நாடக நற்பணி

உரைநடை நூல்களை யன்றி நாடக நூல்யாப்பினும் நாவலர்க்குப் பெரிதும் ஈடுபாடு உண்டு. இவரது தந்தையார் ப. கந்தப்பிள்ளை (1766-1942) கூழங்கைத் தம்பிரானிடத்துத் தமிழ்கற்ற பெரும் புலவர் இருபத்தொருநாடக நூல்களை இயற்றியவர் என்பர். இவர் தொடங்கி முடிக்காமல் விட்ட இரத்தின வல்லி விலாசம் என்ற நாடகத்தை நாவலரே பாடி முடித்தனர், நாடகத் தமிழும் வளர்தல் வேண்டும் என்ற நல்லுள்ளம் கொண்டவர் நாவலர் என்பதற்கு இதனிலும் வேறு சான்று தேவையில்லை என்று கூறலாம்.

## தமிழ் இலக்கிய இலக்கணப் பணிகள்

திருவள்ளுவர் பரிமேலழகர் உரை, வில்லிபுத்தூரர் பாரதம், திருக்கோவையார் உரை, தொல்காப்பியம், சேனாவரையம். இராமாயணம் பாலகாண்டம், நன்னூற் காண்டிகை, நன்னூல்விருத்தி, சூடாமணி நிகண்டுரை, இலக்கணக் கொத்துரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி பிரயோக விவேக உரை, இலக்கணச் சுருக்கம், தருக்க சங்கிரகம், திருமுருகாற்றுப்படை உரை, மதுதூரந்தாதிஉரை, அபிராமிஅந்தாதிஉரை, திரிகடுகஉரை, சிதம்பரமும்மணிக்கோவை, நால்வர் நான்மணிமாலை, ஏரெழுபது, நீதிநெறிவிளக்கம், ஆத்திசூடி கொன்றை வேந்தன் உரை, நல்வழிஉரை, நன்னெறி உரை, வாக்குண்டாம்உரை, மறைசயந்தாதி உரை, அருணகிரி அந்தாதி உரை, திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி. திருச்செந்தூர் அகவல் முதலியபனுவல்கள் நாவலரது பெரும் பங்கும் தமிழ் மொழி இலக்கண இலக்கிய வரலாற்றில் உண்டென்பதற்குத் தக்க சான்று உரைப்பனவாக உள்ளன. இவற்றிற் பல நூல்கள் தோன்றியிராவிட்டால் தமிழ் உலகின் புதிய தலைமுறையினர் இவற்றைப் பற்றி அறிந்து கொள்ளவே வாய்ப்பில்லாது போயிருக்கும் என்பது உண்மை.

## நடைச் சிறப்பியல்புகள்

நாவலரது நடை குறித்து முன்னும் கூறப்பட்டது. அவரது நடை ஆற்றொழுக்கானது, எளியது, இனியது, செந்தமிழால் ஆகியது; இலக்கணப் பிழையற்றது. வழுஉச் சொற்றொடர்பு நீத்தது, வரம்பு கடவாதது, இனிய உவமைகள் பழமொழி முதலியவும் இவரது உரைநடை நூல்களில் விரவியிருக்கும். அவை எடுத்துக் கொண்ட பொருளை இனிது விளக்கவும் செம்மைப் படுத்தவும். சிந்தையிற் பதிக்கவும் பெரிதும் பயன்படுமாறு சேர்க்கப்பட்டிருக்கும் தக்க மேற்கோள்கள் இல்லாது இவரது உரைநடை செல்லுவதில்லை. அம்மேற் கோள்களை இடம் விளங்கா மேற்கோள்களாகச் செய்து படிப்போரைக் கருத்துக் குழப்பத்திற்கு ஆட்படுத்தி விடாமல், எந்த நூலில் எந்தப் பகுதி என்று அவ்விடத்தேயே காட்டி மேலே செல்லுவது நாவலர் நல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல்பாகும். ஓசை நயம், சொல்லாட்சி, வசனப்பொருளை வலியுறுத்தல், வசனத்துள் வரும் பின்பற்றுதல் ஆகிய சிறப்புக்களை நாவலர் நடை உடையது என்பதை ஈழத்துப் புலவர் பலரும் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆங்கிலச் சொற்களை அவ்வவ்வொலிப்பு முறையிற் சிறிது வேறுபடுத்தி இவர் தம் உரைநடைப்பகுதியிற் சேர்த்தலும் உண்டு. கவர்னர், கம்மிஷனர், கவர்ன்மெண்டு, ஏசண்டு, சுப்பிரிங் கோட்டு யூரிமார், டிஸ்திறிக்கோட்டுப் பிறக்கிருசி. கிறிமினல் வழக்கு என்பவை சில எடுத்துக்காட்டுகள், வடசொற்களை வடவெழுத்தொரீஇ எடுத்தாளுகின்ற இயல்புடைய இவர் இவவாறு ஆங்கிலச் சொற்களையும் பெரும்பாலான அம்மொழி ஒலிக்களை நீக்கிவிட்டுத் தமிழுக்கேற்றபடி மாற்றிச் சேர்த்தெழுதும் இயல்பை இச்சொற்கள் காட்டுவனவாம், தனித்தமிழில்தான் எழுதவேண்டும் என்று கூறுவோர் இருதிறத்தினராவர். ஒருசாரார் தமிழொலிக் கேற்றபடி ஒலிமாற்றிக் கையாளலாம் பிறமொழிச் சொற்களை என்பர்; தமிழில்மொழி பெயர்த்துப் படைத்தே ஆளல் வேண்டும் என்பர் பிறிதொரு சாரார், முன்னவர் பக்கம் சேர்ந்திடும் கருத்தே நாவலருடையது என்பதற்கு அவரது சொல் ஆட்சி நமக்குச் சான்று நல்குகின்றது.

நாவலது சொற்றொடர்கள் பெரும்பாலும் சிறியனவே, ஆனால் திரு. வி. க. அவர்களுடையதைப் போன்று பெரிதும் குறைந்தன வல்ல. புராண வசனங்களிலே வேண்டுமாயின் நாவலரது சொற்றொடர்கள் நீண்டிருக்கக் கூடும், பொது உரைநடை, நூல்கள், கட்டுரைகளில் அவர் கையாளும் சொற்றொடர்கள் குறைவான சொற்களைக் கொண்டனவாகவே இருக்கும். ஒரு நூலாசிரியரது சரித்திரச் சுருக்கத்தினை வசனங்களில் உள்ள சொற்றொடர்களை வசனங்களில் போன்று நீளம் உடையனவாகவே இருக்கும்.

## இரண்டு இடங்கள்

''இந்நூலாசிரியராகிய சுவாமிநாத தேசிகர் சற்றேறக் குறைய நூற்றென்பது நான்கு வருஷத்திற்குமுன் பாண்டி வளநாட்டிலே பரம்பரைச் சைவவேளாளர் குலத்திலே திருவதாரஞ் செய்து, இளமைப் பருவத்தே திருக்கைலாச பரம்பரையில் விளங்காநின்ற திருவாவடுதுறையாதீனத்தைச் சார்ந்து, அக்காலத்தில் எழுந்தருளியிருந்த ஞான தேசிகரிடத்தே சமய தீக்ஷையும் விசேஷ தீக்ஷையும் அடைந்து அவ்வறத்திற்கு விதித்த நூல்களை ஐயந்திரிபின்றி ஓதியுணர்ந்து' அவ்வாறொழுகித் தவத்தான் மனந்தூயராகி, தம்முடைய ஞான தேசிகரது அருமைத் திருமேனியை விட்டு நீங்காது, அத்தேசிகரது அருட்பணிவிடையை அன்போடு செய்துகொண்டு அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர்.

''அன்னதானம் முதலிய தானங்களைச் சற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம் அசற்பாத்திரத்திலே செய்வது புண்ணியம் பாவம் சற்பாத்திரங்களினுள்ளும் கருமயாகஞ் செய்வோருக்குக் கொடுத்தது. ஒரு பிறப்பளவு நிற்கும் தபோயாகஞ் செய்வோருக்கு கொடுத்தது ஒரு நூறு பிறப்பளவு நிற்கும்,

## வடசொல்லாட்சி

சங்ககாலத்தில் நூற்றுக்கு இரண்டு பதினென்கீழ்க் கணக்கில் நூற்றுக்கு நான்கு அல்லது ஐந்து, ஆழ்வார் நாயன்மார் காலத்தில் நூற்றுக்குப் பத்து அல்லது பதினைந்து, மணிப்பிரவாளம் காலத்தில் அளவுக்கு மீறுதல் ஆகிய நிலைகளில் தமிழிற் கலந்துள்ள வடசொற்களைப் பற்றி ஆய்ந்து முடிவுகாண்பர் பேரறிஞர் டாக்டர் மு. வரதராசனார் 10 வடமொழி கற்ற தமிழறிஞர் தமிழ் நூல்களில் புகுத்திய|வடமொழிச் சொற்கள் பெரும்பாலன எனலாம்இரண்டு மொழிகளும் கலந்து புதுமொழியாக வேண்டும் என்னும் ஆர்வத்தால் வலிந்து புகுத்துவது வேறு நாவலர் கற்ற வடநூலறிவு இயல்பாக அவர் எழுதும் அருந்தமிழ் நடையில் ஆங்காங்கு வந்து விரவக் காண்கின்றோம் ஆதலில் முன்னே கூறப்பட்டவகையில் அவரது வடசொற்களை நாம் கணித்தல் வேண்டும்.

## நாவலர் புகழ்

தமிழ் மொழி நாவலரால்பெற்ற நலங்கள் எண்ணற்றவை. தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய உரைநடை யாக்கத்தில் நாவலர் பெற்றுள்ள இடம் இமயம் போன்றது. ஆதலின் ''நல்லைநகர் ஆறுமுகநாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே'' என்று பேரறிஞர் சி. வை. தாமோதரனார் கேட்டகேள்வி புனைந்துரை வகையாற் பாடப்பட்ட தன்று; முற்றிலும் உண்மை என்றேகொள்ளத்தக்கதாகும். ''வையமீன்ற தொன்மக்கள் உளத்தினைக் கையினாலுரை காலமிரிந்திடப்பைய நாவையசைத்த பழந்தமிழ் ஐயை'' புகழ் உள்ளனவும் நாவலர் புகழும் நின்று நிலவும் என்பது உறுதி. ×

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST WISHES
FROM

V

# Marina Trading Co.

No. 338, Old Moor Street,

Colombo 12.

Telephone : 34521 & 35214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நூற்றுண்டுப் பெருவிழா
பொலிவுற வாழ்த்துகிறோம்

# Peoples Trades & Supplies
Dealers in all kinds of Local Products

## பீப்பிள்ஸ் ரிறேட் அன் சப்ளேஸ்
*பலவகை உள்ளூர் விளை பொருள் விற்பனையாளர்கள்*

**112, 4th Cross Street, & 143, Maliban Street**
**COLOMBO 11**

T'phone : 25389, 23509 T'grams : SARAVANAM

UNIVERSITY OF JAFFNA LIBRARY

எமது நல் வாழ்த்துக்கள் !

↓

# வெலிகம ஸ்டோர்ஸ்

*139, 4ம் குறுக்குத் தெரு*
**கொழும்பு 11**
தொலைபேசி : *2 3 2 7 1*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH

BEST

COMPLIMENTS

FROM

LATHA TRADING CO.

59, DAM STREET,

COLOMBO-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM

↓

MALAR TRADING CO.

*General Merchants & Commission Agents*
*Dealers in Groceries & CurryStuffs*

No. 167, 5th Cross Street
COLOMBO-11.

Phone : 34881 Grams : "MALAR"

WITH BEST WISHES
FROM

↓

NEW COLOMBO STORES

WELLAWATTE,
COLOMBO-6.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வித்துறையில் நாவலரின் தீர்க்கதரிசனம்

— கி. லக்ஷ்மண ஐயர் —
(வித்தியாதிபதி, கல்வி அமைச்சு)

எவ்வளவோ காலத்துக்குப் பின்பு நிகழும் காரியங்களை எவ்வளவோ காலத்துக்கு முன்பே தம் உள்ளொளியால் அறிந்து உரைக்கக்கூடியவர் எவரோ அவரே தீர்க்கதரிசி. இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்தது 1947 இல். ஆயினும் அதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே சுப்பிரமணிய பாரதி

''ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து
விட்டோம் என்று
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே''

என்று பாடி விட்டார். பாரதி இறந்தது 1921ம் ஆண்டில். ஆயினும் அவர் இப் பாடலை 1909 ஆம் ஆண்டுக்கு முன்பே பாடிவிட்டார். அவர் இப்பாடலைப் பாடிய போது இந்தியாசுதந்திரம் பெறுவதற்கான அறிகுறிகள் அதிகமாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் சுதந்திரம் அடைவோம் என்று பாரதி பாடவில்லை. சுதந்திரம் அடைந்து விட்டோம் என இறந்த காலத்திலே பாடியதிலே பாரதியின் தீர்க்க தரிசனத்தைக் காண்கின்றோம்.

பாரதியைப் போலவே நாவலரும் ஒரு திர்க்கதரிசி. பின் நடக்கப் போவதை ஏறத்தாழ நாற்பது ஆண்களுக்கு முன் தான் பாரதியால் உணரக்கூடியதாயிருந்தது. ஆனல் நாவலர் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்குப் பின் நிகழ்ந்தவற்றை நூறு ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்த பெருமையை உடையவர். பின்நிகழவிருந்தவற்றை நாவலர் சொல்லில் மட்டும் சொல்லி நின்று விடவில்லை. செயலிலும் செய்து காட்டிய சிறப்புடையவர்.

அண்மைக் காலத்திலே கல்வித்துறையிலே நிகழ்ந்த சில திருப்பங்களை மட்டுமே உதாரணமாகக் கொண்டு நாவலருடைய தீர்க்கதரிசனத்தை இங்கு ஆராய்வோம், முதலில் இலங்கையை எடுப்போம்·

இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டு 1948 இதற்குச் சற்று முன்னும் பின்னுமாக இலங்கைக் கல்வித் துறையிலே மிகப் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றின் மிகப் பிரதானமான மூன்றை இங்கு குறிப்பிடுவோம். இலவசக் கல்வி, தாய்மொழி மூலம் கல்வி, சமயக் கல்வி ஆகியவையே அம் மூன்றும்.

## இலவசக் கல்வி அண்மையில் 1945 நாவலர் ஆரம்பித்தது 1846

1945 இல் இலங்கையில் இலவசக் கல்வியைத் திரு.கன்னங்கரா ஆரம்பித்தபோது 'விலைமதிக்க முடியாத முத்து' என அதனை எல்லோரும் பாராட்டினர். பலருடைய ஆலோசனைகள், அறிக்கைகள் ஆரவாரங்கள் ஆகியவற்றுடனேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கைக் கல்வித் துறையிலே இலவசக் கல்வி ஏற்படுத்தப் பட்டபோது அது மிக மிக முக்கியமான திருப்பமாகவும் உலகிலேயே வேறெங்குமில்லாத மிகப் பெரிய சாதனையாகவும் கொண்டாடப்பட்டது.

இடையிலே அற்றுப் போய், பின் இவ்வளவு ஆராய்ச்சியோடும், ஆரவாரத்தோடும் ஏற்படுத்தப்பட்ட இந்த இலவசக் கல்வியை நாவலர் தான் தனியாகவே சிந்தித்து எதுவித ஆரவாரமுமின்றிச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன் அதாவது 1846 ஆம் ஆண்டிலேயே ஆரம்பித்து விட்டார் என்பது பலருக்கு வியப்பாக விருக்கலாம்.

நாவலர் காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த பள்ளிக்கூடங்களெல்லாம் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்கிக் கொண்டே படிப்பிக்குமிடங்களாயிருந்தன. வேதனம் பெறாது கற்பிப்பதே உத்தமம் என்பதை முதன் முதலில் சிந்தித்த சிறப்பும் சிந்தித்து மட்டுமன்றிச் செயற்படுத்திய பெருமையும் நாவலருக்குகே உரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1945 இல் இடம் பெற்ற இலவசக் கல்வியை 1846 இலேயே ஆரம்பித்தமை கல்வித்துறையில் மட்டுமன்றி அதனோடு பின்னிப் பிணைந்து இயங்கும் சமூகம், அரசியல் பொருளாதாரம் ஆகிய துறைகளிலும் நாவலருக்கிருந்த தீர்க்கதரிசனத்துக்கு நல்ல எடுத்துக்காட்டாகும்.

## தாய்மொழி மூலம் கல்வி-அண்மையில்1946 நாவலர் தொடங்கியது 1848

இலங்கைக் கல்வித்துறையிலே ஏற்பட்ட அடுத்த மிகப்பெரியதிருப்பம் ஆரம்ப வகுப்புத் தொடக்கம் பல்கலைக்கழக இறுதி வகுப்பு முடிய எல்லாப் பாடங்களையும் தாய் மொழி மூலம் புகட்ட ஆரம்பித்தமையேயாகும். 1946 இல் முதல் முதலாகத் தொடங்கிய இப்போதனு மொழி மாற்றம் படிப்படியாக உயர்ந்தது. 1957இல் எஸ். எஸ். ஸி. பரீட்சை தாய் மொழி மூலம் நடை பெறுவதற்கும் 1963 இல் பி.ஏ. பரீட்சை முதன் முறையாகத் தாய் மொழியில் நடைபெறுவதற்கும் ஏதுவாயின. போதனுமொழி விஷயத்திலே இந்தியா கூட இன்னும் சாதிக்க நினையாத அரிய சாதனையை இலங்கை சாதித்துள்ளது. தமிழுக்குத் தாய் நாடாகிய தென்னிந்தியாவிலே உள்ள பல்கலைக் கழகங்களிலே கலையியற் பாடங்கள் கூட இன்னும் ஆங்கில மூலமே புகட்டப்படுகின்றன. சேய்நாடாகிய இலங்கையில் பி. ஏ. பரீட்சை முழுவதையும் தமிழிலே நடத்தத் தொடங்கி இன்று ஆண்டுகள் பலவாகி விட்டன. தமிழ் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் போதனுமொழி இன்றும் ஆங்கிலமாயிருப்பதையும் இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழ் மாணவர்களுக்குத் தமிழே போதனுமொழியாகச் சென்ற பல ஆண்டுகளாக இருந்து வருவதையும் படித்தவர்களுட்கூடப் பலர் அறியாதிருக்கலாம்.

எந்த மாணவனுக்கும் கல்வி யூட்டுவதற்கு அவனுடைய தாய்மொழியே மிகச் சிறந்தது என்பதே பல தேசக் கல்வி நிபுணர்களும் உளதத்துவ விற்பன்னர்களும் கண்ட முடிபு. பலகால அனுபவத்தைக் கொண்டும் பலவித ஆராய்ச்சிகளைச் செய்துமே அவர்கள் இந்த முடிவுக்கு வந்தார்கள். நாவலர் எதுவித ஆராய்ச்சியுமின்றி நூறுண்டுகளுக்கு முன்பே இந்த முடிவுக்கு வந்து விட்டார். நாவலர் காலத்திலிருந்த முக்கியமான பாடசாலைகள் யாவும் ஆங்கிலத்திலேயே இருந்தும் அவர் முதலிலே தாபித்த வித்தியாசாலை தமிழையே எல்லாப் பாடங்களுக்கும் போதனுமொழியாகக்கொண்டது.இப்பாடசாலையில் மாணவர்களுக்குக் கற்பிக்கத் திட்டமிட்ட பாடங்கள் பூகோள நூல், வைத்தியம், சோதிடம், வேளாண்மை நூல், வாணிக நூல், அரசநீதி, சிற்ப நூல் முதலானவைகள் குறிப்பிட்டுள்ளதைக் கவனிக்க வேண்டும். இவை யாவும் தாய் மொழி மூலமே கற்பிக்கப்படவேண்டுமென்பது அவருடைய கொள்கையாயிருந்தது.

1946 இல் எவ்வளவோ ஆராய்ச்சிகளுக்கும் அறிக்கைகளுக்கும் பின்னுல் ஏற்பட்ட இப்போதனுமொழி மாற்றத்தைத் தம் தீர்க்கதரிசனத் திறத்தால் ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன் (1848 இல்) உணர்ந்து செயலாற்றியவர் நாவலர். அத்தகையதொரு மேதா விலாசம் அவரிடம் இருந்தது.

தாய்மொழி மூலம் கற்பிக்கத் தொடங்குவதைத் தொடர்ந்து ஏற்படக்கூடிய பெரிய பிரச்சினை தாய்மொழியிலே ஒவ்வொரு பாடத்திலும் தரமான நூல்களைத் தயாரித்தல். தாய்மொழி மூலம் கற்பிப்பதே சிறந்தது என்பதை இற்றைக்கு நூறுண்டுகளுக்கு முன்பே உணர்ந்த நாவலர் தாய்மொழியிலே ஒவ்வொரு பாடத்திற்கும் தரமான நூல் எழுதப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணரத் தவறவில்லை. அவர் எழுதிய இலங்கைப் பூமிசாத்திரம் என்ற நூலொன்றே அவருடைய சிந்தனை சென்ற வழிக்குச் சான்று பகருவதற்குப் போதுமானது. எனவே இந்த வகையிலும் நாவலர் ஒரு முன்னேடியாகின்ருர்.

## சமயபாடம் கட்டாயமாகியது - அண்மையில் 1955 நாவலர் செய்தது 1848

சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியமையே இலங்கைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வித் துறையிலே அண்மைக் காலத்தில் ஏற்பட்ட மூன்ருவது பெரிய மாற்றம். ஜி. சி. ஈ. பரீட்சைக்குக் காலத்துக்குக் காலம் கட்டாய பாடமாக நியமிக்கப்பட்ட பாடங்களைக் கொண்டே நாட்டை நிருவகித்தவர்கள் கல்வியில் எதை முக்கியமெனக் கருதினுர்கள் என்பதை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். முன்பு மொழி, கணிதம் ஆகியவை கட்டாய பாடங்களாக இருந்து வந்தன. 1965 இலிருந்து ஜி. சி. ஈ. பரீட்சைக்குச் சமயபாடமும் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளது. கல்வியைப் பற்றிய அடிப்படையான நோக்கம் மாறியதையே சமயபாடத்தைக் கட்டாய பாடமாக்கிய இச் செயல் பிரதிபலிக்கின்றது, 1965க்குச் சில ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1955 இலேயே எல்லா அரசாங்க பாடசாலைகளிலும் சமயம் கட்டாய பாடமாக்கப்பட்டு விட்டது. இலங்கைக் கல்விப் போக்கு சென்ற நாற்பது ஐம்பது ஆண்டுகளாக எங்கெங்கெல்லாமோ சுற்றிச் சுழன்று ஈற்றிலேதான் சமயக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இந்த நிலையை அடைந்தது. ஆனுல் நாவலர் அவர்கள் நூற்ருண்டுகளுக்கு முன் எடுத்த எடுப்பிலேயே சமயக்கல்வியைமையமாகவைத்து ஏனைய யாவற்றையும் அதற்குத் துணையானவையாக்கித் தம் கல்வித்திட்டத்தை அமைத்தார். பாட விதானத்தில் சமய பாடத்துக்கு நாவலர் கொடுத்த முக்கியத்துவத்தை நிலை நாட்ட ஆதாரம் தேடி அலையத் தேவையில்லை. கல்வி சம்பந்தமாக எழுதிய எழுத்து எதிலும், செயல் எதிலும் இந்த நோக்கமே மேலோங்கி நிற்பதை எவரும் எளிதாகக் காணலாம்.

மேனுட்டுக் கல்வி நிபுணர்கள் கல்வியின் நோக்கம் பற்றிப் பற்பல கோட்பாடுகளை இன்று வரையறை செய்து அவற்றுக்கு வெவ்வேறு பெயர்களும் கொடுத்துள்ளார்கள். சூழலைச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான பயிற்சியை அளிப்பதே கல்வியின் நோக்கம் எனச் சிலரும், புலனுர்ணவுகளைப் பூரணமாக அனுபவிப்பதற்கு வேண்டிய யாவற்றையும் உற்பத்தி செய்யவும் பின் அவற்றைப் பூரணமாகப் பயன்படுத்திப் பூரண சுகம் பெறவும் பயிற்றுவதே கல்வியின் நோக்கம் என வேறு சிலரும் நிலையற்ற சரீரத்தைக் கொண்டு நிலையான ஆன்ம ஈடேற்றத்தை அடைவதற்கான வழிகளைப் பயிற்றுவதே கல்வியின் நோக்கமென இன்னும் சிலரும் கூறுவர். இவை தவிர இன்னும் சிலரும் வெவ்வேறு நோக்கங்களைக் கூறுவாருமுளர். இத்தகை கோட்பாடுகளைக் குறிக்க ஆங்கிலத்திலே பல பெயர்களும் வழங்குகின்றன. அண்மைக்காலத்தில் இலங்கைக் கல்வியாளர் ஒழுக்கத்தையும் 'ஆன்ம ஈடேற்றத்தையுமே கல்வியின் அடிப்படை நோக்கமாகக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். சமய பாடம் கட்டாயமாக்கப்பட்டமை, இரண்டு புதுப் பல்கலைக்கழகங்கள் சமய அடிப்படையில் தாபிக்கப்பட்டமை, இம் மாதம் அநுராதபுரத்தில் புத்த குருமாருக்கெனப் புதிதாக ஒரு பல்கலைக்கழகம் தொடங்குவது ஆகியவை யாவும் இப்போக்கை நன்குபுலப்படுத்துகின்றன.

நல்லொழுக்கத்துக்கும் ஆன்ம ஈடேற்றத்துக்கும் வழி வகுப்பதே கல்வியின் முக்கிய நோக்கம் என்பதே ஆறுமுக நாவலரின் திட்டவட்டமான முடிவு என்பதே அவர் கல்வி சம்பந்தமாக எழுதிய ஒவ்வொரு அட்சரமும் சான்று பகருகின்றது. நூற்ருண்டுகளாகச் சரியான குறிக்கோளில்லாது எங்கெங்கெல்லாமோ திரிந்து நூற்ருண்டுகளுக்கு முன் நாவலர் கொண்டிருந்த முடிவுக்கே 'இன்றைய இலங்கை திரும்பிக் கொண்டிருக்கின்றது. நாவலரது தீர்க்கதரிசனத்துக்கு இதுவும் சான்ருகும்.

## பாடநூல்கள் எழுதும் முறையில் முன்ஞேடி

சிறுவருக்குரிய பாடநூல்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றியும் இன்று பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. இங்கும் நாவலர் முன்ஞேடியாகவே இருந்திருக்கின்ருர். வெற்று வசனங்களும் அதிக பயனில்லாத வசனங்களும் இல்லாமல் பொருள் பொதிந்த வசனங்களும், மேலே குறிப்பிட்ட கல்வியின் முக்கிய நோக்கத்துக்கு ஏற்ற வசனங்களும் கட்டுரைகளுமே அவர் எழுதிய பால பாடங்களில் அமைந்திருப்பது அவற்றைக் கூர்ந்து நோக்குவார். எவருக்கும் புலனுகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிபேதமின்றிப்பதிப்பித்தல் — அண்மையில் 1959 நாவலர் செய்தது 1861

பழைய நூல்களைப் பதிப்பிப்பதும் கல்வித் துறையோடு மிக நெருங்கிய ஓர் அம்சமாகும். இங்கும் நாவலரது சிறப்பைக் காண்கின்றோம். ஆதிகாலத்தில் ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பாடல்களை அச்சிடும்போது பல ஏடுகளை ஒப்பிட்டுப் பரிசோதித்து அச்சிடுவதே வழக்கம். ஏட்டுக்கு ஏடு சிற்சில சொற்கள் மாறு படக்கூடும். ஓர் ஏட்டிலே உள்ள ஒரு பாட்டில் காணப்படும் ஒரு சொல்லுக்குப் பதிலாக வேறோர் ஏட்டிலே வேறொரு சொல் காணப்படும். இவற்றுள் எது பாட்டைப் பாடிய புலவன் கையாண்ட சொல் என்பதை நிச்சயிப்பது சிரமமாயிருக்கும். அப்பாட்டை அச்சிடுவோர், ஓர் ஏட்டிலுள்ள சொல்லைப் பிரதி பேதம் எனக் குறிப்பிட்டு அடியிலே அச்சிடுவது வழக்கம். இவ்வாறுபிரதிபேதங்கள் அனைத்தையும் அச்சிடுவதே ஏற்றதெனப் பலரும் கருதி வந்தனர். முதலில் நல்லதெனக் கருதப்பட்ட இந்த முறை காலப்போக்கில் தொல்லையானதெனக் கருதப்படலாயிற்று. பாடலிலுள்ள சொற்கள் பலவற்றுக்குமேல் இலக்கங்களும் அடியில் அவ்விலக்கங்களுக்குரிய பிரதிபேதச் சொற்களும் நிறைந்து கற்போருக்குப் பெரும்பாலும் மாணவருக்குத் தொல்லையையும் மலைப்பையும் உண்டு பண்ணுவனவாயின. கோபாலகிருஷ்ண மாச்சாரியார் வெளியிட்ட இராமாயணத்தைப் பார்த்தால் பிரதிபேதப் பெருக்கம் தெரியும்.

பிரதிபேதச் சொற்களையும் பழைய ஏடுகளையும் மீண்டும் ஆராய்ந்து மிகப் பொருத்தமான சொல்லைமட்டும் ஏற்றுக் கொண்டு, ஏனைய சொற்களை அகற்றி விட்டுப் பிரதிபேதமில்லாதபடி நூல்களைப் பதிப்பதே நல்லது என்ற எண்ணம் அண்மையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே பல வித்துவான்கள், பண்டிதர்கள் எம். ஏ. பி. எச். டி. பட்டதாரிகள் பலரும் பல ஆண்டு முயன்று இராமாயணத்தைப் பிரதி பேதமில்லாமல் அச்சிட்டுள்ளார்கள்.

இந்த முயற்சியையும் நாவலர் நூறுண்டுகளுக்கு முன்பே செய்யத் தொடங்கி விட்டார். நாவலர் பதிப்பித்த திருக்குறள் ஒன்றே உதாரணத்துக்குப் போதும். பிரதிபேதம் இல்லாமல் நூலை வெளியிட்டதன் மூலம் நாவலர் இரண்டு சிறப்புக்களுக்கு உரியவராகின்றார், இவ்வளவு காலத்துக்குப் பின் இன்றைய அறிஞர்கள் அடைந்த முடிவை நூறுண்டுகளுக்கு முன்பே அடைந்தது முதற்சிறப்பு. இரண்டு அல்லது மூன்று சொற்கள் உள்ள இடத்து எது மிகப் பொருத்தமானது என்பதைத் துணிந்து கூறுவது இலகுவான செயலன்று. இன்று பல அறிஞர்கள் பலகாலம் ஒருங்கிருந்து ஆராய்ந்து செய்யும் அருஞ்செயலை அன்று ஆறுமுக நாவலர் தானே தனித்து நின்று செய்தமையே இரண்டாவது சிறப்பு.

படிமுறையாகப் பாடங்களையும் பாட நூல்களையும் அமைத்தல், பல்கலைக்கழகங்களை நிறுவுதல், விரிவுரை (பிரசங்க) முறை மூலம் அறிவு புகட்டல், வித்துவான், பண்டிதர், பி. ஏ. முதலிய பட்டங்களுக்கான பரீட்சைகளை நடத்துதல், வயது முதிர்ந்தோருக்கு ஏற்ற போதனை வசதி அமைத்தல், பிறமொழிகளிலிருந்து அறிவு நூல்களை மொழி பெயர்த்தல் ஆகியவை தற்காலக் கல்வித்துறையில் முக்கிய இடம் வகிப்பவை. இவை யாவும் இந்த நூற்றுண்டிலே விருத்தியடைந்தவை. ஆயினும் நாவலர் அவர்கள் கல்வி சம்பந்தமாகத் தொடங்கிய செயல்களையும் கூர்ந்து நோக்கினுல் இங்கு குறிப்பிட்ட ஒவ்வொன்றைப் பற்றியும் சென்ற நூற்றுண்டிலேயே அவர் சிந்திக்கவும் செயற்படவும் தொடங்கிவிட்டார் என்பது புலனுகும்.

இவ்வாறு கல்வி சம்பந்தப்பட்ட பல துறைகளிலும் நாவலருக்கிருந்த தீர்க்க தரிசனத்தையும் ஒவ்வொரு துறையிலும் அவர் முன்னேடியாகத் திகழ்ந்த சிறப்பையும் உன்ன உன்னப் பெருவியப்பு ஏற்படுகின்றது. அவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர். அசாதாரண ஆற்றல் கைவரப் பெற்ற ஓர் அதிதர் என்ற எண்ணமே மேலோங்குகின்றது. O

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With

Best

Compliments

from

# FREE LANKA TRADING CO. LTD.,

**P. O. Box 125**
**COLOMBO.**

Telex: 1147

Telephone : 27027-8
26811

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS OF

# New City Traders

No. 4 Adamally Buildings

**COLOMBO 13**

BEST COMPLIMENTS OF

# BALA SAROJA STORES

Wholesale & Retail Merchants & Estate Suppliers

**6 South Lane, BADULLA.**

Telegrams : " BALASAROJA " Telephone ; 445

*Stores :*
155 Prince Street
Colombo 11
Phone : 20773

*Office :*
24 Old Butchers Street
Colombo 11
Phone : 21615

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

V

# ARASAN COMPANY

Importers, Exporters
General Merchants &
Commission Agents

NO 72-A, 4TH CROSS STREET,

COLOMBO-11

T'phone : 29407


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST WISHES FROM

↓

# B. A. CADER

MANUFACTURERS & DISTRIBUTORS

of

## REMY BLUE

No 119, Wolfendhal Street

Colombo 13

*Best Compliments of*

↓

# LINGAM TRADERS

Dealers in Dry Fish & Foodstuffs

100, 4th Cross Street,

COLOMBO-11.

Phone : 26739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவரசரும் நாவலரும்

—சிவத்தமிழ்ச்செல்வி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி—

இவ்வாண்டு கார்த்திகைத் திங்கள் நாவலர் பெருமானின் நூற்றாண்டு விழாவைச் சைவ உலகம் எங்கணும் பேருவகையுடன் கொண்டாட முன்வந்துள்ளமை போற்றுதற்குரியது. சமய குரவர்கள் வழிநின்று சைவத்தையும் தமிழையும் பேணிக்காத்த பெருந்தகை அவர்களுக்கு விழாவெடுக்குமிந்நாளில் அவர்கள் வாழ்வு அப்பர் பெருமான் அடிச்சுவட்டைப் பின்பற்றியது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளல் பயன் தருவதாக அமையுமன்றோ.

மெய்ம்மையாம் உழவைச் செய்து விருப்
பெனும் வித்தை வித்தி
பொய்ம்மையாம் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சி
தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும்
வேலியிட்டு
செம்மையுள் நிற்பாராகில் சிவகதி
விளையுமன்றே.

என்பது அப்பர் வாக்கு. சிவ வினையையே தமக்கு ஊதியமாகக் கொண்டவர் நாவலர் பெருமான் "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாகும்" என்பது நாவலர் வாசகம். இதற்கேற்பச் சிந்தை,செயல் இரண்டையும் சிவார்ப்பணமாக்கியவர் இவர். சிவனுண்டு பயமில்லை என்பது இவர் நாவிலெழும் மணி வார்த்தையாகும். நால்வர் பெருமக்கள் வழியில் நின்று சிவ வாழ்வைத் தவ வாழ்வாகக் கொண்டு சிவத்தொண்டுபுரிந்து சிவ நெறியையும் செந்தமிழையும் சீர் செய்த காரணத்தால் ஐந்தாம் குரவர் எனப் போற்றப்பட்டார்.

ஆரூரனில்லை புகலியர் கோனில்லை
அப்பனில்லை
சீருரும் மாணிக்கவாசகனில்லை
திசையளந்த
பேருரு மாறுமுக நாவலனில்லை
பின்னிங்குயர்
நீருரும் வேணியன் மார்க்கத்தைப்
போதிக்கும் நீர்மையீர்.

என்று இரங்கிப் பாடினுர் உடுப்பிட்டி சிவ சம்புப் புலவர். நால்வர் பெருமக்களில் தாசனும் நிலையில் எம்பெருமானோடு தொடர்பு கொண்டவர் திருநாவுக்கரசு நாயனுர். இவர்வாழ்ந்துகாட்டிய வழியிலே நாவலர் பெருமானை நாம் காணமுடிகிறது.

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணியல்லா தொன்றிலர்
ஈர நெஞ்சினர் யாதும் குறைவிலார்
வீரம் என்னுல் விளம்புந் தகையதோ·

என்ற சேக்கிழார் வாக்குக் கேற்ப வாழ்ந்தவர்கள் இவர்கள். எனவே நாவரசர் அடிச்சுவட்டில் நாவலர் பெருமானின் புனித வாழ்வு அமைந்தமையை நினைவு படுத்துவோமாக.

## சைவத்தின் மேற் சமயம் வேறில்லை

திருநாவுக்கரசுநாயனுர் இளமையிலேயே நிலையாமையுணர்வுக்குட்பட்டவராய்ச் சமணத்திற் சேர்ந்து சைவத்தை மறந்து சில காலம் ஒழுகினுராயினும் முற்பிறப்பிலே பெருந்தவம் செய்த புண்ணியத்தினுல் மீண்டும் சைவத்தை வந்து அடையும் தகுதி பெற்றுர். பரசமயம் புகுந்த இவருக்கு சூல நோயை ஏற்படுத்தி உண்மை நெறியாகிய சைவத்தை உணர வைத்தார் சிவபெருமான். நாவலர்பெருமான் இந்த உண்மையை அழகாக விளக்கிறுர். "சிவ புண்ணியம்செய்ய ஆன்மாக்கள் ஒரோவழி தீது செய்யினும் அவர்களை கைவிடாது காக்கும் பெரும் கருணையினர் சிவனே" என்பது அவர் வாக்கு ஆகும். சேக்கிழார் சுவாமிகளும் இறைவனுடைய திருவிளையாடலைக் காட்டும் இடத்தில் நல்லாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்துணர நம்பரனுளாமையினுல் கொல்லாமை மறைந்துறையும் அமண சமயம் குறுகுவார் "எனக் காட்டியுள்ளார். சமணத்தில் புகுந்து நின்ற நிலையிலும் அம்மதத்தவர்களால் தருமசேனர் என்ற பட்டம் பெற்றுப்பெருமையுடன்பாராட்டப்பட்டுள்ளார். மீண்டும் சைவத்திற்குத் திரும்பி சைவசமயமே உண்மைச்சமயமென்றுணர்ந்து சமணமன்னவனையும் சைவத்தின் பால் ஈடுபாடு ஏழச்செய்து பணிபுரிந்தவர் திருநாவுக்கரசர்.

"விரிவிலா அறிவினேர்கள் வேருெரு சமயம்செய்தே
எரிவினுல் சென்ருரேனும் எம்பிரார்க்கு ஏற்றதாகும்"

என்ற நிலையில் சைவத்தின் பெருமையை நிலைநாட்டினுர்.

நாவலர் பெருமான் கிறிஸ்தவ மத பாதிரியார் பார்சிவல் அவர்களின் பெரும் பாராட்டைப் பெற்றவர் "மமகுரு" என்று பாதிரியாரவர்களே அழைத்தார் என்ருல் நாவலர் பெருமைக்கும் வேற்றுமதத்தவரின் பாராட்டுக்கும் இது ஒரு சிறந்த சான்ருகும். விவிலிய நூலை தமிழில் மொழிபெயர்த்துக்கௌரவம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. சைவத்தில் நின்று திறம்பாத திண்மையும் சைவத்தின் பெருமையை ஏனையோருக்கு உணர்த்திய சிறப்பும் இவரைச் சைவத்தின் காவலர்' என்று போற்றுதற்குப் பூரண சான்றுகளாக அமைகின்றன. இருவர் வாழ்விலும் சைவசமயத்தை முதன்மைகாட்டி நிலைநிறுத்தும் பணி விஞ்சி நின்றது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர்.

## பிரமச்சரிய நிலை

நாவுக்கரசு சுவாமிகள் இளமையிலே பெற்ருேர்களை இழந்தமையாலும் தமக்கையாரின் மங்கல வாழ்வு தடைப்பட்டதாலும் மனமுடைந்து யாக்கை நிலையாமையைப்பற்றி உறுதி பூண்டிருந்தார். இந்நிலையில் கிருகஸ்தராம் நிலைக்குச் செல்ல விரும்பவில்லை, சைவத்துக்குத் திரும்பிய பின்பும் தனது பிரம்மசரியத்தையே உறுதியாகக் கொண்டு நற்பணியாற்றினுர் நாவரசர். இந்த வழியிலே நாவலர் பெருமான் பெரும் வெற்றியைக் கண்டார். திருமணம் பற்றிய எண்ணங்களே இவருள்ளத்தில் எழுவதற்கு இடமில்லாமல் போய்விட்டது. சிறீதனம் கொடுத்து தமது பெண்களை நாவலருக்கு விவாகம் செய்துவைக்க எத்தனையோ பிரமுகர்கள் முன்வந்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாமல் சைவப் பணியையே தனது முழுமூச்சாகக் கொண்டு வாழ்வு முழுவதும் நைட்டிக பிரமச்சரியத்தை மேற்கொண்டு வாழ்ந்தவர். நாவலர்ஐயா அவர்கள். இத்தகைய விரதம் பூண்டமையினுலேயே வாழ்வு முழுவதும் நற்பணி புரியும் ஆற்றலைப் பெற்ருர்.

## சைவப் பிரசாரம்

சமணத்தின் தாக்குதலின்றும் கிறீஸ்தவத்தின் தாக்குதலின்றும் சைவத்தை எழுச்சிபெற வைக்க வேண்டுமென்ற ஒரே நோக்கு நாவுக்கரசருக்கும் நாவலர் பெருமானுக்கும் ஏற்பட்டது. அம்மதத்தவர்கள் கையாண்ட பிரசார வேலைகளை இவர்கள் மேற்கொண்டு ஊர்கள் தோறும் சென்று பிரசாரம் செய்தனர்.

" மனிதர்காள் இங்கே வம்மொன்று சொல்லுவேன்
கனிதந்தால் கனி உண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழல் ஈசன் எனுங்கனி
இனிது சாலவும் ஏசற்றவர்கட்கே "

என்பது அப்பர் சுவாமிகளின் பிரசாரம் இதே நிலையில் ஆலயங்களில் சொற்பொழிவுகளைச் செய்து மக்கள் மனதைத் தெய்விக சிந்தனையில் திருப்பிச் சிவசிந்தனையை ஏற்படுத்தினுர், நாவலர் பெருமான். வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலிலும் சிதம்பரத்திலும் ஆற்றிய சொற்பொழிவுகள் சைவ சமயத்து மேலும் உறுதியைக் கொடுப்பதாக அமைந்தன. எழுத்து வாயிலாகவும் சொற்பொழிவு வாயிலாகவும் சைவத்துக்கு அரண் செய்தார் நாவலர்.

பாடல்கள் மூலமும் உழவாரத்தொண்டின் மூலமும் பெருமைதந்தார் நாவரசர், கருணை உள்ளத்தோடு சமுதாயத்தை நோக்குவதிலும் சரியைத் தொண்டுகளாற்றி இறைவனை அணுகுவதே எமக்கு ஏற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழி என்று காட்டுவதிலும் இரு பெரு மக்களும் வழிகாட்டிகளாக எமக்கு அமை கின்றனர்.

## அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை

சமணர்கள் விளைவித்த துன்பங்கள் நாவுக்கரசருக்கு எந்தவித ஊறையும் ஏற்படுத்தவில்லை. ஏனென்றால் ''ஈசன் எந்தை இணையடி நீழலே'' என்ற நம்பிக்கை இவருள்ளத்தில் இறுக்கமாக அமைந்திருந்தது. பட்டத்து யானையை ஏவிவிட்டபோது பாடிய பதிகத்தில்

''அஞ்சுவதுமில்லை அஞ்சவருவதுமில்லை'' என்று அஞ்சா நெஞ்சுடன் பாடினார். நாவலர் பெருமானை நம்மவரே பலர் எதிர்த்தனர். அவர் கண்டனங்களுக்கு எதிர்ப்புக் காட்டினர். ஆலய முகாமையாளரும் அந்தணர்களும் ஆத்திரம் கொண்டனர். ஆனால் ''சிவனுண்டு பயமில்லை'' என்ற வாசகத்தை ஜெபித்துக்கொண்டு நல்ல பணியாற்றினார் நாவலர் பெருமான். நல்லதைச் செய்வேன் அல்லாததை விடுவேன் என்ற விரதம் பூண்ட இவர்களின் தூய பணியினாலேயே சைவம் இத்துணை எழுச்சி பெற்றதெனலாம்.

## நாவன்மை

இருவர் நாமத்திலும் ஒரு விசேடமே தெனில் நாவன்மையைக் காட்டி நிற்பதே யாகும். "நாவுக்கரசெனும் நாமம் இவ்வுலகேழிலும் மன்னுக'' என்று இறைவனே பட்டம் சூட்டியதும் ''நாவுக்கரசனே எழுந்திரு'' என்றுகூறி திருக்கையிலையில் காட்சி கொடுத்ததும் பெரிய புராணம் காட்டும் சான்றுகளாகும்.

நாவலர் பெருமானைத் திருவாவடுதுறை ஆதீனத்தார் கௌரவித்து நாவலர் என்ற பட்டமளித்ததும் நாமறிந்ததே. நாவன்மைமிக்க இவ்விருவர் பணியினால் சைவமும் தமிழும் காப்பாற்றப்பட்டதை எவரும் மறுக்க முடியாது.

''சொலல் வல்லன் சோர்விலன்
அஞ்சான் அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது''

என்ற வள்ளுவர் வாக்குக்கிணங்கப் பகை வரும் மதித்துப் போற்றுதற்குரிய சொல்வன்மை இவ்விருவர் பாலும் அமைந்திருந்தது. சிவநெறியின் தொன்மையையும் சிவபரம்பொருளின் பேரருட்டிறனையும் பாட்டினாலும் உரையினாலும் விளக்கி மக்கள் உள்ளத்தைப் பண்படுத்தியவர்கள் இவர்கள். சென்ற நூற்றாண்டில் நாவலர் பெருமான் பிரசங்கம் செய்த போது அவருடைய விரோதிகளும் தன் பகை மறந்து கைகட்டி வாய்புதைத்து வாளாவிருந்து கேட்டனரென்பதை நாமறிகிறோம். நாவரசர் வாக்கிலும் நாவலர் வாக்கிலும் சொற்பஞ்சம் என்பது மருந்துக்கும் கிடையாது என்பதை யாவரும் அறிவர். எனவே இவர்களின் ஆளுமைக்கு முதற்காரணமாக அமைந்தது திருவருளால் வாய்க்கப்பெற்ற நாவன்மையே என்று கூறினால் அதில் மிகையொன்றுமில்லை.

''தன்கடன் அடியேனையும் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே''

என்ற அப்பர் பெருமான் அடிச்சுவட்டை ஒட்டி வாழ்ந்த நாவலர் பெருமானை நினைவுகூரும் இந்நாளிலே அவர்கள் காட்டிய வழியிலே சிறிது சென்று சைவத்தையும் தமிழையும் பேணுவதற்குச் சங்கற்பித்துக் கொள்வோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*COMPLIMENTS*

*FROM*

**LANKA BLOCK MAKERS LIMITED**

**27, Peer Saibo Street,**

**Colombo–12.**

T'Phone : 28280 T'Grams : "LUCK BLOCK"

With the Best Compliments of

**M. VETHANAYAGAM**

**(DEALERS IN TEXTILES)**

**49, SEA STREET,**

**COLOMBO-11.**

Tel : 26241

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# NAGARAJAH CORPORATION

GENERAL MERCHANTS, HARDWARE DEALERS,
GOVERNMENT & ESTATE SUPPLIERS
&
TRANSPORT AGENTS.
[ Licensed Dealers in : CARTRIDGES & EXPLOSIVES ]

320, MAIN STREET,
PASSARA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

# KARNAT TEXTILES

**164, Keyzer Street,**

**Colombo-11.**

Telephone : 24742

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

↓

# SIVAYOGA JEWELLERS

54, SEA STREET,

COLOMBO-11.

T'Phone : 34954

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

V

SARATHA STORES
196, MAIN STREET,
COLOMBO-11.
Telephone : 21740

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

# S. P. PERIANNAPILLAI & CO.

**180, 2nd Cross Street,**

**COLOMBO-11.**

Telephone : 25738

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் நூற்றாண்டுப் பெருவிழா
இனிது நிறைவேற வாழ்த்துகிறோம் !

# சிவா ஏஜன்சீஸ்

105, மலே வீதி,
கொழும்பு 2.

BEST COMPLIMENTS

OF

# N. KULASEGARAM

140, WOLFENDHAL STREET

COLOMBO-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

K. M. SUPPIAH

43, New Moor Street,

COLOMBO-12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*BEST COMPLIMENTS*

*OF*

# Lanka Products Trades

21, St. JOHN'S ROAD,

**COLOMBO 11.**



With the best Compliments from

# M\s. RAJASINGHAM INDUSTRIES

(General Hardware Merchants-Government Suppliers & Importers)

*Manufacturers of :*

G. I. BOLTS & NUTS - M. S. BOLTS & NUTS - CRANK 'L' BOLTS & NUTS - HOOK 'J' BOLTS & NUTS - WASHERS - G. I. TANKS - IRON AND TYRE WHEEL BARROWS - WHEEL VALVES - GATE VALVES - STOP TAP - BRASS BRONZE AND COPPER RODS - IRON GATES - STEEL RACKS - BRASS COUPLINGS - FOOT VALVES ETC.

*Sales Centre* : No. 23, Quarry Road, P. O. Box 1839 Colombo.
*Office* : No. 105. Messenger Street, Colombo 12.
*Factory* : No. 414/10A K. Cyril C. Perera Mawatha Colombo 13.
*Telephone* : No. 35680
*Cable* : "GATEVALVES"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH THE COMPLIMENTS
OF

# Eswaran Brothers

Sole importers of

**" MATCHBOX "** toys
**" WADDINGTON'S "** Games & Puzzles
**" OMAX "** Swiss Wrist Watches

267, SEA STREET,
**COLOMBO 11**
Telephone : 32599

*Centrally Air Conditioned*

*Star Class*

# HOTEL ASHOK

**JAFFNA**

*Opening in Winter 1979*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS

FROM

# PR. SUBBIAHPILLAI & CO.

37, ST. JOHN'S ROAD,

PETTAH—COLOMBO-11.

Phone: 20482

UNIVERSITY OF JAFFNA LIBRARY

Best Compliments from

★

# S. Sanmugampillai & Sons

No. 3 & 5, ST. JOHN'S ROAD,

COLOMBO-11.

Phone: 27131

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

# S. PONSINGH & BROS.

DEALERS IN FOODSTUFFS & EXPORTERS
OF ALL CEYLON PRODUCTS

42, GABOS' LANE,
COLOMBO-11.

Telephone : 21765
26407

Cable : DATESKING
Colombo

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST
COMPLIMENTS
OF

# Soosai Mariyan Fernando & Sons

Dealers in Import & Local Dryfish
**48, 4th Cross Street,**
**COLOMBO 11.**

T'Phones : 28863

With the Best Compliments

of

# STANLEY PRESS

PRINTERS & STATIONERS
**30, New Chetty Street,**
**COLOMBO 13.**

T'phone : 25137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

ANANDHA STORES

Direct Importers & Wholesale Dealers in Groceries & Oilman Goods

No. 105, Bankshall Street,

COLOMBO-11.

T'Phone : 27643

Cable ; "VINAYGAR"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

**JAYA TRADING CO.**

**64, Dam Street,**

**Colombo-12.**

Phone : 36473

WITH BEST COMPLIMENTS

FROM

PETTAH ESSENCE SUPPLIERS

**18/1, Dam Street,**

**Colombo-12.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments from

# M. M. SAMSUDEEN

CUSTOMS CLEARING & FORWARDING AGENTS

180/20, GRANDPASS ROAD,

COLOMBO-14

Telephone : 35411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Best Compliments of

★

OPATHA & CO.

13—15, ST. JOHN'S ROAD,

COLOMBO-11.

WITH THE COMPLIMENTS

FROM

★

Sri Murugan Traders

*General Merchants*

No. 25, ST. JOHN'S ROAD,

COLOMBO-11.

T'Phone: 31503

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With the Best Compliments*

*of*

# NEW SARASWATHY'S

THE LEADING TEXTILES PALACE OF THE CITY

**162, Main Street,**

**Colombo-11.**

T'Phone : 23361

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

**The Burma Teak Trading Co. Ltd.**

No. 62, K. Cyril C. Perera Mawatha,
COLOMBO-13.

Telephone : 22433 — 34

BEST COMPLIMENTS

OF

**Praba Trading Co.**

Dealers in Camphor Tablets, Nepthalin Balls, Essences,
Colouring & Bakery Requirements.

**31, 31 A GABOS' LANE,**
**COLOMBO-II.**

Telephone : 29426

Telegrams : PRABACO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*of*

# NEW DEEPHAMS

**NO. 204 1/1, MAIN STREET,**

**COLOMBO-11.**

Phone : 27842

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

N. SANGARAPILLAI & SON

11, ST. JOHN'S ROAD,

COLOMBO-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சினைக் கவர்ந்த இரு அஞ்சல்கள்

— து. சிவசுந்தரம் —

## சென்ற தலைமுறையின் வழிகாட்டலும்............

11-2-57

அன்பும் பிரியமுமுள்ள மகனுக்கு எழுதிக் கொள்ளுவது. உன்னுடைய 10ந் திகதிக் கடிதம் கிடைத்தது. பார்த்து அளவில்லா ஆனந்தம் அடைந்தேன்.

நேற்று உன்னுடைய 23வது பிறந்த தினம் என்று நன்கு ஞாபகமிருந்தது. அதற்காக வாழ்த்தொன்றை அனுப்புவோம் என்று இருந்தேன். அவையெல்லாம் ஒரு சமயம் உனக்குப் பிடிக்காமல் இருக்குமோ என்று தான் உடன் எழுதவில்லை.

எல்லாம் வல்ல இறைவன் அருளாலும் குருநாதனின் திருக்கடாட்சத்தாலும் உனக்கு நீண்ட ஆயுளும் செல்வமும் சகல பாக்கியமும் உண்டாவதாக!

உலகம் என்பது உயர்ந்தோர்மாட்டே என்பது தமிழ் மறை வாசகம் சமூகம் சிறப்புற வேண்டுமா, நாடு செழிக்க வேண்டுமா அந்நாடும் மக்களும் பெருமையடைவது அதன் மக்களால் இவர் எங்கு கற்றவர் என்றால் அதன் பெருமை உன்னாலும் புகழ் அடையக் கூடியதாக நடந்து கொண்டால் அந்த ஸ்தாபனத்திற்கும் பெருமை. யாழ்ப்பாணம் பெருமை யடைந்தது நாவலர் பெருமான் அவர்களால் இந்தியா பெருமை அடைவது எதனால், சுவாமி விவேகானந்தர், மகாத்மா ஜீ நேரு அவர்களால். அவர்களும் பெருமை அடைவது பழம் பெருமக்களும் அவர்கள் கொள்கைகளும் சிறந்த நூல்களும் காரணமாகவே. நீயும் அந்தப் பெரும் மக்களின் வழிவந்தவன். ஆகையால் நீயும் கற்கும் நேரத்தில் குருசிஷ்ய பரம்பரை யோடு கற்க வேண்டும். தாயிடம் குருபுத்திரன் போல்நடந்து கொள்ள வேண்டும். தங்கை தம்பியிடம் இராமர் இலட்சுமணரைப் பின்பற்றி நடக்க வேண்டும். விவேகானந்தரும், பழையகால மாணாக்கர்களும் காப்பாற்றிய பிரமச்சரியம், வாழ்க்கையில் மணவினை காலம் வரை நன்கு காக்க வேண்டும், தைரியம் புருஷலட்சணம் அதைக் கைவிடாது வாழக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சுபம்

இங்ஙனம்
உனது அன்புத் தந்தை

## இன்றைய தலைமுறையின் முயற்சியும்

15-12-1967

உயர்திரு சி. என். அண்ணாதுரை அவர்கள்
தமிழக முதல் அமைச்சர்
சென்னை-9.

அன்புடையீர்!

3-1-1968 தொடங்க இருக்கும் இரண்டாவது அனைத்துலக தமிழ் மகாநாடு நிகழும் நாட்களில் சென்னையில் வைக்கப் பெறுவதாக உள்ள தமிழறிஞர் சிலைகளின் விபரத்தை இம் மாதம் 5ம் திகதி 'இந்து' செய்தித்தாளில் கண்ணுற்றோம்.

நாட்கள் மிகக்குறைவாக இருப்பினும் ஒரு விண்ணப்பத்தைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறோம். இதற்குத் தங்கள் ஒப்புமையை நல்குவீர்களாயின், இலங்கை இந்திய செய்தித் தாள்கள், கலைஞர்கள் பொதுமக்கள் ஆகியோரின் உதவியுடன் உரிய செலவைச் சேகரித்து விடலாம். என்பது எமது உறுதியான நம்பிக்கையாகும்.

சங்க காலத்திற்குப்பின்னுள்ள காலத்தில் வாழ்ந்த தமிழறிஞர்கள் வரிசையில் சேர்க் கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் பல ஈழத் தமிழர்களின் பெயர்களும் இடம் பெறும் என்பது தாங்கள் அறிந்த ஒன்றே. இப்பெரு மக்கள் பலருள்ளும் 19ம் நூற்றாண்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றி, தமிழ் உரைநடையின் தந்தை எனப் போற்றத் தகும் வண்ணம் நூல்கள் இயற்றியும் பழைய நூல்கள் பலவற்றிற்கு உரையெழுதியும், தொன் நூல்களை நன் முறையில் அச்சிட்டும் பள்ளிக்கூடங்களை நிறுவியும் தமது பிரமச்சரிய மயமான வாழ் நாள் முழுவதையும் தமிழன்னையின் முன்னேற்றத்திற்காகத் தியாகம் செய்த நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம். இப்பெருமகன் தமிழகத்திலும் சிதம்பரத்திலும் அச்சகம், பள்ளிக்கூடம் ஆகியவற்றை நிறுவி தமிழ்த் தொண்டு ஆற்றியதைத் தமிழக இலக்கிய வரலாறு போற்றிப்புகழும் இத்தகைய நற்பண்புகள் நிறைந்த பேரறிஞருக்கும் சிலை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் இவ்வாறு செய்வதால் இலங்கை வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்களின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பதும் ஆகும்.

இவ்வேண்டுகோள் குறித்த தங்கள் கருத்தை அறிந்ததும் இம்முயற்சியில் மிக ஊக்கமாக ஈடுபட எண்ணியுள்ளோம். இது பற்றிய செய்தியையும் அதன் பின்னரே செய்தித்தாள்களுக்கும் கொடுக்க விரும்புகின்றோம்.

எனவே தங்கள் மறுமொழியை உடன் அனுப்பி வைக்கக் கோருகின்றோம்.

× — ×

(நடைமுறைத்தமிழ் இயக்கத்தின் சார்பில் எடுக்கப் பெற்ற இம்முயற்சியின் பயனாக, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை என்ற அமைப்பு ஒன்று உருவாகி, யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் சிலை நிறுவப் பெற்றதுடன் நாவலர் ஐயா அவர்களின் பெருமையை அறியவும், பரப்பவும் பெருமளவில் காரியங்கள் நடைபெறுவது அனைவரும் அறிந்ததே. விரைவில் தமிழகத்தில் (மதுரையில்) நடக்கவுள்ள தமிழாராய்ச்சி மகாநாட்டில். தமிழகத்திலும் நாவலருக்கு ஒரு சிலை நிறுவும் சூழ்நிலை ஏற்படும் என நம்புவோமாக!)

With the Best Compliments

of

University of Jaffna
162579
Library

RAJENDRA STORES

5 and 6 Super Market
KOLLUPITIYA
COLOMBO 3

Tel: 20657

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS OF

# S. P. N. & Company

General Merchants and Commission Agents
Importers & Exporters
181/185, Keyzer Street,
COLOMBO 11.

Grams : "ESPEYEN" Phone : 20615

*With Best Compliments*
*from*

# A. S. P. SIVAN PILLAI

Importers, General Merchants & Commission Agents
214, Keyzer Street,
COLOMBO-11.
Phone : 21693

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS
FROM

SRI MANIMALAR STORES
Dealers in Gunny Bags
157/2, Sri Kathiresan Street,
Colombo-13.

UNIVERSITY OF JAFFNA
LIBRARY

*With the Compliments*
*of*

CORONA T STORES LTD.
[ BLENDERS & WAREHOUSEMEN ]
SRI LANKA PRODUCE

Phone : 94039
92136

24, FOSTER LANE,
COLOMBO-10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the best Compliments from

# MIRANDO INDUSTRIES

*Manufacturers of*

**BEAUTICURA**

**TALCUM POWDER**

*The Talc Lasts Longer*

Phone : 32412

Grams : Beauticura

With the Best Compliments

of

# SUMATHYS

Dealers in Quality Textiles

**86/10, Keyzer Street,**

**COLOMBO-II.**

Phone : 24507

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BEST COMPLIMENTS

OF

↓

# P. S. U. FERNANDO

**24, J. E. Gunasekera Avenue.**

**COLOMBO 10**

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

*Best Compliments of*

↓

# Kumaravel Co.

**217, 5th CROSS STREET,**

**COLOMBO-11.**

162579

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Compliments from*

# V. Selladurai & Sons

General Merchants & Commission Agents

**14, MAYURI LANE,**

**COLOMBO-11.**

Telephone : 36932



With the Compliments of

# MERCANTILE CREDIT LTD.

(An Approved Credit Agency)

**"Mercantile House", 51-53, Janadhipathi Mawatha,**
**COLOMBO-1.**

P. O. Box 1166
Telephone: 26611-9

Telegrams : "MERCREDIT" Colombo
Telex : 1138 Colombo (Vavalex)

*Branches :*

2, Harischandra Mawatha, Anuradhapura Telephone : Anuradhapura 534
11/8, Stanley Road, Jaffna Telephone : Jaffna 321
27-1/1, Dharmapala Mawatha, Matara Telephone ; 041-2466
901 A, Peradeniya Road, Kandy Telephone : 08-4196



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

OF

UNIVERSITY OF JAFFNA ★ LIBRARY ★

ARCHIVES

# VICTORIA BAKERY LTD.

148, Justice Akbar Mawatha,

COLOMBO-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WITH BEST COMPLIMENTS

FROM

UNIVERSITY OF JAFFNA LIBRARY

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

Donted by:-
PRO. ILASAPATHY

# NEDIMPEX ASSOCIATES

**274, SEA STREET,**
**COLOMBO-11.**

Telephone : 31940
35292

Telex : 1349
Telegram : "NEDIMPEX"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With the Best Compliments

from

# RAJAH CORPORATION

Importers, General Merchants & Commission Agents

**No. 58, 60 & 62, DAM STREET,**

**COLOMBO-12.**

Phone : 3'4 5 2 5 Grams : "GREEN WATER"

*Branches :*

VAVUNIYA
KILINOCHCHI
JAFFNA

Printed at The Kumaran Press, 201, Dam Street, Colombo-12 and Published by the Sril
Arumuga Navalar Sabai. 4 Horton Terrace Colombo-7. Editor-in-Charge : N. SOMAKAND

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org